விலை : 20.00
பக்கங்கள் : இருபது

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com


ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 ஆவணி 20 வெள்ளிக்கிழமை (05.09.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 260

## இலங்கை அரசின் அனுமதியின்றி

# விக்னேஸ்வரன்-மோடி சந்திக்க முடியாது!

## அமைச்சர் ஹெகலிய அறிவிப்பு



(கொழும்பு)

*வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க வேண்டுமானால் அவர் அதற்கான அனுமதியை இலங்கை அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்வது அவசியம் என்று அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.*

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிப்பதற்காக நேற்று வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் உரையாற்றியபோது அவர் இவ்வாறு

19 ஆம் பக்கம் பார்க்க....



### தற்கொலைகளில் இலங்கை முன்னணி

(கொழும்பு)

உலகில் அதிகளவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில இலங்கை முன்னணி வகிக்கின்றது.

172 நாடுகளில் ஆய்வு நடத்தப்பட்டு உலக சுகாதார ஸ்தாபனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. உலகில் அதிகளவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில் இலங்கை நான்காம் இடததை வகிக்கின்றது.

20 ஆம் பக்கம் பார்க்க....

### வாகன விபத்தில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

கைதடிச் சந்தியில் நேற்று வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்தார். கைதடிச் சந்தியில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ஹன்ரர் வாகனம் மீது வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணித்த இருவரும் படுகாயமடைந்தனர். உடனடியாக அவர்கள் இருவரும் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு எடுத்துச்

20 ஆம் பக்கம் பார்க்க....

## தமிழர்களுக்கான வெளி உதவிகளில் அரசியல் சாயத்தை பூசுகிறது அரசு

### முதலமைச்சர் விக்னேஸ்வரன் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

யுத்தப் பாதிப்புக்களில் இருந்து மீள்வதற்கு எத்தணிக்கும் தமிழ் மக்களுக்கு வெளிநாடுகளில் இருந்து வரும் உதவிகளை இந்த அரசாங்கம் அரசியல் சாயம் பூசி கொச்சைப் படுத்துகின்றது என்று வட மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன குற்றம் சுமத்தியுள்ளார்.

வெளிநாடுகளில் உதவிகள் யுத்தப்பாதிப்புக்கு உள்ளாகியுள்ள தமிழ் மக்களுக்கே அவசியம். தென்னிலங்கையினைச் சேர்ந்தவர்களுக்கு அல்ல என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.


அமெரிக்க அரசாங்கத்தில் நிதியுதவியுடன் யுஎஸ் எயிட் நிறுவனத்தின் மீள்குடியேறிய மக்களின் நலனுக்காய் பணியாற்றல் திட்டத்தின் கீழ் 3.3 மில்லியன் ரூபாய் செலவில் காக்கைத்தீவில் அமைக்கப்பட்ட கூறுவிலை மண்டபத்தின் திறப்புவிழா நிகழ்வு நேற்றுக் காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு கூறுவிலை மண்டபத்தினை திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் உரை

19 ஆம் பக்கம் பார்க்க....

## நிலக்கடலை பிரித்தெடுக்கும் இயந்திரம் முல்லைத்தீவு மாவட்டத்தில் அறிமுகம்



(முல்லைத்தீவு)

நிலக்கடலைச் செடியில் இருந்து நிலக்கடலைகளைப் பிரித்தெடுக்கும் இயந்திரங்களின் சேவையை வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நேற்று முன்தினம் புதன்கிழமை முல்லைத்தீவில் ஆரம்பித்து வைத்துள்ளார்.

நிலக்கடலைச் செடியில் இருந்து நிலக்கடலைகளைப் பிரித்தெடுப்பதில் ஏற்படும் கால விரயத்தையும்

19 ஆம் பக்கம் பார்க்க....

## ஜனாதிபதித் தேர்தல் சர்ச்சை

### விளக்குகிறார் சுமந்திரன் எம்.பி

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலை 2016 ஆம் ஆண்டு வரை நடத்த வேண்டிய தேவை சட்டத்திலே கிடையாது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தை பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம், கொழும்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜனாதிபதியுடைய பதவிகாலம் 2016ஆம் ஆண்டே நிறைவடையவுள்ளது. இந்நிலையிலே பல எதிர்பார்ப்புகளை குழப்புவதற்காகவோ அல்லது வேறு எதற்காகவோ உயர் நீதிமன்றத்தின் முன்னாள் நீதியரசர் சரத்என்சில்வா புதியதொரு கருத்தை முன்வைத்துள்ளார்.

18-வது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் ஏற்கெனவே ஜனாதிபதியாக இருந்த ஒருவர் 3-வது தடவையாக

19 ஆம் பக்கம் பார்க்க....

### கோண்டாவிலில் கைக்குண்டு மீட்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் இந்து கல்லூரிக்கு பின்புறமாக கைக்குண்டு ஒன்று நேற்றுமுன்தினம்புதன்கிழமை இராணுவத்தினரால் மீட்கப்பட்டுள்ளது.

பொது மக்கள் கைக்குண்டு தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கியதைத் தொட

19 ஆம் பக்கம் பார்க்க....

## சர்வதேச விசாரணையில் சாட்சியமளிக்க தயார்-சரத்



(கொழும்பு)

மனித உரிமை மீறல்கள் சம்பந்தமாக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக நடத்தப்படவுள்ள சர்வதேச விசாரணையின் போது சாட்சியமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் அதனை ஏற்க தான் தயாரென முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொனசேகா தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணை ஒன்றுக்காக கொழும்பு மேல் நீதிமன்றத்துக்கு வந்திருந்த போதே முன்னாள் இராணுவத் தளபதி இவ்வாறு கூறினார்.

தான் தலைமை வகித்த இராணுவம் சர்வதேச சட்ட விதிமுறைகளுக்கு அமையவே யுத்தத்தில் ஈடுபட்டதாகக் கூறிய சரத் பொனசேகா, வெள்ளைக் கொடிகளை ஏந்தி வந்தவர்களை சுட்டுக் கொல்லுமாறு தான் உத்தரவுகளை பிறப்பிக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இவ்வாறான விசாரணை ஒன்றுக்கு

19 ஆம் பக்கம் பார்க்க....

IELTS
Hurry Up-Classes start from september 6th, 2014
Venue: Jaffna-Point Pedro Road, Puttur
(Just Opposite to Sri Somas Kanda College)
ROY, SIR (Senior Lecturer, Colombo)
❖ Assured Band Scores with Latest Materials & Informations
❖ TIPS & Guidance that you will value
❖ Individual Attention ❖ Complete in 6 weeks
(7584)
Contact:-0773233181, 0750416757, 0755341201

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

30ம் ஆண்டு நிறைவில் குருத்துவ வாழ்வு வாழ்ந்து வரும் எமது ஆத்மகுருவிற்கு வாழ்த்துக்களும் வணக்கங்களும்



சைவசித்தாந்த பண்டிதர் சிவாகம உபதேச
வாசஸ்பதி சிவாகமவித்தியா பூசணம்
**சிவஸ்ரீ.தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்**
(B.A.Dip.in.Edu, M.A.)
(பிரதியதிபர் யா/அம்பன் அ.மி.த.க. பாடசாலை)

உலகாண்ட நாயகியாய் காட்சிதந்தாய்
உக்கிரமமாய் தாண்டவமும் ஆடிக்கொண்டாய்
சிலகாலம் சிவன்நோக்கி நிட்டை கொண்டாய்
சீடர்களுக்கு அபயகரம் நீட்டிநின்றாய்
பலவாய தருமங்கள் போதித்தாண்டாய்
பக்குவமாய் என்பாச வினை நீக்கினாய்
நலம்சேரும் சோமாஸ்கந்தராஜ தரிசனம் தனை
அருளோடு பொருள் கொண்டு ஆண்டாயே

நெல்லண்டை
பத்திரகாளியம்மன்
தேவஸ்தானம்
T.P :- 0776202716

இங்ஙனம் : கெழுதகை நண்பன்
சிவத்திரு.தம்பு.இராமச்சந்திரன்
வில்வளை. பிரத்தியங்கிரா காளிகா
தேவஸ்தானாதிபதி.

(C-8414)

# காணவில்லை

செல்வராசா புஸ்பராசா என்பவருடைய மோட்டார் சைக்கிளின் ஆவணங்களுடன் பேஸ் ஒன்று கந்தரோடைக்கும் யாழ். நல்லூருக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

**தொடர்புக்கு : 0771099306**

(7591) **வேலவன் மிக்ஷர், நல்லூர்.**

# கடை வாடகைக்கு

பருத்தித்துறை நகரில் கடை ஒன்று வாடகைக்கு உண்டு.

தொடர்பு
**0771745178**

(C-8402)

# வேலை வாய்ப்பு

நீங்கள் சந்தைப்படுத்தல் துறையில் ஆர்வமுள்ளவரா!....

யாழ் நகரில் சந்தைப்படுத்தல் துறையில் மாதாந்தம் 25000/- இற்கு மேல் அதிகமான வருமானத்தைப் பெறக்கூடிய அரிய வாய்ப்பு! நழுவ விடாதீர்கள்!

கல்வித்தகைமை அவசியமில்லை

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
எண்:- 077 011 1032, 077 011 1034

(சி-8399)

# CIMA

Chartered Institute of Management Accountants
@
**ACCTECM**

Lecturer from Colombo & Kandy

No.01, 2nd lane, Power house Road, Jaffna.

T.P:021 221 7733/0779895183

(7576)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
0213210815,0215671532
valampurii@yahoo.com

# ஆங்கிலத்திற்கு No.1 பயிற்சி மையம்

A/L தோற்றிய மாணவர்களுக்கான விசேட பிரிவுகளுடன்

**veta**
Experts in English Training



ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க யாழில் பெருமளவு மாணவர்கள் தெரிவு செய்யும் ஒரே ஒரு முழுமையான ஆங்கிலக்கற்கைநெறி.

**Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பம்.**

| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| Sat, Sun 7.00 a.m. | Mon, Fri 9.30 a.m. | Mon, Wed, 9.30 a.m. | Sat, Sun 3.30 a.m. |
| Tue, Thu 9.30 a.m. | Sat,Sun 3.30 P.m. | Sat, sun, 2.30 p.m. | Tue,Thu 8.00 p.m. |
| Mon, Fri 9.30 a.m. | | | |

சர்வதேச ஆங்கில பரீட்சைகள்

DMI COMPUTER EDUCATION

A1-Exam B1-Exam திருமணம் செய்து நிரந்தர விசாவில் UK செல்பவர்களுக்கானது.

IELTS
• Unique Test Tips
• Latest course Materials

DMI, British Council இன் அங்கீகரிக்கப்பட்ட IELTS பரீட்சை பதிவு மையம் ஆகும்

(சி-8411)

**DMI INTERNATIONAL ENGLISH COLLEGE**


| யாழ்ப்பாணம் | நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் |
|---|---|---|---|
| No.113, கஸ்தூரியார் வீதி, (சயன்ஸ் ஹோல் அருகாமை) Tel.: 021-222 4403 | M.M.V வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) Tel.:021-226 2470 | கண்டி வீதி, (HNB அருகில்) Tel.:021-227 0775 | கே.கே.எஸ். வீதி, No 130, (NSB வங்கி அருகில்) Tel.:021-224 1970 |

தற்போது யாழ் நகரில்... edexcel UNIVERSITY OF WOLVERHAMPTON

## சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்

UK Degree in
- Marketing
- Business Management
- Human Resources Management

- பகுதி நேர முகாமைத்துவ கற்கை நெறியொன்றில் பட்டமொன்றை பெற்றுக் கொள்வதற்கும்
- தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் தொழில் புரிந்து கொண்டே பாடநெறியைத் தொடர்வதற்கும்
- உங்கள் தொழில் தகைமையினை மேலும் கூட்டிக் கொள்வதற்கும்
- பட்டப்படிப்பினை யாழ்ப்பாணத்திலேயே நிறைவு செய்து கொள்வதற்கும்
- இலகு தவனை கட்டண முறையில் உங்கள் கட்டணங்களை மேற்கொள்வதற்கும்
- நவீன கற்றல் சூழலில் உங்கள் உயர் கல்வியினை தொடர்வதற்கும் ஓர் அரிய வாய்ப்பு



பதிவு செய்யும் முதல் 25 மாணவர்களுக்கு ஆரம்பக் கட்டணம் இலவசம்

www.bcas.lk | ISO 9001:2008 CERTIFIED | 14 Years of Trust & Excellence in Higher Education

16, Point Pedro Road, Jaffna.
021 221 9910 / 077 710 2131


BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

Building Careers - Transforming Lives

(சி-8406)

Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

# மரண அறிவித்தல்



## ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா

(விரிவுரையாளர் சமஸ்கிருதத்துறை யாழ்.பல்கலைக்கழகம்,
நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகை சமேத கைலாஷநாதஸ்வாமி ஆலய குரு)

துன்னாலை வடக்கை பிறப்பிடமாகவும் நல்லூர் சிவன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்தசர்மா அவர்கள் நேற்று (2014.09.04) வியாழக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் ஸ்ரீபதிசர்மா-லஷ்மி அம்மா ஆகியோரது அன்பு மகனும், ரவிச்சந்திரிகா (முன்னாள் ஆசிரியை யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி) அவர்களின் அன்புக் கணவரும், பிரம்மஸ்ரீ சுந்தரேஸ்வர ஐயர்- மங்களகௌரி தம்பதிகளின் மருமகனும், பத்மநாயகி அம்மா, பரமேஸ்வரி, சரஸ்வதி, சச்சிதானந்தசர்மா, அமுதாம்பாள், கமலாம்பாள் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (2014.09.05) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் கியன்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை வடக்கு,
கரவெட்டி.
0212263808

தகவல் : மனைவி -
ரவிச்சந்திரிகா கிருஷ்ணானந்தசர்மா
மற்றும் சகோதரர்கள்.

(சி-8412)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலகியவர்களை இணைக்க ஐ.தே.கட்சியின் விசேட குழு

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகியவர்களை மீள இணைத்துக்கொள்ள விசேட குழுவொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுத்து கட்சியிலிருந்து நீக்கப்பட்டவர்களை மீள இணைத்துக் கொள்ளும் நோக்கில் இவ்வாறு மேன்முறையீட்டு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. உரிய விளக்கத்தை அளித்து கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் மீள இணைந்து கொள்ள முடியும் என கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் கருணாசேன கொடித்துவக்கு தலைமையில் இந்தக் குழு நிறுவப்பட்டுள்ளது. (இ)

# எரிபொருள் நிரப்பும் போது திடீரென தீப்பற்றிய ஆட்டோ

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கல்வியங்காடு சந்தியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்பச் சென்ற முச்சக்கர வண்டியொன்று தீப்பற்றி எரிந்ததில் சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியை சேர்ந்த ரி.சிவதர்சன் (வயது 24) என்பவரே எரிகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

முச்சக்கரவண்டிக்கு எரிபொருள் நிரப்பும் போது, திடீரென தீப்பற்றியது.

இதன்போது, அங்கு நின்றவர்கள் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

சம்பவத்தில், குறித்த முச்சக்கரவண்டிக்கு பாரிய சேதம் ஏற்படவில்லை என்ற போதிலும் அதன் சாரதி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ)

CIMA
Chartered Institute of Management Accountants
@ Wisdom
021 2220727 | 021 7200777

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# இலங்கைத் தமிழரசுக் கட்சி

## 64ஆவது ஆண்டு நிறைவில்

## 15ஆவது தேசிய மாநாடு 05, 06, 07 – 09 – 2014 – வவுனியா பொதுக்கூட்ட அழைப்பு

"ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

வள்ளுவன்.

மனிதனின், மக்கள் சமுதாயத்தின் ஒழுக்கமே உலகில் உயர்ந்த நாகரிகமாகும். அதன் அர்த்தம் தன் தாய்மொழி, பண்பாடு, நிலம் விடுதலை பெற்றதாய் ஆளும் உரிமை பெற்றதாய் விளங்குவதேயாகும். அந்த மக்களின், இனத்தின், நாட்டின் வாழ்வும், வளமும் ஆகும். அதுவே உயர்ந்து மாண்புறும் நாகரிகமாகும்.அதனைப் பேணிப் பாதுகாப்பதற்காகவே உலகில் ஒவ்வொரு உயிரும் போராடிக் கொண்டிருக்கிறது. அல்லது அந்த இனம் அழிந்து விடும். வரலாறு அற்றுப் போகும்.

எறும்பும் கூடத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவே கடித்துத் தப்பித்துக் கொள்கிறது. "சிற்றெறும்பால் யானை சாகும்" என்பார்கள். அது வன்முறையல்ல.

எனவே அந்த ஒழுக்கத்தை, நாகரிகத்தைப் பேணிப் பாதுகாப்பதற்கே உயிர் கொடுத்துத் தம்மை அர்ப்பணிக்கிறார்கள், தியாகம் செய்கிறார்கள். அதற்காகவே உயர் நாகரிகத்தை அடைவதற்காகவே இலட்சோப இலட்சம் மக்கள் மனிதம், உயிர்கள் எம். தமிழ் மண்ணில் விதைக்கப்பட்டிருக்கிறது. அந்த உயர்ந்த தியாகம் எம் இனத்தின் விடுதலைக்கு வித்தாகிறது.

அதன் விளைவு எம் மண்ணின், மக்களின் விடுதலையே தான்.

"துன்பத்தை விளைவிப்பவர்களல்ல, அந்தத் துன்பத்தைத் தாங்கும் சக்தி கொண்டவர்களே ஈற்றில் வெற்றிபெறுவார்கள்" என்று பிரிட்டிஷ் சிறையில் சாவின் விளிம்பில் இரத்தத்தால் எழுதி வைத்தான் ஐரிஸ் தேச பக்தன் மைக்ஸ் வைனி.

எம் தமிழர் தேசம், தமிழினம் ஈற்றில் வெற்றி பெறும்.

அந்த ஒழுக்கமே, உயர்ந்த நாகரிகமே உயிரினும் மேலானதாகும். அந்த நாகரிகமே வரலாறாகும்".

மாவை.சோ.சேனாதிராசா

காலம் :- 07 - 09 - 2014 ஞாயிறு பி.ப 4.00 மணி
இடம் :- வவுனியா நகர கலாசார மண்டப வளாகம்
நிகழ்ச்சிகள்
1. வரவேற்பு நடனம் 2. வரவேற்புரை
3. தலைமையுரை 4. மாநாட்டுத் தீர்மானங்களும் பிரகடனங்களும்
5. தலைவர்கள் உரை

- திரு. இரா. சம்பந்தன், பா.உ
- திரு. மாவை. சோ. சேனாதிராசா, பா.உ
- திரு. பொன். செல்வராசா, பா.உ
- திரு. செல்வம் அடைக்கலநாதன், பா.உ
- திரு. க. சுரேஸ் பிரேமச்சந்திரன், பா.உ
- திரு. த. சித்தார்த்தன், வ.மா.உறுப்பினர்
- திரு. ஹசன் அலி, பா.உ
- திரு. மனோ கணேசன் மே. மா. உறுப்பினர்
- கலாநிதி. விக்ரமபாகு கருணாரத்தின மா. நகர உறுப்பினர்

6. சிறப்புரை : நீதியரசர்,சி.வி.விக்னேஸ்வரன்,
முதலமைச்சர் வடக்கு மாகாணசபை

மற்றும் உயர் நீதிமன்ற வழக்கறிஞர்கள், நல்லாட்சிக்கான மக்கள் இயக்க பிரதிநிதிகள், மலையகப் பிரதிநிதிகள், தன்னார்வ நிறுவனங்களின் இயக்குநர்கள் மற்றும் த. தே. கூட்டமைப்பு பா.உ பிரதிநிதிகள், மாகாணசபைகளின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்களின் பிரதிநிதிகள் வாழ்த்துரைகளும் இடம்பெறும்.தமிழரசுக் கட்சி மாநாட்டுத் தீர்மானங்கள் அரசியல், சமூக, பொருளாதாரம் மற்றும் மீள்குடியேற்றம், இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பு, பெண்கள் பாதுகாப்பு, காணாமற்போனோர் முதலான விடயங்களில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மீதான உரைகளும், பிரகடனங்களும் உரைகளில் இடம்பெறும்.
பி. ப 7.30க்கு கலைநிகழ்ச்சிகள், பண்டார வன்னியன் நாடகம் இடம்பெறும்.
இம்முக்கியத்துவம் வாய்ந்த மாநாட்டுப் பொதுக் கூட்டத்திற் பங்குகொள்ள அணிதிரண்டு வந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

"எங்கள் தேசமக்கள் சுதந்திரம் – அந்த
விடுதலை விடியலுக்காய் ஒன்றுபடுவோம்"

| மாவை. சோ. சேனாதிராசா | மருத்துவ கலாநிதி. ப. சத்தியலிங்கம் |
|---|---|
| பொதுச் செயலாளர் | வரவேற்புக் குழுத் தலைவர் |

C–8407.

# இராசி பலன்

05.09.2014
ஆவணி 20, வெள்ளிக்கிழமை
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
ஏகாதசி மாலை 5.49 மணிவரை
பூராடம் முற்பகல் 11.36 மணிவரை
இராகுகாலம் 10.35-12.05 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
பரிவர்த்தன ஏகாதசி விரதம்

வளவன்

**மேடம்** ஆரோக்கியத்தில் இருந்த குழப்பங்ஙகள் தீரும், வருமானம் திருப்தி தரும், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வழிபாட்டில் ஈடுபாடு காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** குடும்பப் பொறுப்புக்கள் அதிகரிக்கும், உறவினர்களிடம் பேசும் போது கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காணவேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், சடங்கு சம்பிரதாயங்களில் நம்பிக்கை கூடும், கல்யாணக் கனவுகள் நனவாகும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** உறவினர்களின் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், வியாபார விருத்தியுண்டு, விழாக்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மருத்துவச் செலவுகள் குறையும், கௌரவமான நாள்.

**சிம்மம்** பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள், பிள்ளைகள் வழியில் சந்தோசமான செய்திகளை கேட்கலாம், பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு.

**கன்னி** கொள்கைப்பிடிப்போடு செயற்படுவீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பெற்றோர் மீது பிரியம் கூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்** நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், செய்தொழில் மேன்மையுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**விருச்சிகம்** சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**தனுசு** கனிவாக பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், உடல் நலம் சீராகும், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம், அம்பிகை வழிபாட்டால் இன்பம் காணவேண்டிய நாள்.

**மகரம்** உறவினர்களின் சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, திட்டமிட்ட காரியங்களில் திருப்பம் ஏற்படலாம், இறைவழிபாட்டுச் சிந்தனை அதிகரிக்கும், சஞ்சலங்கள் கூடும்.

**கும்பம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், எதிர்பார்த்த பண வரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**மீனம்** உற்சாகத்துடன் பணிபுரியும் நாள், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனுஸ்தீவு புகலிடக்கோரிக்கையாளர்கள் நாள்தோறும் முகாமில் குழப்ப நிலையில்

மனுஸ் தீவு புகலிடக் கோரிக்கையாளர் முகாம்களில் நாள்தோறும் குழப்ப நிலைமைகள் ஏற்பட்டு வருவதாக மனித உரிமை அமைப்புக்கள் குற்றம் சுமத்தியுள்ளன. அவுஸ்திரேலியரிவிற்கு புகலிடம் கோரி படகு மூலம் சென்றடையும் இலங்கையர்கள் உள்ளிட்ட புகலிடக் கோரிக்கையாளர்கள் மனுஸ் தீவுகளில் தடுத்து வைக்கப்படுகின்றனர். இவ்வாறு தடுத்து வைக்கப்படும் புகலிடக் கோரிக்கையாளர்கள் பல்வேறு துன்பியல் அனுபவங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுய காயப்படுத்தல்கள், தற்கொலை முயற்சிகள் உள்ளிட்ட பல்வேறு பாரிய சம்பவங்கள் மனுஸ் தீவு முகாம்களில் நாள்தோறும் பதிவாகின்றன. புகலிடக் கோரிக்கையாளர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக்கொள்ளல், பாதுகாவலர்களை தாக்குதல், தற்கொலை முயற்சி என பல்வேறு சம்பவங்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மனிதாபிமான ஆய்வு பங்காளர்கள் என்ற அமைப்பினால் இந்த தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தனிமைப்படுத்தப்பட்ட இடங்களில் தடுத்து வைக்கப்படுவதாக சுட்டிக் காட்டியுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகள் அவர்களின் உளவியல் சுகாதாரத்தைப் பாதிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுஸ் தீவுகளில் புகலிடக் கோரிக்கையாளர்கள் துன்புறுத்தப்படுவது குறித்து மனித உரிமை அமைப்புக்கள், ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் முறைப்பாடு செய்துள்ளன. (இ)

# அதிபரினால் தாக்குதலுக்குள்ளான மாணவர்கள் வைத்தியசாலையில்

(கொழும்பு)

கம்பஹா பகுதியில் பாடசாலை அதிபர் ஒருவரின் தாக்குதலில் காயமடைந்ததாக கூறப்படும் ஐந்து மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபரை கைது செய்வதற்கான விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

7, 8 மற்றும் 9 ஆம் ஆண்டுகளில் கல்வி பயிலும் 12 முதல் 14 வயதுக்கு இடைப்பட்ட மாணவர்கள் சிலரே அதிபரின் தாக்குதலுக்கு இலக்கானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்கப்பட்டமை தொடர்பில் மாணவர்களிடம் இருந்து வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (இ)

# ஊழலுக்கு எதிரானதொரு கூட்டணியை உருவாக்குக

(கொழும்பு)

ஊழலுக்கு எதிரான கூட்டணியொன்றை உருவாக்குமாறு டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல் அமைப்பு எதிர்க்கட்சிகளை கோரியுள்ளது. டிரான்ஸ்பரன்சி இன்டநஷனல் அமைப்பும், ஊழலுக்கு எதிரான கூட்டணியும் இணைந்து எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்த வேளையே இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளனர்.

அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் போன்றவற்றில் இடம்பெறும் ஊழல்கள் குறித்த விபரங்களை எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் கையளித்துள்ள ஊழலுக்கு எதிரான கூட்டணி ஊழல் காரணமாக உருவாகியுள்ள ஆபத்து முழு நாட்டையும் பாதிக்கக் கூடியது என குறிப்பிட்டுள்ளது.

உலக ஊழல் தரப்படுத்தல் சுட்டியில் இலங்கை கீழ் நிலைக்கு சென்றுகொண்டிருப்பதையும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது. இதனால் ஊழலை குறைப்பதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆற்ற வேண்டிய முக்கிய பங்குள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (இ)

# இராணுவ சிப்பாய் தீக்குளிப்பு; பொதுபல சேனா காரணமா?

## உறவினர்கள் சந்தேகம்

(கொழும்பு)

ஐ.நா. சபை மற்றும் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக இராணுவ சிப்பாய் ஒருவர தீக்குளித்து உயிரிழந்தமைக்கு பொதுபலசேன காரணமாக இருக்கலாம் என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பன்னிப்பிட்டிய கலகொட பிரதேசத்தைச் சேர்ந்த 72 வயதான பியசேன என்ற முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை தீக்குளித்து ஆபத்தான நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்ற நிலையில் மரணமடைந்தார்.

அதேவேளை தீக்குளிக்கும் எண்ணத்துடன் இந்த இராணுவ சிப்பாய் இருக்கவில்லை என்றும் வேறு நபர்களுடைய வற்புறுத்தலினால் தீக்குளித்திருக்கலாம் எனவும் உறவினர்கள் பொலிஸாரிடம் சந்தேகம் தெரிவித்ததாக கொழும்பு தகவல்கள் கூறுகினறன.

இராணுவச் சிப்பாயின் மரண விசாரணையின்போது உறவினர்கள் சந்தேகம் வெளியிட்டனர் என்றும் முழுமையான விசாரணை நடத்துமாறு கோரிக்கை விடுத்ததாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தீக்குளித்து காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது பொதுபலசேன உறுப்பினர்கள் சென்று பார்வையிட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பௌத்த மதத்தை பாதுகாக்குமாறு வலியுறுத்தி கண்டி தலதா மாளிகை வளாகத்தில் கடந்த ஆண்டு புத்த பிக்கு ஒருவர் தீக்குளித்து உயிரிழந்தமைக்கும் பொதுபலசேன காரணம் என குற்றச்சாட்டுக்கள் எழுந்தமை குறிப்பிடத்தக்கது. (இ)

# பாதிக்கப்பட்ட சமூகம் மீட்சி பெறுவதற்கு அமெரிக்காவின் முழுமையான ஆதரவு தொடரும்

## நம்பிக்கையுடன் முன்னேறுங்கள் என்கிறார் அன்ரூமன்

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சமூகம் கடந்த கால நிலைகளில் இருந்து மீட்சி பெறுவதோடு, தொடர்ந்தும் தமது எதிர்காலத்தினை நோக்கிய நம்பிக்கையினை பெற வேண்டும் என்று தெரிவித்துள்ள அமெரிக்காவின் இலங்கைக்கான தூதரகத்தின் பிரதித் தலைவர் அன்ரூமன் இலங்கை மக்களின் நலனில் அமெரிக்கா கொண்டுள்ள அக்கறையில் ஒருபோதும் மாற்றம் ஏற்படப்போவதில்லை என்றும் அவர மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

அமெரிக்க அரசாங்கத்தின நிதியுதவியுடன யு.எஸ்.எயிட் நிறுவனத்தினால் மீள்குடியேறிய மக்களின் நலனுக்காய் பணியாற்றல் திட்டத்தின் கீழ் 3.3 மில்லியன் ரூபாய் செலவில் காகைதீவில் அமைக்கப்பட்ட கூறுவிலை மண்டபத்தின் திறப்புவிழா நிகழ்வு நேற்று காலை 9.30 மணிக்கு நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர்மேலும்உரையாற்றுகையில்

என்னுடைய பதவிக்காலத்தில் நான் யாழ்ப்பாணத்திற்கு பலமுறை விஜயத்தினை மேற்கொண்டுள்ளேன். இன்று நான் மீண்டும் யாழ்ப்பாணம் வந்ததையிட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். என்னுடைய கடந்த கால விஜயங்களை நோக்கும்போது இங்கு பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை அவதானிக்கக கூடியதாக உள்ளது.

ஆனால் நான் பெருமையுடன் சொல்லிக் கொள்ளவேண்டிய ஒரு விடயம் உள்ளது. அன்றில் இருந்து இன்றுவரைக்கும் இலங்கை மக்களின் நலனில் அமெரிக்க அரசாங்கத்தின் ஆதரவு மட்டும் மாறவில்லை. உள்ளூர வர்த்தக நடவடிக்கையினை மேம்படுத்தும் வகையில்யு.எஸ்.எயிட்நிறுவனமும், யாழ்சமூக செயற்பாட்டு மையமும் இணைந்து 2 சன சமூக மண்டபங்களையும், ஒரு மீன்படி ஏல விற்பனை நிலையத்தினையும் இன்று (நேற்று) மக்களிடம் கையளிப்பதையிட்டு பெருமையடைகின்றேன்.

யுத்தத்தின் போது இப்பகுதிகள் முழுமையான அழிவுக்கு உள்ளாகியிருந்தது. அதே போன்ற இங்குள்ள மக்கள் தங்களுடைய சகல மீன்படி உபகரணங்களையும் இழந்திருந்தனர். எனவே யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வினை மீள கட்டியே முப்பும் நோக்குடன். மீன்பிடித்துறையினை மீளமைக்க வட மாகாண சபையும், யாழ்.சமூக செயற்பாட்டுமையமும், யு.எஸ்எயிட நிறுவனமும இணைந்து மீன்பிடித்துறையினை மேம்படுத்துவதை முன்னிலைப்படுத்தினார்கள்.


அததைவிட முக்கியமாக இது ஒரு சமூகத்தின் முயற்சியாக தொடர்ந்து இருக்கின்றது. இந்த கட்டடங்கள் இந்த சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தாய் தந்தையர்கள், சகோதரன், சகோதரிகளால் இணைந்து கட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக 800 மேற்பட்ட குடும்பங்கள் இந்த கட்டடத்தினை பல தேவைகளுக்கும் பயனபடுத்திக் கொள்ள கூடிய சந்தர்ப்பம் உள்ளது. அதுமட்டுமல்லாமல் இப்பகுதி மக்களை சுகாதார பராமரிப்பு தொடர்பாக விழிப்புணர்வுகள் ஏற்படுத்தவும், சிறுபிள்ளைகளின் ஆரம்பப்பாடசாலையாக மாற்றவும், குடும்பங்கள் தமது பொழுதுபோக்கிற்கான பயன்படுத்திக் கொள்ளவும் இக்கட்டடம் பயன்படும்.

புதிய ஏல விற்பனைக் கூடம் ஏற்கெனவே இருந்த தற்காலிக கூடத்திற்கு பிரதியீடு செய்கின்றது. தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த கூடாரம் ஏலம் விடப்பட்ட மீன்களையும், அதன் தரத்தினையும் மட்டுப்படுத்தியது. ஆனால் இந்த புதிய கட்டடம் மீனவர்களின் வருமான திறனை அதிகரிக்க உதவிபுரியும்.

மிக முக்கியமான எங்களுடைய உதவிகள் சாதாரண அன்பளிப்பு மட்டும் அல்ல. நாங்கள 19 மில்லியன் ரூபாய்களை 30 கண்ணாடி இழைப்படகுகளையும், வெளியிணைப்பு இயந்திரங்களையும், மீன்படி வலைகளையும், மிதவை மற்றும் உயிர்காப்பு அங்கிகளையும் மீனவர்களுக்காக வழங்கிய போது இது சமூகத்தின் மீதான மீள்முதலீட்டினை தூண்டுவதாக அமையும் என அவர் தெரிவித்தார்.(செ-4)

# கூறுவிலை கூறும் மண்டபங்கள் நான்கு இடங்களில் திறப்பு



(யாழ்ப்பாணம்)

யு.எஸ்.எயிட் நிறுவனம், யாழ்.சமூக செயற்பாட்டு மையத்துடன் இணைந்து யாழிலுள்ள நான்கு மீன்பிடித் துறைமுகங்களுக்கான மீன்களின் கூறுவிலை கூறும் மண்டபங்கள் மீள்குடியேறிய மக்களின் நலனுக்காக பணியாற்றுதல் என்னும் திட்டத்தில், 121 மில்லியன் ரூபாய் செயற்றிட்டங்களில் ஒன்றாக இந்த மண்டபங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

காக்கைதீவு, பொன்னாலை, மாதகல் கடற்கரைப்பகுதி மற்றும் மாதகல் மேற்கு பகுதிகளில் அமைக்கப்பட்ட மண்டபங்களே இவ்வாறு நேற்று திறந்து வைக்கப்பட்டன.

மேற்படி மண்டபங்களை யு.எஸ். எயிட் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் அன்ரூமன், வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் இணைந்து திறந்து வைத்தார்கள்.

மேற்படி திட்டம் கடந்த 2013ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் மேற்கொள்ளப்படவுள்ளது.

மேற்படி திட்டத்தின் கீழ், யாழ்.மாவட்டத்தில் சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பளை மற்றும் மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், கிளிநொச்சியில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவிலும் அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், மேற்படி திட்டத்தில் கிணறுகள், மலசலகூடங்கள் அமைத்தல், வாழ்வாதார உதவிகள் வழங்குதல், பொது நோக்கு மண்டபங்கள் அமைத்தல், கூறுவிலை மண்டபங்கள் அமைத்தல் உள்ளிட்ட செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (செ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் அழிக்கப்படவில்லை

## தமிழ் மக்கள் மீது எமக்கு பூரண நம்பிக்கை உள்ளது என இராணுவம் விளக்கமளித்தது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் இலங்கையில் மட்டுமே அழிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிடும் இராணுவம் சர்வதேச மட்டத்தில் விடுதலை புலிகளின் செயற்பாடுகள் தற்போதும் இயங்கு நிலையில் உள்ளதாகவும் புலிகள் இன்னும் முற்றாக அழிக்கப்படவில்லை என்றும் தெரிவித்துள்ளது.

சர்வதேச ரீதியில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இலங்கைக்கு பாரிய அச்சுறுத்தலாகும் என தெரிவிக்கும் இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தமிழ் மக்கள் மீது எமக்கு நம்பிக்கை உள்ளது. அவர்கள் தவறான பாதையை தெரிவு செய்ய மாட்டார்கள் எனவும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் அவுஸ்திரேலியாவில் மீள ஒருங்கிணைய முயற்சிப்பதாக இந்திய பத்திரிகை ஒன்றில் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகள் இலங்கைக்குள் இல்லை. யுத்த கால கட்டத்தில் இலங்கை பல அச்சுறுத்தல்களுக்கு முகம்கொடுத்த போதும் தற்போது தேசிய அளவில் இலங்கையில் பயங்கரவாத செயற்பாடுகள் எவையும் இல்லை. எனினும் விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்டிருப்பது இலங்கையில் மட்டுமே. சர்வதேச அளவில் இவர்களின் செயற்பாடுகள் இன்னமும் நடைபெற்று வருகின்றன. யுத்த கால கட்டத்தில் சர்வதேசத்தில் இருந்து இயங்கிய விடுதலைப்புலிகளின் அமைப்புகளும் அதன்



பின்னர் புலம்பெயர்ந்த தமிழர்களும் இன்று மேற்கத்தேய மற்றும் மத்திய நாடுகளில் இருந்து இலங்கைக்கு எதிராக செயற்பட்டு கொண்டிருக்கின்றனர். அவர்களின் செயற்பாடுகள் இலங்கைக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகவே அமைந்துள்ளது.

எனினும் இலங்கையை சர்வதேச பயங்கரவாதிகளிடம் இருந்து பாதுகாக்க நாம் நாட்டில் தேசிய பாதுகாப்பினை பலப்படுத்தியுள்ளோம். அத்தோடு சர்வதேச பாதுகாப்பு செயற்பாடுகளுடனும் நாம் நல்ல முறையில் செயற்படுகின்றோம். ஆயினும், புலம்பெயர் அமைப்புகள் மக்களுடன் தொடர்புகளை வைத்து மீண்டும் நாட்டில் குழப்பத்தினை ஏற்படுத்தும் முயற்சிகளை கையாள்கின்றனர்.

எது எவ்வாறு இருப்பினும் தமிழ் மக்கள் கடந்த காலங்களில் பட்ட இன்னல்களை இன்னமும் மறக்கவில்லை. எனவே, அவர்கள் இப்போது பாதுகாப்பாகவும் சுதந்திரமாகவும் செயற்படுகின்றனர்.

இனியொருபோதும் அவர்கள் பயங்கரவாதத்தினை ஆதரிக்க மாட்டார்கள் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது. மக்கள் மீதுள்ள நம்பிக்கையிலேயே நாம் தைரியமாக செயற்படுகின்றோம் எனவும் தெரிவித்தார். (இ)

# துப்பாக்கி முனையிலே காதலுக்கு நிர்ப்பந்தம்

(கொழும்பு)

துப்பாக்கியைக் காட்டி யுவதி ஒருவருடன் காதல் தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள முற்பட்ட ஒருவர் கோட்டை பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோட்டை பகுதியால் சென்று கொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் மற்றுமொருவருடன் வந்துகொண்டிருந்த சந்தேக நபர் துப்பாக்கியைக் காட்டி தன்னைக் காதலிக்குமாறு யுவதியை கோரியுள்ளார்.

யுவதியின் பயணப் பொதி மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பவற்றை சந்தேகநபர் அபகரித்துச் சென்றதாகவும், பின்னர் அவற்றை ஒப்படைத்துவிட்டு தனது யோசனைக்கு யுவதியை இணங்கச் செய்வதற்கு முயற்சித்துள்ளதாகவும் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மிரிஹான விசேட குற்றத்தடுப்புப் பிரிவினரால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்

சந்தேகநபருடன் மோட்டார் சைக்கிளில் வந்ததாக கூறப்படும் நபர் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ)

# இந்திய மீனவர்கள் எவரையும் இலங்.கடற்படை தாக்கவில்லை

இந்திய மீனவர்களை தாக்கியதாக வெளியான தகவல்களில் உண்மையில்லை என இலங்கைக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்களின் படகுகளை தாக்கி சேதப்படுத்தியதாகவும், மீனவர்களை தாக்கியதாகவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

எவ்வாறெனினும், இந்தக் குற்றச்சாட்டுக்களில் எவ்வித உண்மையும் கிடையாது என இலங்கைக் கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்கள் கைது செய்யப்படுவார்கள் என கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

இரு நாடுகளுக்கும் இடையில் எவ்வித இணக்கப்பாடும் எட்டப்படவில்லை என குறிப்பிட்டுள்ளனர்.

எனவே தொடர்ச்சியாக மீனவர்களை கைதுசெய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்படும் என அறிவித்துள்ளனர்.

நயினாதீவு பகுதியில் தத்தளித்துக் கொண்டிருந்த இந்திய மீனவர்களை மீட்டதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட அனுமதியளிக்குமாறு மத்திய அரசாங்கம் இலங்கையிடம் கோரியிருந்து.

எனினும், இந்தக் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என இலங்கை மீன்பிடித்துறை அமைச்சர் ராஜித சேனாரட்ன அறிவித்துள்ளார்.


இவர்களுக்கு மணமகள் தேவை | கல்யாண மாலை | இவர்களுக்கு மணமகன் தேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி 4<br>கி.பா: 47 ½ சூரி செவ் 9 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L, AAT கணக்காளர்<br>தொ.இ: B/3527 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 3<br>கி.பா: 37 ¾<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L, Management Following / வங்கியாளர்<br>தொ.இ: G/3538 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 3<br>கி.பா: 16<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: A/L, HND / இந்தியாவில் வேலை<br>தொ.இ: B/3528 | பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>கி.பா: 21 ½ செவ் 1 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L / தனியார் வேலை<br>தொ.இ: G/3539 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 2<br>கி.பா: 32 சூரி செவ் 8 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L / சொந்த வியாபாரம்<br>தொ.இ: B/3529 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 4<br>கி.பா: 20<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: BA – Final<br>தொ.இ: G/3541 |
| பிறப்பு: 1971 இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 2<br>கி.பா: 36<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: MBBS / சத்திர சிகிச்சை நிபுணர்<br>தொ.இ: B/3530 | பிறப்பு: 1988 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: சித்திரை 4<br>கி.பா: 27<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: O/L / தனியார்<br>தொ.இ: G/3550 |

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
... காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சமூகப் பிரச்சினைகள் குறித்து அரசு கவனம் செலுத்தவில்லை

## சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு

(கொழும்பு)

யுத்தத்தின் பின்னரான சமூகப் பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் உரிய கவனம் செலுத்தவில்லை என தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் செயலாளர் மல்காந்தி விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

வறுமை ஆய்வு மத்திய நிலையத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்தின் பின்னர் அரசாங்கம் பிரதானமாக உட்கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதிலேயே அதிகளவு சிரத்தை காட்டி வருவதாகக் தெரிவித்தார்.

எனினும், சமூகம் சார் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேணடியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நீதி, கல்வி, சுகாதாரம் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலை போன்றன தொடர்பில் தேசிய செயற்றிட்டமொன்று வகுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் தெரிவித்துள்ளார்.

கொள்கை அமுலாக்கத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

மாரீசன்கூடல் புனித கயித்தார் முன்பள்ளியின் வருடாந்த விளை யாட்டு விழா புனித கயித்தார் ஆலய முன்றலில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந் தினராக வலிகாம வலய ஆரம் பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி றூபா உதயரட்ணமும் சிறப்பு விருந்தினர்களாக ஜே/154 இளவாலை கிராம அலுவலர் சந்திரராசா சூரியகுமார், ஜே/155 இளவாலை கிராம அலுவலர் செல்வி செல்வராசா பிறேமினியும் கௌரவ விருந்தினராக இளவாலை குடும்பநல உத்தியோகத்தர் செல்வி தெய்வேந்திரம் ஊர்மிலாவும் கலந்து சிறப்பிக்கவுள்ளதாக பங்குத்தந்தையும் முன்பள்ளிக் காப்பாளருமான மாரீ சன் கூடல் ஜே.ஏ.அருள்தாசன் அடிகளார் அறிவித்துள்ளார். (இ)

# சாதாரண பொதுமக்களுக்கு அடிப்படை பிரச்சினைகளுள்ளன

## ஐ.நா.அபிவிருத்தித்திட்ட இலங்கைப் பணிப்பாளர்

அரசியல் சாசனத்தை விடவும் சாதாரண பொதுமக்களுக்கு வேறு அடிப்படை பிரச்சினைகள் காணப்படுவதாக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் இலங்கைப் பணிப்பாளர் சுனினாய் நென்டி தெரிவித்துள்ளார். கொழும்பில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

வரப்பிரசாதங்களைப் பெற்ற சமூகமொன்று 13ஆம் திருத்தச் சட்டம், 17ஆம் திருத்தச் சட்டம் மற்றும் 18ஆம் திருத்தச் சட்டம் போன்றன பற்றி விவாதம் செய்து வருவதாகக் தெரிவித்தார்.

எனினும், சமூகத்தினால் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த விடயங்கள் பற்றி கவலை கொள்வதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

பாலியல் ரீதியாக கொடுமைகளை அனுபவித்த பெண்கள், பிள்ளைகள் காணாமற்போன தாய்மார் போன்றவர்கள் நியாயம் நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் அதிக கரிசனை கொண்டுள்ளதாக தெரிவித்தார்.

காணாமற் போனவர்களுக்கு என்னவாயிற்று என்பது பற்றிய சரியான தகவல்களை அறிந்து கொள்வதில் இவர்கள் ஆர்வம் காட்டி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

மிதிவெடியை மிதிக்காது தமது பிள்ளைகள் பாடசாலை சென்று திரும்ப வேண்டுமென்றே தாய்மார் விரும்புகின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

### உரமானிய விண்ணப்பப்படிவம்


யாழ்.மறவன்புலோ கமக்கார அமைப்புக்கு உட்பட்ட விவசாயிகளுக்கான உரமானிய விண்ணப்பப்படிவம் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் மறவன் புலோ மேற்கு சனசமூக நிலையத்தின் அருகாமையிலுள்ள அமைப்பின் செயலாளர் எஸ்.கந்தையாவின் வீட்டில் வைத்தும் வழங்கப்படுவதுடன் சாவகச்சேரி நகரில் உள்ள அமைப்பின் தலைவர் தி.திருஞான சம்பந்தர் இல்லத்திலும் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது. (இ-37)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்


| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 50 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 120 | 100 | 120 | 130 |
| தக்காளி | 30 | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 35 | 40 | 40 | 60 |
| கோவா | 60 | 60 | 50 | 80 |
| கரட் | 80 | 80 | 70 | 100 |
| பூசணி | 20 | 30 | 30 | 30 |
| புடோல் | 40 | 40 | 30 | 40 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 80 | 60 | 90 | 80-100 |
| பெரிய வெங்காயம் | 80 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 80 | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 40 | 80 |
| கருணைக் கிழங்கு | 90 | 50 | 50 | 100 |
| பயற்றங்காய் | 60 | 60 | 70 | 40 |
| லீக்ஸ் | 60 | 70 | 70 | 80 |
| பீற்றூட் | 40 | 60 | 40 | 50 |
| கறிமிளகாய் | 70 | 80 | 70 | 100 |
| முருங்கைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| போஞ்சி | 120 | 120 | 100 | 120 |
| கத்தரிதம்புள்ள | 60 | 40 | 40 | 60 |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 20 | 25 |
| தேசிக்காய் | 50-90 | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 20-35 | 30 | 30 | 25-35 |
| இராசவள்ளி | 120 | 100 | — | 100 |

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 126

டொறின் மன்மதநாயகம்





சுபாகீதன் சத்தியமூர்த்தி




ராஜா ராணி





நிரோஸ் நிரோசன்




தமிழ் கைய்




பாலசுப்பிரமணியம் ராகுலன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒதுக்கப்பட்ட நிதிக்கான வேலைத் திட்டங்கள் உரிய காலத்திற்குள் செய்து முடிக்கப்படும்

## உறுதியாக கூறுகின்றார் வட.விவசாய அமைச்சர்

வடக்கு மாகாண அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் பெருமளவு இன்னமும் பயன்படுத்தப்படாமல் இருப்பதாகவும் குறித்த நிதி மத்திய அரசாங்கத்துக்கு திரும்பப் போவதாகவும் கூறப்பட்டு வருகிறது.

ஒதுக்கப்பட்ட நிதிக்குரிய வேலைத்திட்டங்கள் அனைத்தும் உரிய காலத்தினுள் செய்து முடிக்கப்படும். ஒரு சதமேனும் திரும்பி செல்லாது என உறுதியாக கூறுவதாக வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார். வவுனியா மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் விவசாயிகளுக்கு இழைய வளர்ப்புத் தொழில்நுட்பத்தின் மூலம் உருவாக்கப்பட்ட வாழைக்குட்டிகளை விநியோகிக்கும் தொடக்க நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.




பிரதி விவசாயப் பணிப்பாளர் சகிலாபானு தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிடடுள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

சில அபிவிருத்தித்திட்டங்களில் ஒப்பந்தகாரர்களினால் மேற்கொள்ளப்படும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்பே அவர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்கும் நடைமுறையும் உள்ளது. இவை எல்லாம் தெரிந்திருந்தும், வடமாகாண சபை அபிவிருத்தித்திட்டங்களில் அக்கறை காட்டாததாலேயே ஒதுக்கப்பட்ட நிதி செலவளிக்கப்படாமலுள்ளது என்ற பிரசாரம் முன்னெடுக்கப்படுகின்றது.

பொதுமக்கள் இதன் பின்னால் உள்ள விசமத்தனத்தைப் புரிந்து கொள்ள வேண்டும். எல்லா வேலைத்திட்டங்களும் அதற்கு ஒதுக்கப்பட்ட நிதி வீணாகாதவாறு கார்த்திகை, மார்கழி ஆகிய மாதங்கள் முடிவடைவதற்குள் பூர்த்தி செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

இதன்போது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து ஐந்து விவசாயிகளுக்கு வெங்காயச் செய்கையை மேற்கொள்ளுவதற்கென தலா 50 ஆயிரம ரூபாவும், ஐந்து விவசாயிகளுக்குக் காளான் வளர்ப்பை மேற்கொள்ளு வதற்குரிய காளான் வித்திகள மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-6)

# பால்நிலை வன்முறைகள் தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கருத்தரங்கு



(கிளிநொச்சி)

கிராமிய அபிவிருத்திக்கான நல்லாட்சி கருத்திட்டத்திற்கு அமைவாக பால் மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் காலை 9.45 மணிக்கு கரைச்சி பிரதேச செயலர் கோ.நாகேஸ்வரன் தலைமையில் கரைச்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு வளவாளர்களாக சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் கே.தர்சனன், பெண் நோயியல் நிபுணர் டாக்டர் கே.குருபரன் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட உளவளத்துணையாளர் ரி.துஷ்யந்தன் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை தெரிவித்தனர்.

இதில் தெரிவு செய்யப்பட்ட 12 கிராமங்களைச் சேர்ந்த கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மருத்துவ மாதுக்கள், கிராம/மாதர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகி யோர் பங்குபற்றினர். கரைச்சி பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் இந்நிகழ்வு நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (2-254)

# நாயாறு கடற்பரப்பில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்களின் உபகரணங்கள் அரசுடைமை

## முல்லை.மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் தெரிவிப்பு

(குருமன்காடு)

முல்லைத்தீவு நாயாறு கடல் பிரதேசத்தில் சட்ட விரோதமான முறையில் தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 12 கடற்றொழிலாளர்கள் மற்றும் அவர்கள் பயன்படுத்திய கடற்றொழில் உபகரணங்கள் என்பன பறி முதல் செய்யப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப்பணிப்பாளர் ஜெ.சுதாகரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி கடல் பிரதேசத்தில் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர் தலைமையில் சென்ற கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கடற்படையினரின் உதவியுடன் நேற்று முன்தினம் அதிகாலை கடற்பரப்பில் சுருக்கு வலையை ஒளிக்கவர்ச்சியுடன் (ஒளிபாய்ச்சி) மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 கடற்றொழிலாளர்களைக் கைது செய்ததுடன் அவர்கள் பயன்படுத்திய கடற்றொழில் உபகரணங்களையும் பறிமுதல் செய்தனர்.

இதனையடுத்து அவர்கள் அனைவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி மா.கணேசராஜா முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு விசாரிக்கப்பட்ட போது மீனவர் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தண்டப் பண மாக தலா மூவாயிரம் ரூபாவை செலுத்த வேண்டுமென நீதிபதி உத்தரவிட்டார்.

அத்துடன் அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட நான்கு படகுகள், நான்கு வெளியிணைப்பு இயந்திரங்கள், மூன்று சுருக்கு வலைகள், இரண்டு ஜெனரேட்டர்கள் என்பன நீதிபதியின் உத்தரவுக்கமைய அரசுடைமையாக்கப்பட்டு நீதிமன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி அண்ணளவாக 25 இலட்சம் ரூபாவாகும்.

மீனவர்கள் அனைவரும் தமக்கான தண்டப்பணத்தை செலுத்திய பின் விடுவிக்கப்பட்டனர்.

மேலும் முல்லைத்தீவு மாவட்ட கடல் பிரதேசங்களில் இதுபோன்று அத்துமீறி இடம்பெறும் சட்டவிரோத மீன்பிடித்தலுக்கு எதிராகவும்தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகவும் தொடர்ந்து சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-250-267)


# திவிநெகும கடன் திட்டம்

திவிநெகும திட்டத்தின் 6 ஆம் கட்டப் பணிகள் அண்மையில் நாடு பூராகவும் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் வவுனியா வடக்கு புளியங்குளம் சமுர்த்தி வங்கி சங்கத்திலும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வறுமையில் வாழும் மக்கள் சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கு இலகுவான முறையில் கடன்களை பெற்றுக் கொள்ளும் முகமாக புதிய கடன் வசதிகளுடன் இத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் புளியங்குளம் வங்கி சங்கத்திற்கு உட்பட்ட 9 சமுர்த்தி உத்தியோகத்தர் பிரிவுகளுக்குட்பட்ட மக்களுக்காக கடன்களும் முதற்கட்டமாக வழங்கப்பட்டிருந்தன.

இந்நிகழ்வில் திவிநெகுமவின் வலயம் ஆறின் மேலதிக பணிப்பாளர் டி.குமாரசிறி, வவுனியா மாவட்ட உதவிப்பணிப்பாளர் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-250)





திவிநெகும திட்டத்தின் கீழ் வீட்டுக்கு வீடு கிராமத்துக்கு கிராமம் எனும் செயற்றிட்டம் நேற்றுமுன்தினம் வவுனியா கலாசார மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது வவுனியாவின் அபிவிருத்தி திட்டங்கள், கிராமிய பொருளாதாரம் மற்றும் கிராமிய வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நிதி தொடர்பான கடிதங்கள் கிராமங்களின் பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# பாடசாலைகளில் விவசாய பண்ணைகளை அமைப்பதற்கான வேலைத்திட்ட செயலமர்வு

(மல்லாவி)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படும் திவிநெகும 5 ஆம் கட்டத்தின் கீழ் நடப்பாண்டில் பெரும் போகத்தின் போது **எமது மரக்கறி, எமது தோட்டம்** எனும் தொனிப்பொருளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வேலைத்திட்டம் தொடர்பாக பாடசாலை விவசாய பண்ணையை ஆரம்பிப்பதன் மூலம் விதை மற்றும் கன்றுகளை விநியோகிப்பது தொடர்பாக மாகாண கல்விச் செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் விவசாய விடயத்திற்கு பொறுப்பான கல்வி உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு நடைபெறவுள்ளதாக கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர் (கல்வி பண்புசார் விருத்தி) எச்.யு. பிரேமதிலக அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தலைமையில் இசுறுபாயாவிலுள்ள கல்வி அமைச்சின்4 ஆவது மாடியில் அமைந்துள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறும்.

இவ் வேலைத்திட்டத்திற்கு அமைவாக வடமாகாணத்திலுள்ள 12 கல்வி வலய பாடசாலைகளிலும் செய்கை மேற்கொள்ளக்கூடிய இடங்களில் விவசாயப் பண்ணைகளை அமைப்பதற்கும் மரக்கறி விதை, பழக்கன்றுகளை நாட்டுவது உட்பட ஏனைய விவசாய செயற்றிட்டங்களை நாடு தழுவிய ரீதியில் அமுல்படுத்த கல்வி அமைச்சின் ஊடாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு முன்னோடியாகவே இச் செயலமர்வு நடைபெறுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-15)

# மீள்குடியேற்றப்படாத மக்கள் இருக்கிறார்களா?

## பிரித்தானிய உயர்ஸ்தானிகர் கேள்வி

காணி அபகரிப்பு, காணாமற போனோர் விவகாரம், அரசியல் கைதிகளின் பாதுகாப்பு மற்றும் விடுதலை, போரினால் கணவனை ஈழந்த பெண்களுக்கான மறுவாழ்வு, அனைத்து இயக்கங்களினதும் போராளிகளுக்கான வாழ்வாதாரம் உள்ளிட்ட பல் வேறு விடயங்களை பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜோன் ரங்கீனுடன், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் கலந்துரையாடினாா.

பாராளுமன்ற உறுப்பினரால் வலியுறுத்தப்பட்ட மேற்குறித்த விடயங்களை அவதானத்துடன் செவிமடுத்த உயர்ஸ்தானிகர், தன்னால் இயன்ற வரை குறித்த விடயங்களை முதன்மைப்படுத்தி ஆவன செய்வதாக அவர் தெரிவித்தார்.

இவ்விடயங்களை உரிய பாதுகாப்பு தரப்பினரின் கவனத்துக்கு கொண்டு சென்று தீர்வு காண முயற்சிப்பதாகவும் தெரிவித்தார்.


வவுனியா மாவட்டத்தில், இன்னமும் மீள்குடியேற்றப்படாத மக்கள் இருக்கிறார்களா? அவ்வாறு இருந்தால் அவர்கள் எங்கிருக்கிறார்கள்? என்று உயர்ஸ்தானிகர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த சிவசக்தி ஆனந்தன், வவுனியா பூந்தோட்டத்திலும் சிதம்பரபுரத்திலும் சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இருபது வருடங்களுக்கும் மேலாக மீள் குடியேற்றப்படாமல் இருப்பதாக தெரிவித்தார். (2-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தொட்டிக்குள் சுற்றும் தங்கச் செல்லங்கள்!



முதன் முதலாக மீனை வளர்க்க ஆரம்பித்தது, சீன தேசத்தில்தான். சீன அரசர் வென்வாஜ் கி.மு 1500 ஆம் ஆண்டுகளில் சுமார் 1500 ஏக்கர் பரப்பளவுள்ள மீன், மான், பறவைகளை வளர்த்தார். சீனர்களும் ஜப்பானியர்களும் வீட்டில் மீன் வளர்ப்பதை மிகவும் விரும்புவார்கள். இப்போது வீடுகளில் மீன் வளர்ப்பவர்களில் முதல் இடம் வகிப்பது அமெரிக்கர்கள்!



கி.பி 970 ஆம் ஆண்டு தங்க மீன் பற்றிய விபரம் கிடைக்க ஆரம்பித்தது. சிங்கத்தலை மீன், செலஸ்டியல் மீன், சபங்கின் மீன், முட்டை மீன் என்று தங்க மீன்களில் பல வகைகளை உருவாக்கியவர்கள், சீனர்களும் ஜப்பானியர்களும்தான். 1600 போர்ச்சுகல் நாட்டிலும் 1728 ஆண்டுகளில் ஹாலந்திலும் தங்கமீன் வளர்க்க ஆரம்பித்தார்கள். இப்போது தங்கமீன்கள் வளர்ப்பதில் முதல் இடத்தில் இருப்பவர்களும் அமெரிக்கர்களே!


ஒருமீன் குஞ்சு ஆணா, பெண்ணா என்பதைக் கண்டறிவது மிகக் கடினம். பருவத்திற்கு வந்த மீன்களில் பெண்மீன்களின் வயிறு பெரிதாக இருக்கும். அரவாணா மீன் மற்றும் கார்ப் மீன் செதில்கள் பெரிதாக இருக்கும். இவற்றைப் பார்த்துப் பாலினம் கண்டறிவார்கள்.







வீட்டில் வளர்க்க 400 வகை மீன்கள் ஏற்றவை. இவற்றை அலங்கார மீன்கள் என்பார்கள். முக்கியமான அலங்கார மீன்களை 6 வகைக்குள் அடக்கலாம். துள்ளிக் குதிக்குமே எப்படி அடக்குவது என்று கேட்க்கூடாது. கண்ணாடித் தொட்டிக்குள் மீனைப் பார்க்கத்தான் முடியும். தூக்கி வைச்சுக் கொஞ்ச முடியாது.





உலகிலேயே மிகப்பெரிய அமேசான் ஆற்றில் கிடைக்கும், ஏஞ்சல் மீன் வீட்டு வளர்ப்பு மீன்களில் ஒன்றாக இருக்கிறது. தென் அமெரிக்கா மற்றும் கரிபியன் தீவுப் பகுதியில் இருந்து வந்தவை, கப்பி மீன்கள். இவை பச்சை நிறமாக இருக்கும். இப்போது இதிலும் பல நிறங்களில் கிடைக்கின்றன. ஆண் மீன்களுக்கு நீளமாக வால் இருக்கும்.



→→→→→→→→→→→→ (தொடரும்)

09.2014 05

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1698 - ரஷ்ய பேரரசன் முதலாம் பீட்டர் தாடி வைத்திருப்பவரகளுக்கு வரி அறவிட உத்தரவிட்டான்.
- 1799 - பாஞ்சாலங்குறிச்சியை மேஜர் பானர்மேன் தலைமையிலான படை முற்றுகையிட்டது.
- 1800 - மோல்டா பிரித்தானியாவினால் பிடிக்கப்பட்டது.
- 1839 - முதலாவது ஓப்பியம் போர் சீனாவில் ஆரம்பமானது.
- 1880 ரஷ்யாவில் சென் பீட்டர்ஸ்பேர்க்கில் உலகின் முதலாவது மின்சார டிராம் (Tram) வெற்றிகரமாகச் சோதிக்கப்பட்டது.
- 1882 - ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது தொழிலாளர் நாள் பேரணி நியூயோர்க் நகரில் இடம் பெற்றது.
- 1902 - இலங்கையில் சாவகச்சேரிக்கும் பளைக்கும் இடையில் 14 மைல் நீளமான தொடருந்துப் பாதை திறக்கப்பட்டது.
- 1905 - ரஷ்ய-ஜப்பானியப் போர்: அமெரிக்க அதிபர் தியோடர் ரூஸ்வெல்ட்டின் அமைதி முயற்சியை அடுத்து இரு நாடுகளுக்குமிடையில் அமைதி உடன்பாடு நியூ ஹாம்ப்ஷயரில் எட்டப்பட்டு போர் முடிவுக்கு வந்தது.
- 1914 - முதலாம் உலகப் போர்: பாரிசின் வடகிழக்கே பிரெஞ்சுப் படைகள் ஜேர்மனியப் படைகளைத் தாக்கி அவரகளை வென்றனர்.
- 1932 - பிரெஞ்சு மேல் வோல்டா பிளவடைந்து ஐவரி கோஸ்ட், பிரெஞ்சு சூடான், நைஜர் என மூன்று தனிநாடுகளானது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்கா போரில் தனது நடுநிலையை அறிவித்தது.
- 1961 - அணிசேரா நாடுகளின் முதலாவது மாநாடு பெல்கி றேட்டில் இடம்பெற்றது.
- 1977 - வொயேஜர் 1 விண்கலம் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1978 - காம்ப் டேவிட் ஒப்பந்தம்: இஸ்ரேலியப் பிரதமர் பெகினுக்கும் எகிப்திய அதிபர் அன்வர் சதாத்துக்குமிடையில் மேரிலாந்தில் அமைதி ஒப்பந்த மாநாடு ஆரம்பமானது.
- 1980 - உலகின் மிக நீளமான நெடுஞ்சாலைச் சுரங்கமான கோதார்ட் சாலைச் சுரங்கம் (16.224 கி.மீ) சுவிட்சர்லாந்தில் திறக்கப்பட்டது.
- 1986 - அமெரிக்க பான் ஆம் விமானம் 358 பேருடன் கராச்சியில் கடத்தப்பட்டது.

பிறப்புகள்

- 1872 - வ. உ. சிதம்பரம்பிள்ளை, விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1938)
- 1888 - சர்வபள்ளி இராதாகிருஷ்ணன், இந்தியாவின் இரணடாவது குடியரசுத் தலைவர் (இ. 1975)
- 1945 - மு. மேத்தா, கவிஞர்
- 1950 - வீரசிங்கம் துருவசங்கரி, இலங்கையைச் சேர்ந்த அறிவியலாளரும் கண்டுபிடிப்பாளரும் (இ. 2006)

இறப்புகள்

- 1997 - அன்னை தெரேசா, (பி 1910)

## அன்புச் சுட்டிகளே!

உங்கள் மனதில் தாக்கத்தை ஏற்படுத்திய சம்பவங்களை, நீங்களும் சிறுவர் பக்கத்தில் - சுட்டி மனசு- பகுதியில் பதிவு செய்துகொள்ளலாம்.

### நீங்கள் செய்ய வேண்டியது....

உங்களால் மறக்க முடியாத சம்பவத்தைத் தெளிவாக எழுதி, முழுப்பெயர், கல்வி கற்கும் பாடசாலை, தரம், உங்கள் புகைப்படம், உங்கள் வீட்டு முகவரி, உங்கள் வீட்டு தொலைபேசி இலக்கம் என்பவற்றை,



ஆசிரியர், சிறுவர் பக்கம்
வலம்புரி,
இல 03, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்,

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சச்சின்

## சாதனை நாயகனின் சரித்திரம்

55


..இந்தப் போட்டியில் அச்ரேகரின் மூன்று சிஷ்யர்களான சச்சின், காம்ப்ளி மற்றும் ஆம்ரே ஆகிய மூவரும் இந்தியாவிற்காக விளையாடினர்.

தனது மூன்று மாணவர்களும் ஒரே டெஸ்டில் ஆடும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அச்ரேகர் ஆனந்தக் கண்ணீர் வடித்தார். இந்த டெஸ்டில் காம்ப்ளி ஆடிய அதிரடி ஆட்டம் இந்திய ரசிகர்கள் அனைவரையும் அசர வைத்தது. தனது சொந்த ஊரில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான ரசிகர்கள் முன்னிலையில் காம்ப்ளி இரட்டை சதம் அடித்தான். ஆம் அவன் அடித்தது 224 ரன்கள். இங்கிலாந்து அணியுடன் அதிக ரன் எடுத்த இந்தியன் என்ற பெருமையையும் சேர்த்துக் கொண்டன. 10 மணி நேரம், 411 பந்துகள். அப்போதைய நிலவரப்படி கவாஸ்கர் எடுத்த அதிகபட்ச ரன்னான 236 ஐ காம்ப்ளி தாண்டுவான் என்று அனைவரும் டென்ஷனுடன் இருக்க லூயி பந்து வீச்சில் அவன் ஆட்டம் இழந்தான். கவாஸ்கரின் சாதனையை அப்போது காம்ப்ளி முறியடிக்கவில்லை என்றாலும், சச்சினுக்கு இணையாக இன்னொரு வீரனை உருவாக்கி விட்டோம் என்ற பெருமிதத்தில் அச்ரேகர் முகம் தாமரையாய் மலர்ந்தது. இந்தியாவின் ஸ்கோர் 591 ரன்கள். இங்கிலாந்து மீண்டும் படுதோல்வி அடைந்தது. இந்தியா 3-0 என்ற கணக்கில் தொடரை வென்றது. இந்திய-இங்கிலாந்து டெஸ்ட் போட்டிகள் நடக்கும் போது இடையிடையே வேறு சில போட்டிகளும் நடந்தன. முதல் மற்றும் இரண்டாவது டெஸ்ட் போட்டிகளுக்கு நடுவே விசாகப்பட்டினத்தில் நடந்த போட்டியில் ரெஸ்ட் ஓஃப் இந்தியா அணிக்கு சச்சின் கேப்டனாக நியமிக்கப்பட்டான். அசாருதீன் மீது அதிருப்தி படர்ந்த நிலையில், சச்சினை கேப்டனாக முடிசூட்ட இந்தப்போட்டி வெள்ளோட்டமா என்ற ஐயம் எல்லோர் மனதிலும் ஏற்படாமலில்லை. இதுபற்றி சச்சினிடமும் கேட்கப்பட்டது. அதற்கு நான் கேப்டனாக ஆவேனா மாட்டேனா என்பது முக்கியமல்ல. இந்தியாவிற்கு என்ன தேவை என்பதுதான் முக்கியம். நான் பொறுப்புக்களைக் கண்டு ஓடுபவன் இல்லை. சிரமமான பணியாக இருந்தாலும் எனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை வெற்றிகரமாக செய்து முடிப்பேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. கேப்டனாகவும் இருக்கத் தயார் என்று இருபது வயதுகூட நிரம்பாத சச்சின் செய்தியார்களிடம் தெளிவுபடக் கூறினான். அடுத்து இலங்கைக்குப் பயணம். ஆனால், இதற்கிடையே ஜிம்பாப்வே அணி ஒரு டெஸ்ட் போட்டி மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாட இந்தியா வந்தது. முதல் டெஸ்ட் போட்டி புதுடில்லி ஃபெரொஷா கோட்லா மைதானத்தில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் காம்ப்ளி மற்றொரு சாதனை செய்தான். ஆம் அதுவும் வாலி ஹாமண்ட் மற்றும் டான் பிராட்மெனுக்கு இணையாக ஏற்கனவே மும்பையில் 224 என்னும் டபுள் செஞ்சுரி அடித்த காம்ப்ளி டெல்லி மைதானத்தில் அடித்ததோ 227. ஆம் தொடர்ந்து இரு டெஸ்ட்களிலும் டபுள் செஞ்சுரிகள். ஆனால், மீண்டும் கவாஸ்கரின் 236 சாதனையை முறியடிக்க இயலாமல் போனது.

சச்சின் (62), சித்து, ஆம்ரே அரை சதங்கள் எடுத்து அணிக்கு வலுவேற்றினர். இந்தியா 536 ரன்கள் குவிக்க, ஜிம்பாப்வே இன்னிங்ஸ் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது. இந்திய அணிக்கு சொந்த மண்ணில் தொடர்ச்சியாக ஐந்து வெற்றிகள். இவற்றில் மூன்று இன்னிங்ஸ் வெற்றிகள் அடக்கம்!

கே. ரமேஷ் (தொடரும்)

### காம்ப்ளி-உனக்கு நான் இவ்வளவு பெரிய இடைவெளி?



சச்சின் கிரிக்கெட்டிற்காக வாழ்ந்தான் என்றால் காம்ப்ளி உயிர்வாழ்வதற்காக கிரிக்கெட் விளையாடினான். சச்சினுக்கு கிரிக்கெட் ஸ்வாசம். ஆனால், காம்ப்ளிக்கோ வருவாய் ஈட்டித்தரும் தொழில். இன்னும் சொல்லப்போனால், கிரிக்கெட் தவிர உலகில் அனுபவிக்கவும் சந்தோஷப்படவும் எவ்வளவோ இருக்கின்றன என்பது காம்ப்ளியின் எண்ணம். வெளிநாடுகளுக்கு பயணிக்கும்போது விளையாட்டு முடிந்தவுடன் சச்சின் ஓய்வறைக்குத் திரும்பி அடுத்த நாள் ஆட்டத்திற்குத் தன்னை தயார்ப்படுத்திக் கொள்வான். ஆனால், காம்ப்ளியோ கேளிக்கை விடுதிகள், ஹோட்டல்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று உல்லாசமாக இருப்பான்.

# ஆத்ம ஞானத்தைத் தேடி

**ஆன்மீகம் 08**

**பரமஹம்ஸ சுவாமி**

...ஆனால், அதை அவர் செய்யவில்லை.

தடை, சீடரின் மனதிலிருந்தது, குருவின் செய்கையில் அல்ல என்பதை சீடருக்குப் புரிய வைத்தார்!

அசைவ உணவின் மீதுள்ள ஆசையை உங்களால் விட்டுவிட முடியாது என்று நீங்கள் எண்ணினால், அது தானாகவே போகும்வரை சாப்பிடுங்கள். இதற்கு நான் அசைவ உணவை ஆதரிப்பதாக அர்த்தமல்ல என்பதை நினைவில் வையுங்களள. என் சொந்த வாழ்க்கையில் உடலிற்கும் மனதிற்கும் சைவ உணவு ஏற்றதாக இருப்பதால் நான் அதைச் சாப்பிடுகிறேன். நீங்களும் வாழ்க்கையில் என் வழியைத் தழுவ விரும்பினால் வைசமாக மாறிவிடுங்கள். அவ்வளவுதான்!

ஆனால், அதை விட்டுவிட்டு உங்கள் ஆசையை விடமுடியாமல் மற்றவர்களை விட்டுவிடுமாறு தொல்லை செய்து கொண்டிருக்காதீர்கள். நாம் அனைவரும் வைச உணவுப் பழக்கம் போன்ற சின்ன விடயங்களை எடுத்துக்கொண்டு மணிக்கணக்காக அதைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருக்கிறோம்; அதுதான் பிரச்சினையே.


நீங்கள் இந்த மூன்று வகைக்குள் ஏதாவதொன்றில் வருவீர்கள்.

முதலாவது அசைவ உணவைச் சாப்பிடுவதுமில்லை. அதைப்பற்றி சிந்திப்பதுமில்லை. இரண்டாவது வகை, சாப்பிட்டுவிட்டு அதைப் பற்றி மறந்துவிடுவது. மூன்றாவது வகை, தானும் சாப்பிடுவதில்லை. தனது இழப்பால் வருந்தி மற்றவர்களையும் சாப்பிட விடாமல் தொல்லை செய்வது! தயவுசெய்து இந்த மூன்றாவது வகையில் விழுந்து விடாதீர்கள். அவ்வளவுதான்!

சொல்லுங்கள்..!

ஸ்வாமிஜி, நான் நல்லது செய்ய விரும்பினால், உதாரணத்திற்கு ஒரு பேருந்தில் பயணம் செய்துகொண்டிருக்கும் பொழுது ஒரு வயதான மனிதரைப் பார்த்தால் அவருக்கு என்னுடைய இருக்கையைக் கொடுக்க விரும்புகிறேன். ஆனால், மீதிப் பயணம் முழுவதும் நான் நின்றுகொண்டிருக்க வேண்டும் என்பதை நினைக்கும்பொழுது அதற்கு எதிராகத் தீர்மானிக்கிறேன். ஆனால், நான் புகைப் பிடிக்க விரும்பினால், உள்ளிருந்து ஒரே ஒரு சிகரெட் ஒன்றும் என் வாழ்க்கையைப் பாழாக்கிவிடாது என்று அதற்கு இசைவான பதில் வருகிறது. உண்மையிலேயே சரியானதை மட்டுமே செய்வதற்கு என்னை ஏன் என்னால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை!

பாருங்கள், வெளியிலிருந்து சொல்லப்படும் எதையும் மனதினால் நீங்கள் எடுத்துக்கொள்ளும்பொழுது அதை நீங்கள் புத்திசாலித்தனத்திலிருந்து புரிந்துகொண்டிருந்தாலும், அதன் பலன்களைத் தெளிவாகவும், ஆழமாகவும் பார்ப்பதில்லை. ஆனால், ஒன்றை நீங்களே



ஆழமாக அனுபவிக்கும் பொழுது, அது உங்கள் சொந்தப் புரிந்துகொள்ளுதலாகி விடுவதால் எந்தப் பிரச்சினையுமில்லாமல் அதில் நிலையாக நிற்கிறீர்கள்.

சிகரெட் உங்கள் இருப்புத் தன்மையுடன் கலந்துவிட்டது. அதை நீங்களே அனுபவித்துவிட்டீர்கள். அது மற்றொருவரின் போதனையால் அல்ல; அது உங்கள் சொந்த அனுபவம். அதனால் உங்கள் இதயம் அதனை ஏற்றுக்கொண்டு விட்டது.ஆனால், பேருந்தில் உங்கள் இருக்கையை யாரோ ஒருவருக்கு விட்டுக் கொடுப்பதால் கிடைக்கும் மகிழ்ச்சியானது. நீங்கள் ஆழமாக அனுபவிக்காத ஒரு விடயம். பேருந்தில் வயதான ஒருவருக்கு இருக்கையை விட்டுக்கொடுப்பது நல்ல விடயம் என்பது உங்களுக்கு மற்றவர்களால் சொல்லப்பட்டது. அவ்வளவுதான். உங்களுக்கு சமூகப் பண்பாடுகளைப்பின் பற்றியதற்காக வேண்டுமானால் அதிகபட்சமாக ஒருவிதமான மன நிறைவு ஏற்பட்டிருக்கலாம். அவ்வளவே. ஆனால் சிகரெட் விடயத்திலோ, நீங்களே அனுபவமாகி விட்டீர்கள். நீங்களாக அனுபவிக்காதது எதுவானாலும். இது உங்களைக் கவராது; உங்களை அதனிடம் இழுக்காது.

(தொடரும்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் பிரிவு A வழங்கும்...

## பச்சை வீட்டு விளைவும் பூமி வெப்பமாதலும்


பூமியின் எல்லாப் பகுதிகளையும் பாதிக்கின்ற உலகளாவிய சூழற் பிரச்சினைகளில் முக்கியமான ஒரு காரணியாக இனங்காணப்பட்டுள்ளதே பச்சை வீட்டு விளைவும் பூமி வெப்பமாதலும்.

பூமியின் மேற்பரப்பின் மீது விழுகின்ற வெப்பக்கதிர்களில் ஒரு பகுதி அண்டவெளிக்குள் தெறிக்கப்படாதவாறு வளிமண்டலம் தடுக்கின்றது. ஆகவே இதன் காரணமாக பூமியின் வெப்பநிலையானது உயர்கிறது. பூமியில் பகல் வெப்பநிலைக்கும் இரவு வெப்பநிலைக்கும் இடையே பாரிய வேறுபாடு காணப்படுவதில்லை. ஆனால் சந்திரனில் வளிமண்டலம் இல்லாததன் காரணமாக பகல் அதிக வெப்பமாகவும் இரவு அதிக குளிராகவும் காணப்படுகின்றது. ஆகவே இந்தப் பிரச்சினையானது வளிமண்டலத்தின் அமைப்புடன் தொடர்புபட்டு காணப்படுகின்றது.





குளிர்நாடுகளில் தாவரங்களை வளர்க்கப் பயன்படும் நான்கு பக்க சுவர்களையும் கண்ணாடிக் கூரையும் கொண்ட அமைப்பானது பச்சைவீடுஎன என அழைக்கப்படுகின்றது. பச்சைவீடுகளின் நோக்கமாவது வெளி வெப்பநிலையிலும் உயர் வெப்பநிலையை உள்ளே ஏற்படுத்துவது ஆகும். கண்ணாடிக்கூரையானது உள்ளே புகும் சிவப்புக் கதிர்களில் ஒரு பகுதி வெளியே போகாதவண்ணம் தடுக்கின்றது. பூமியை சூழ்ந்துள்ள வளிமண்டலமும் பச்சை வீட்டின் கண்ணாடிக் கூரை போன்றே தொழிற்பட்டு பூமியின் வெப்பநிலையை உயர்த்துகின்றன.

பொதுவாக வளி மண்டலத்திலுள்ள காப னீரொட்சைட் , நைதரசன் ஒட் சை ட்டுக்கள், நீராவி, ஓசோன் போன்ற வாயுக்கள் பூமி யின் வெப்பநிலை உயர்வுக்கு காரணமாகி ன்றன. எனவே இவை பச்சை வீட்டு வாயுக்கள் எனப்படுகின்றன.




பூமியின் வெப்பநிலை பச்சை வீட்டு வாயுக்களால் நிர்ணயிக்கப்படுகின்றது. அவற்றின் செறிவு கூடும் போது அவற்றால் பிடித்து வைக் கப்படும் வெப்பத்தின் கணியமும் அதிகரிக் கும். ஆகவே பூமியின் வெப்பநிலையும் உயரும்.

பல்வேறு வழிகளில் பச்சை வீட்டு வாயுக்களின் செறிவானது பூமியில் அதிகரித்து பூமியின் வெப்பநிலையை உயர்த்துகின்றது.





கைத்தொழில் புரட்சியின் விளைவாக உயிர்ச்சுவட்டு எரிபொருட்களின் பாவனை காரணமாக பிரதான பச்சைவீட்டு வாயு காபனீரொட்சைட் ஆனது வளிமண்டலத்தில் புகுத்தப்படும் அளவு அதிகரித்தது. கைத்தொழில் புரட்சியின் ஆரம்பகாலத்தில் $280^0$ ppm ஆக இருந்த காபனீரொட்சைட் மட்டம் இன்று $353^0$ppm ஆக அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வளிமண்டலத்தில் பிரதான பச்சைவீட்டு வாயுவான $Co_2$ அதிகரிப்பதற்கு காடழிப்பும் ஒரு முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது. மரங்களை வெட்டுவதால் ஒளித் தொகுப்புக்கு தாவரங்களால் பயன்படுத்தப்படும் காபனீரொட்சைட்டின் செறிவு குறைகிறது. ஆகவே அவை வளிமண்டலத்தில் விடப்படுகின்றன.




ஏனைய பச்சைவீட்டு வாயுக்களான மீதேன், நைதரசன் ஒட்சைட்டுகளின் செறிவும் கைத்தொழில் புரட்சியின் விளைவால் வளிமண்டலத்தில் அதிகரித்துள்ளது.

மீதேனானது சகதிகள், நெல் வயல்களிலிருந்தும் வெளிவருவதுடன் கால்நடைகள் இரை மீட்கும்போதும் உருவாகிறது.




தற்போது வளியில் பச்சைவீட்டு வாயுக்களின் செறிவானது அதிகரித்து வருகின்றது. அண்மைக்காலங்களில் பூமியின் சராசரி வெப்பநிலையானது உயர்ந்து காணப்படுகின்றது. பூமியின் சராசரி வெப்பநிலையில் ஏற்படும் உயர்வானது புவி வெப்பமடைதல் எனப்படுகின்றது.பூமியின் சராசரி வெப்பநிலை உயர்வானது பல விளைவுகளை ஏற்படுத்துகின்றது.




வெப்பநிலை உயர்வதால் பொருட்கள் விரிவடையும். இவ் வாறே தரையிலும் கடலிலும் உள்ள நீரும் விரிவடைகின்றது. கடல்நீர் விரிவடைவதால் நீரின் கனவளவு அதிகரிக்கும். ஆகவே கடலின் நீர்மட்டம் உயரும். மேலும் துருவப் பிரதேசங்களிலுள்ள பனிக்கட்டிகள் உருகுவதால் கடலின் மட்டம் மேலும் உயரும்.

இவ்வாறாக கடல்மட்டம் உயர்வதால் கடற்கரை மெதுவாக நிலத்தை நோக்கி நகரும். ஆகவே கடல் மட்ட த்திலுள்ள பல பிரதேசங்கள் கடலுக்குள் அமிழ்ந்துவிடும் அபாயம் காணப்படுகின்றது.

பூமியின் மேற்பரப்பு வெப்பமாகையில் வளியும் சூடாவதால் உலகின் காற்றோட்டக் கோலங்களும் காலநிலையும் பாதிக்கப்படுகின்றது.இவ்வாறாக வெப்பநிலையிலும் மழை வீழ்ச்சியிலும் ஏற்படும் மாற்றங்கள் விவசாயம், தாவரங்களின் பரம்பல், பாலைவனம்,புல்நிலங்கள்,காடுகள் என்பவற்றைப் பாதிக்கின்றது.

புவி வெப்பமடைதலில் காபனீரொட்சைட் ($Co_2$) பெரும்பங்கு வகிக்கின்றது. எரிபொ ருட்களின் தகனம்மூலமே பெருமளவு $Co_2$ வளியினுள் விடுவிக்கப்படுகின்றது. இதைக் கட்டுப்படுத்துவது மிக அவசியம். உயிர்ச் சுவட்டு எரிபொருட்களின் உபயோகத்தை குறைப்பதன்மூலமும் அவற்றின் பூரண தகனமடையும் வழி முறைகளை கையாள்வதன் மூலமும் $Co_2$ வளியில் விடுவிக்கப்படும் கணியத்தைக் குறைக்கலாம்.

புவிவெப்பமடைதலின்விளைவுகள் பல உலகளாவியவை. எனவே அவற்றின் தீர்வும் உலகளாவியவை. எனவே பல நாடுகள் சேர்ந்து நடவடிக்கை எடுத்தல் அவசியம். அத்தோடு எமது பெறுமதிமிக்க சுற்றுச்சூழலை பாதுகாப்பது எம் ஒவ்வொரு வரதும் கடமையாகும். எனவே கடமை உணர்ந்து செயற்படுவோமாக.



செல்வி தாமிரா வீரசிங்கம்
(தாவரவியல் 4 ஆம் வருட மாணவி)

## வாரத்திற்கு ஒரு புதிர்! 117

இலங்கையின் தேசிய பறவையின் விலங்கியல் பெயர் என்ன?

**புதிர் 116 இற்கான விடைகளை 15.09.2014 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டிய முகவரி:**

திரு.க.கஜபதி
ஆசிரியர் பிரிவு A
யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம்,
விரிவுரையாளர், விலங்கியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.
P.D.BOX 57, திருநெல்வேலி.

**சரியான விடையை அனுப்பும் அதிர்ஷ்டசாலிக்கு ரூபா 250/- பணப்பரிசு வழங்கப்படும்.**
இப் பணப்பரிசினை யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் திரு.A.C.தவரஞ்சித்திடம் நேரில் சென்று பெற்றுக் கொள்ளலாம்.

**பரிசுக்கு அனுசரணை வழங்குவோர்:**
யாழ். பல்கலைக்கழகம்.

**புதிர் 116 க்கான 250/- பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி**

என். அருள்ஜீவன்
5/10, அச்சகவீதி,
யாழ்ப்பாணம்.

**புதிர் 116 க்கான கேள்வியும் விடையும்:**
2013 ஆம் ஆண்டில் பௌதீகவியலில் நோபல் பரிசு வென்றவர் யார்?
François Englert and Peter W. Higgs


### யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் புதிர் இல. 117

சரியான விடை:-......................................................
முழுப்பெயர்:-......................................................
முகவரி:-......................................................
தொ.பே. இல:......................................................
கையொப்பம்:......................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## நீளமான கார்



உலகிலேயே மிக நீளமான சொகுசு கார் ஒன்றை கலிபோர்னியாவில் உள்ள ஜே ஒபெர்க் நிறுவனம் தயாரித்துள்ளது. இந்த காரின் நீளம் 100 அடி. 26 சக்கரங்களை கொண்ட இந்த காரில், புகையிரதங்களில் உள்ளது போல் முன்பகுதியில் ஒரு சாரதி கேபினும், பின் பகுதியில் ஒரு சாரதி கேபினும் அமைந்துள்ளது.

குறுகிய தெருக்களிலும் சுலபமாக திரும்பும் வகையில், காரின் நடுப்பகுதி வளைந்து, மடியும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. ,வெறும் கண்காட்சிகளில் வைக்கும் நோக்கத்தில் மட்டுமே இந்த கார் முதலில் தயாரிக்கப்பட்டது.

## ஆடையின் நீளத்தில் அனைவரும் வியந்தனர்



லண்டனைச் சேர்ந்த பிரபல ஆடை வடிவமைப்பாளர் ஹென்றி ஹோண்ட் உலகிலேயே மிக நீளமான ஆடையை தயாரித்துள்ளார்.

கவுண் வடிவிலான இந்த ஆடை 1500 சதுர அடி அகலமும், 150 அடி நீளமும் கொண்டது. பட்டினால் தயாரிக்கப்பட்ட இந்த கவுணில் சிவப்பு மற்றும் மஞ்சள் நிற புள்ளிகள் வைக்கப்பட்டுள்ளன.


இந்த ஆடை அறிமுக நிகழ்ச்சி லண்டனில் உள்ள டிரின்ட்டி லீட்ஸ் ஷொப்பிங் சென்டரில் நடந்தது.

அப்போது அங்கு கூடியிருந்த ஆயிரக் கணக்கானோர் மத்தியல் ஒரு இராட்சத பரிசு பெட்டியில் இருந்து பிரபல மொடல் அழகி கோலெட் மார்ரோ தோன்றினார்.

அவர் ஹென்றி ஹேலண்ட் வடிவமைத்திருந்த இந்த கவுணை அணிந்து இருந்தார். இந்த ஆடை, விழாவில் பங்கேற்ற அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது.

இது குறித்து ஆடை வடிவமைப்பாளர் ஹென்றி ஹோலண்ட் கூறும்போது, பூச்சிகள் அவற்றின் சிறகுகளே இந்த ஆடை தயாரிக்க என்னை தூண்டின என்று தெரிவித்துள்ளார்.

## குள்ளமான அதிசய மனிதர்



72 வயதான Chandra Bahadur Dangi என்று அழைக்கப்படும் நேபாளி உலகின் குள்ளமான மனிதராக உள்ளார்.


56 சென்ரி மீற்றர்கள் அல்லது 22 இஞ்சிகள் தான் இவரின் உயரம்.

விரைவில் இவர் கின்னஸ் சாதனைப் புத்தகத்தில் உலகின் குள்ளமான மனிதராக இடம்பிடிக்கப் போகின்றார்.

அதற்கு முதல் அவரை நாங்கள் உங்களுக்கு அறிமுகப்படுத்துகின்றோம்.

தான் உலகில் புகழ் பெற்ற நபராக வரப் போவதாகவும், உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று எல்லோருடனும் பேசிப் பழக ஆசையாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார் அந்த குள்ள மனிதர்.

## இரத்தம் சிந்தும் ட்ராகன் மரங்கள்



ஆபிரிக்க காட்டுப் பகுதியில் வளரும் ஒருவகை மரங்கள் இரத்த சிவப்பு பிசின்களை சிந்துகின்றது. மரத்தின் பட்டைகளுக்கிடையில் கசியும் சிவப்பு நிறத்திலான பிசின் காய்ந்து மரத்தை வெட்டியதும் சிவப்பு நிற் திரவமாக வழிகிறது.

இது பார்ப்பதற்கு இரத்தம் போன்று இருப்பதால் பலரும் இதனை ட்ராகன் மரம் என அழைக்கின்றார்கள். பல்வேறு மருத்துவக்குணங்கள் கொண்ட இந்த மரம் பல தேவைகளுக்காக வெட்டப்படுவதோடு நிறப்பூச்சுக்களுக்கும் பயன்படுகிறதாம்.

## இராட்சத கட்டி



சீனாவில் பீஜிங்கில் 37 வயதுடைய Yang Jignbin எனும் நபருக்கு வளர்ந்து வந்த 110 கிலோ கிராம் எடையுடைய இராட்சத கட்டியை 16 மணி நேர சத்திர சிகிச்சை மூலம் 9 சத்திர சிகிச்சை நிபுணர்கள் இணைந்து அகற்றியுள்ளனர்.

## குட்டி வயலின்



76 வயது நிரம்பிய டேவிட் எட்வார்ட் என்ற பிரபலமான இசைக் கலைஞர் உலகிலேயே மிகச் சிறிய வயலின்களை வடிவமைத்துள்ளார். இவற்றின் நீளமானது வெறும் 1.5 அங்குலமே ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மோடி 100: தெற்காசியாவில் வல்லரசு: சொல்லாமல் சொன்ன பிரதமர் மோடி!

எங்கு பார்த்தாலும் ஊறிக் கிடந்த ஊழல், நசுக்கப்படும் ஜனநாயகத்தின் குரல்வளை, நகராமல் தேங்கி நின்ற பொருளாதாரம், சுதந்திரம் பெற்று 67 ஆண்டுகள் ஆகியும் அடிப்படை வசதிகளை காணாத கிராமங்கள், ஏழைகள் ஏழைகளாகவே இருக்க பணத்தில் கொழித்த அரசியல்வாதிகள்... இப்படியான சமுதாய அபாயங்களுக்கு எப்போதுதான் விடிவு என சராசரி இந்தியர்கள் ஏங்கிக்கொண்டு இருந்தபோது வந்தவர் தான் நரேந்திர மோடி.

பிரதமராக மோடி பணியைத் துவக்கி 100 நாட்கள் நிறைவடைந்திருகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சி செய்யப்போகும் ஒரு அரசுக்கு இது குறைவான நாட்களாக இருந்தாலும், ஒரு அரசின் முழு செயற்பாட்டை அதற்குள் எடைபோட முடியாது என்றாலும்... இதுவரை மோடி அரசின் செயறபாடு மக்களிடையே பரவலாகப் பாராட்டையே பெற்றுள்ளது. இதோ, முக்கிய துறைகளில் மோடி அரசின் செயற்பாடுகள்:

தெற்காசியாவில் இந்தியா ஒரு வல்லரசு என்பதை உணர்த்தும் விதமாக, மே.26 இல் பிரதமர் மோடியின் பதவியேற்பு நிகழ்ச்சி அமைந்தது. இவ்விழாவுக்கு யாரும் எதிர்பாராத வகையில் சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்தார் மோடி. இதில் என்ன விசேஷம் என்றால், இந்தியாவுக்கு அடிக்கடி தொல்லை தரும் பாகிஸ்தானும் ஒன்று. இதன்மூலம் ஆசிய நாடுகளுடன்நல்லுறவை பேணும் தமது கொள்கையை எதிர்க்கட்சிகளுக்கு மட்டுமல்லாமல், உலக நாடுகளுக்கும் உணர்த்தினார். ஒரு இந்திய பிரதமரின் பதவியேற்பு விழாவில், சார்க் நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பது, இந்திய அரசியல் வரலாற்றில் முதல்முறை.

இதன்மூலம் தெற்காசிய நாடுகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி ஒரு தகவலை சொல்லாமல் சொன்னார்.

1. தெற்காசியாவில் முக்கிய நாடான இந்தியாவில் பல ஆண்டுகளுக்குப் பிறகு தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைந்துள்ளது. அதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

2.தெற்காசியாவில் இந்தியர்தான் இப்போதும் வல்லரசு. எனவே, இந்திய விஷயத்தில் "வாலாட்டாதீர்கள" என்பதே அது. இதற்குப்பின் பிரதமர் நரேந்திர மோடி, முதல் வெளிநாட்டு பயணமாக பூட்டானுக்கு சென்றார். பின், பிரேசிலில் நடந்த "பிரிக்ஸ்" மாநாட்டில் பங்கேறார்.அம்மாநாட்டில் ரஷ்யா, சீனா, தென்ஆப்ரிக்கா மற்றும் பிரேசில் நாட்டு தலைவர்களைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

"பிரிக்ஸ" அமைப்பின் சார்பில், பொருளாதார வங்கி ஒன்று தொடங்கவும் முடிவு எடுக்கப்பட்டது. அதன்பின் அண்டை நாடான நேபாளம் சென்றார். அங்கு அந்நாட்டு பார்லிமென்டில் உரை நிகழ்த்தினார்.

17 ஆண்டுகளுக்குப்பின், ஒரு இந்திய பிரதமர் சென்ற நேபாள பயணமாக அது அமைந்தது. சமீபத்தில் ஆசியாவின் தொழில் வளர்ச்சியில் பெரிய நாடாக திகழும் ஜப்பானுக்கும் பயணம் செய்தார். இதன்மூலம் பிரதமர் நரேந்திர மோடி சில விஷயங்களை உரக்க உச்சரித்துள்ளார்.

அவை: 1. நாங்கள் (இந்தியா) உங்களுக்கு (பூடான், நேபாளம்) எல்லா விதத்திலும் உதவத் தயாராக இருக்கிறோம். சீனாவின் பக்கம் சாயாதீர்கள்.

2. சீனாவால் பாதிக்கப்பட்டுள்ள நீங்கள் (ஜப்பான்) கவலைப்படாதீர்கள். நாங்கள் உங்களுடன் இருக்கிறோம் என்பவை தாம் அந்த தகவல்கள். இதன்மூலம் சீனாவின் ஆதிக்கத்திற்கு அணை போட்டுள்ளார் பிரதமர் நரேந்திரமோடி.

உலகின் வல்லரசு நாடாக இருக்கும் அமெரிக்கா இதற்குமுன் பிரதமர் நரேந்திர மோடிக்கு விசா வழங்க மறுத்து வந்தது. ஆனால், அவர் பிரதமரானவுடன், தாமாக முன்வந்து அமெரிக்காவுக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளது. இவையெல்லாம் மோடியின் வெளியுறவு கொள்கைக்கு கிடைத்த வெற்றிகள்.

### "சூப்பர் ஸ்மார்ட" சிட்டிகள்:

பிரதமர் நரேந்திர மோடி, தேர்தல் வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றிவருகிறார். அதன்படி 100 நகரங்களில் ஸ்மார்ட் சிட்டி அமைத்தல், நெடுஞ்சாலைகள் மேம்படுத்துதல், சிறிய நகரங்களில் விமானசேவை, கங்கை நதியைத் தூய்மைப்படுத்துதல் போன்ற திட்டங்களை சொல்லலாம்.

### 100 ஸ்மார்ட் சிட்டி :

மோடி அரசின் தொலை நோக்குத் திட்டங்களில் ஒன்றாக, நாடு முழுவதும் "100 நகரங்களில் ஸ்மார்ட் சிட்டி அமைக்கப்படும" என்ற அறிவிப்பு அதிசயமாக பார்க்கப்படுகிறது. இத்திட்டம் இப்போது அவர் மனதில் உதித்தது அல்ல. இது ஏற்கனவே அவர் குஜராத் முதல்வராக இருக்கும் போதே சாதித்துக் காட்டியது. அங்கு "கிப்ட்" (கிரீன்பீல்டு குஜராத் இன்டர்நேஷனல் பைனான்ஸ் டெக்-சிட்டி) எனும் நகரம் வடிவமைக்கப்பட்டு வருகிறது. இதற்காக 11 மில்லியன் சதுர கி.மீ., நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை நாடு முழுவதும் செயறபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இத்திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இதற்காக முதற்கட்டமாக 7,060 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஒரு நகரத்துக்குத் தேவையான அனைத்து அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தித் தரப்படும். கம்ப்யூட்டர் துறையில் எப்படி, முதன் முதலில் ஐ.பி.எம் மற்றும் சிஸ்கோ நிறுவனங்கள் மட்டுமே இருந்து, பின் நிறைய நிறுவனங்கள் வந்தனவோ, அதேபோல சில ஸ்மார்ட் நகரங்களை உருவாக்கிவிட்டால் அதை வைத்து நிறைய் நகரங்கள் உருவாகும் என்பது பிரதமர் நரேந்திர மோடியின் கணிப்பு. இந்த 100 நகரங்களில் சில ஏற்கனவே வளர்ந்து வரும் நகரங்களாக உள்ளன. அமிர்தசரஸ், கொல்கத்தா, பெங்களூர் சென்னை, விசாகப்பட்டினம் ஆகிய நகரங்களுக்கிடையே சில நகரங்கள், இதற்கான வசதிகளுடன் ஏற்கனவே உருவாகி வருகின்றன. இதற்கு அரசு முன்னுரிமை அளித்து உதவி செய்தால் இந்நகரங்களை "100 ஸ்மார்ட் நகரங்களில்" ஒன்றாக உருவாக்கலாம்.

### சாலைபோக்குவரத்து :

வாஜ்பாய் தலைமையிலான முந்தைய பா.ஜ., ஆட்சியில்தான் நாட்டில், தங்க நாற்கர சாலை திட்டம் உருவானது. இதன்படி, இன்று நாட்டின் முக்கிய நகரங்கள் நான்கு வழிச் சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளன. அதேபோல, பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான அரசும் சாலை போக்குவரத்துக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளது. அதன்படி அத்துறைக்கான அமைச்சர் நிதின் கட்காரி, ஆண்டுதோறும் குறிப்பிட்ட கி.மீ., தூரத்துக்கு சாலைகள் தரமானதாக அமைக்கப்படும் என தெரிவித்துள்ளார். புதிய திட்டங்களை தொடங்குவது தொடர்பாக அத்துறைக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. இதன்படி 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்குவதற்கு, சாலைப் போக்குவரத்து அமைச்சகமே முடிவு எடுத்துக்கொள்ளலாம். இதற்குமுன் இந்த உச்சவரம்பு 500 கோடி ரூபாயாக இருந்தது. சாலை, ரயில், விமானம், சுற்றுச்சூழல் ஆகிய அமைச்சகங்கள் சார்பில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. இதனால் புதிதாக சாலை அமைக்கும்போது ஏற்படும் சுற்றுச்சூழல் அனுமதி, ரயில் பாதை குறுக்கீடு போன்ற சிரமங்களுக்கு நான்கு அமைச்சர்கள் சந்திக்கத் தேவையில்லை. இந்தக்குழுவே இதனை ஆராய்ந்து இப்பிரச்சினையை தீர்த்துவிடும். தற்போது ஒரு ஒப்பந்தம் முடிக்கப்பட்டு பயன்பாட்டுக்கு வந்து, 2 ஆண்டுகளுக்குப் பின்னர்தான் ஒப்பந்ததாரர்கள் "ரிலீஸ்" செய்யப்படுகின்றனர். ஆனால், இனி பயன்பாட்டுக்கு வந்தவுடனேயே, ஒப்பந்ததாரர்கள் "ரிலீஸ்" செய்யப்படுவர். இதற்கு பெரும்பாலான நிறுவனங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன. புல்லட் ரயில் திட்டத்தை ஜப்பான் உதவியுடன் செயறபடுத்த பிரதமர் நரேந்திர மோடி திட்டமிட்டுள்ளார்.

### சிறிய நகரங்களுக்கும் பறக்கலாம்:

தற்போது பெரிய நகரங்களுக்கு மட்டுமே விமான வசதி உள்ளது. மோடி பொறுப்பேற்ற பின், சிறிய நகரங்களுக்கு விமான சேவை விரிவுபடுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது. இதன்படி சமீபத்தில் 6 புதிய ஏர்லைன்ஸ் நிறுவனங்களுக்கு விமானத்துறை அமைச்சகம் அனுமதி வழங்கியுள்ளது. விமான சேவை கிடைக்காத பகுதிகளில் சேவையைத் தொடங்க, விமானத் துறை அமைச்சகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. ஐந்து சிறிய விமான நிலையங்களை விரிவுபடுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. இங்கு 10 முதல் 70 இருக்கைகள் மட்டுமே கொண்ட விமானங்கள் இயக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. அதே நேரத்தில் விமான சேவை அனைவருக்கும் கிடைக்கும் நோக்கத்தில், எரிபொருளுக்கான வரியைக் குறைத்து கட்டணமும் குறைவதற்கு மாநில அரசுகள் உதவ வேண்டும் என மத்திய அரசு வலியுறுத்தியுள்ளது. ஏனெனில், தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி செய்யும் மாநிலங்களில் விமான எரிபொருளுக்கான வரி 4% வரை குறைக்கப்பட்டுள்ளது.

### கங்கைக்கு புதிய சுவாசம்:

நாட்டின் நீண்ட, வற்றாத நதி கங்கை. கங்கையில் குளித்தால் பாவங்கள் தீரும் என்பது பக்தர்களின் நம்பிக்கை. இன்று கங்கையின் நிலை பரிதாபத்துக்குரியதாக உள்ளது. எங்கு பார்த்தாலும் அசுத்தம். சாக்கடை நீர் கலத்தல், ஆக்கிரமிப்புகள் என கங்கை நிறம் மாறி வருகிறது. இந்நிலையில் பிரசாரத்தின்போது, கங்கை நதி தூய்மைபபடுத்தப்படும் என பிரதமர் நரேந்திர மோடி அறிவித்தார். அதன்படி பதவியேற்றவுடன் கங்கையை தூய்மைப்படுத்தி, அப்பகுதிகளில் வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் அத்துறைக்கு புதிதாக தனி அமைச்சகத்தையும் தொடங்கினார். கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான உமா பாரதி அமைச்சராக நியமனம் செய்யப்பட்டார். இத்திட்டம் கடினமானது. சுற்றுச்சூழல் மட்டுமல்ல, மத ரீதியாகவும் இந்நதிக்கு தொடர்புள்ளதால், இப்பணி சவால் நிறைந்தது. ஒவ்வொரு நாளும் பல்வேறு நகரங்களிலிருந்து 2,723 மில்லியன் லிட்டர் கழிவுநீர் கங்கையில் கலக்கிறது. இதில் தற்போதுள்ள வசதிகளின்படி, ஒரு நாளைக்கு 1,208 மில்லியன் லிட்டர் கழிவு நீரைத் தான், சுத்திகரிக்க முடியும். மீதி கழிவுநீர் கங்கையில்தான் கலக்கிறது என்கின்றனர் நிபுணர்கள். இதை சவாலாக ஏற்ற பிரதமர் நரேந்திர மோடி அரசு கங்கையை சுத்தப்படுத்தி வாரணாசி முதல ஹூக்ளி வரை போக்குவரத்துக்கு பயன்படுத்த திட்டமிட்டுள்ளது.

### வெள்ளையாகும் கறுப்பு:

பிரதமர் நரேந்திர மோடியின் அரசு பொருளாதாரத்தை மேம்படுத்த பல்வேறு திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. அதன் முதற்கட்டம்தான் கறுப்பு புணத்தை வெளியில் கொண்டுவரும் திட்டம். செல்வந்தர்களிடம் குவிந்து கிடக்கும் இந்த பணத்தை கண்டறிந்து கொண்டு வருவது மத்திய அரசுக்கு சவாலான விஷயம். அதற்காக சில ஆண்டுகள் திட்டமிட்டு செயற்பட வேண்டும். பொருளாதாரச் சட்டத்தை இன்னும் கடுமையாக்க வேண்டும். இந்த பணியை சரியாக செய்து முடித்தாலே பொருளாதா ரம் குறிப்பிட்ட வளர்ச்சியை எட்டும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். இதன் முதறபடியாக வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் எவ்வளவு பணம் வைத்துள்ளனர் என்ற விவரம் பெறப்பட்டுள்ளது. கருப்புப் பணம் குறித்து விசாரிக்க சிறப்பு புலனாய்வு குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. வரி ஏய்ப்பு செய்பவர்கள் அதை கறுப்பு பணமாக மாற்று கின்றனர். இதை தடுக்கும் வகை யிலும், அனைவரையும் வரி செலுத்த ஊக்குவிக்கும் வகையிலும் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. விலைவாசி உயர்வுக்கு பணவீக்கமும் ஒரு முக்கிய காரணமாகிறது. இதைக் கட்டுபடுத்த பணிகள் நடந்து வருகின்றன. பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பிரதமரின் "ஜன் தன் யோஜனா" திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் ஒரு வீட்டுக்கு ஒரு வங்கி கணக்காவது துவக்கப்படும். வங்கி கணக்கு துவக்குபவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான ஆயுள் காப்பீடும், கடன் அட்டையும் வழங்கப்படுகிறது. இதனால் நாட்டு மக்கள் அனைவரும் பொருளாதார வளர்ச்சியில் பங்கெடுக்க முடியும் என்பது மோடியின் திட்டம்.

### சீராகும் அரசு இயந்திரம்


ஒரு அரசின் செயற்பாடு நிர்வாகத்தை வைத்தே கணக்கிடப்படுகிறது. அதனால் நிர்வாகத்தின்மீது தனிக் கவனம் செலுத்துகிறார் பிரதமர் நரேந்திர மோடி. பிரதமர் அலுவலகத்திலிருந்தே நிர்வாக மாற்றத்தைத் துவக்கியுள்ளார். அவரது அலுவலகத்தில் குறிப்பிட்ட பணிக்கு சரியான நபரைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்தினார். குறைந்த அமைச்சர்கள் இருந்தால தான் சிறந்த நிர்வாகத்தை தர முடியும் என முடிவு செய்தார். அமைச்சர்களின் செயற்பாட்டில் பல்வேறு மாறுதல்களைக் கொண்டு வந்தார். சரியான நேரத்துக்கு வரவேண்டும், பணியை குறிப்பிட்ட நேரத்துக்குள் முடிக்க வேண்டும். உறவினர்கள், நண்பர்களை செயலர்களாக நியமிக்கக்கூடாது என உத்தரவிட்டார்.அரசில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும் என்பது பிரதமர் நரேந்திர மோடியின் எண்ணம். அதனால் அரசின் செயற்பாடுகள் மக்களுக்கு தெரிய நடவடிக்கை எடுத்துள்ளார். மேலும் அரசு எந்திரம் துரிதமாக செயற்பட இ-கவர்னன்ஸ் முறை அனைத்து அரசு அலுவலகங்களிலும் வர உள்ளது. அரசு அதிகாரிகளும் பொறுப்புடன் செறபட பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

-இணையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்வாகப் பயங்கரவாதம் தலைதூக்கி வருகின்றதா?

## நீதியமைச்சர் ஹக்கீம்



பயங்கரவாதம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டதன் பின்னர் நிர்வாக பயங்கரவாதம் தலைதூக்கியுள்ளதோ என்ற அச்சம் சிறுபான்மையின மக்களிடையே தோன்றியுள்ளதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்ரஸின் தலைவரும் நீதிய மைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கிண்ணியாவில் நேற்று முன் தினம் நடைபெற்ற வைத்திய நிபுணர்களுக்கான விடுதிக் கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

சிறுபான்மையின மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் நான் கலந்துகொள்ளும் ஒவ்வொரு நிகழ்விலும் தமிழில் தேசிய கீதத்தை பாடும் நிகழ்ச்சிகளையே ஏற்பாடு செய்வேன்.

நேற்று கிண்ணியாவில் அதை துணிவோடு செய்தார்கள். நான் அதற்காக இங்குள்ள ஏற்பாட்டாளர்களைப் பாராட்டுகின்றேன்.

ஓர் உத்தியோகபூர்வ நிகழ்வில் தேசிய கீதத்தை சிங்களத்தில் மட்டும் தான் பாட வேண்டும் என்று ஒரு தேவையில்லாத வலுக்கட்டாயம் திணிக்கப்படுகின்றது.

இந்தத் திணிப்புக்கெதிராக பேசுவதற்கும் அதற்குகெதிராக துணிவோடு நடப்பதற்கும் எங்களால் முடியவில்லை என்றால் நாங்கள் இந்த ஆட்சியில் பங்காளியாக இருப்பதில் அர்த்தமில்லை.

எந்த மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொண்டுவரப்பட்ட பின்னர் அந்த இரண்டு மொழிகளிலும் தேசிய கீதத்தை பாடுவதில் என்ன தவறு இருக்கின்றது.

ஆணைக்குழுவை அமைத்து அதைச் செய்வோம் இதைச் செய்வோம் என்று சர்வதேசத்துக்கு பறைசாற்றுவதில் எந்த அர்த்தமுமில்லை.

எனவேதான் இந்த நாட்டில் நீதி அமைச்சராக இருந்து கொணடும் அரசாங்கத்தில் அங்கமாக இருந்து கொண்டும் இந்த விடயத்தில் கொஞ்சம் பிடிவாதப்போக்கை நான் கடைப்பிடிக்கிறேன்.

அரசியல் அமைப்பில் இருக்கின்ற விடயத்தை அனுபவிப்பதற்கு எங்களுக்கும் உரிமை இருக்கின்றது. அரசியல் அமைப்பில் இருக்கின்ற ஆயிரம் விடயங்களை இருப்பதே தெரியாமல் கிடப்பில் போடுகின்றார்கள்.

எங்கெல்லாம் போகப் பயப்பட்டார்களோ அந்த இடங்கள் எல்லாம் இன்று தொல்பொருள் ஆராய்ச்சி நடைபெறுகின்றது. இந்த நாட்டிலே தொல்பொருட்கள் எல்லாம் பாதுகாக்கப்படவேண்டும். தாராளமாக பாதுகா்ருங்கள். ஆனால், தொல் பொருள் ஆராய்ச்சி என்ற பெயரில் எல்லா விடயங்களிலும் முட்டுக் கட்டை போட்டுக் கொணடிருக்கின்றார்கள்.

நேற்று நில அளவையாளர்களுக்கு தொல்பொருள் ஆராய்ச்சக்கு காணி ஒதுக்கின்ற வேலைகளும் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், இவை சட்டம், நீதி, நியாய ஒழுங்குகளுக்கு கட்டுப்பட வேண்டும்.யுத்த காலத்தில் இல்லாத வனப் பரிபாலனங்கள் அதிகாரிகளுடைய அட்டகாசம் இப்பொழுது தலைவிரித்து ஆடுகின்ற கோலத்தில் எல்லோரும் இருக்கின்றார்கள்.

அன்றாட ஜீவனனோபாயம். அதிலே படுகின்ற கஷ்டம் என்பன அரசாங்கத்தின் வருமானத்தை கருதி இன்று வருமானத்துக்கு வாழ்வாதாரமே பாதிக்கின்ற அளவுக்கு நடக்கின்றது.

இப்போது இடங்களிலே சட்டம் அமுலாக்கப்படுவதில்லை. அசமந்தப் போக்கும் தாமதமுமே காணப்படுகின்றது. மக்களின் வாழ்வாதார விடயத்தில் கடுமையான போக்கு மிகப் பெரிய நெருக்கடி இன்று காணப்படுகின்றது.

நிர்வாக ரீதியாக ஒரு விதப் பயங்கரவாதம் இன்று காணப்படுகின்றது. இந்த நாட்டிலே ஆயுதப்பயங்கரவாதம் தொடங்கியுள்ளது. இதற்கு அன்றாடம் மக்கள் முகங்கொடுத்து வருகின்றனர் என ஹக்கீம் தெரிவித்துள்ளார். (இ)

# கட்டார் விமானம் கட்டுநாயக்கவில்

டோகாவுக்கும் அவுஸ்திரேலிய பேர்த் நகருக்கும் இடையில் பயணித்துக் கொண்டிருந்த கட்டார் எயார்வேய்ஸ் விமானம் ஒன்று கொழும்பு கட்டுநாயக்கவில் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

விமானத்தில் எரிபொருள் ஒழுக்கு ஏற்பட்டுள்ளதாக சந்தேகம் வெளியிட்டமையை அடுத்தே இந்த அவசர தரையிறக்கம் நேற்று முன் தினம் நிகழ்ந்தது.

விமானத்தின் ஒரு இயந்திரத்தில் பழுது ஏற்பட்டதாக விமானி சந்தேகம் வெளியிட்டுள்ளார். இந்த நிலையில் சுமார் 30 நிமிடங்களில் குறித்த விமானம் கட்டுநாயக்கவில் தரையிறக்கப்பட்டது.

எனினும் தரையிறக்கப்பட்ட பின்னர் விமானத்தின் இடது இறக்கையில் பிரச்சினை இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டு அது திருத்தப்பட்ட நிலையில் விமானம் 10 மணித்தியாலம் தாமதமாக பேர்த்தை சென்றடைந்தது. (இ)

# வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸார் தவறிவிடுகின்றனர்

## பவ்ரல் பாரிய குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸாரின் நடவடிக்கைகள் குறித்து பவ்ரல் அமைப்பு அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

ஊவா மாகாணத்தில் தேர்தல் விதி மீறல்கள் மற்றும் தேர்தல் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளதாக தெரிவித்துள்ளது.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஒருசில வேட்பாளர்களுக்கு பக்கச் சார்பாக செயற்பட்டு வருவதாகக் குற்றம் சுமத்தியுள்ளது.

தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்படுத்த பொலிஸ்மா அதிபரும், தேர்தல் ஆணையாளரும் நடவடிக்கைகளை எடுத்துள்ள போதிலும், அவை பொலிஸ் உத்தியோகத்தர்களினால் அமுல்படுத்தப்படுவதில்லை என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

குறிப்பாக மொனராகல மாவட்டத்தில் கடுமையான வன்முறைகள் மற்றும் தேர்தல் விதி மீறல்கள் இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரச அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் அதிகளவில் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.

அரசியல் தலைமைகளின் உத்தரவினை மீறிச் செயற்பட்டால் பாதக நிலைமைகள் ஏற்படக் கூடுமென்ற அச்சம் காரணமாக, அரச அதிகாரிகள் பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் போன்ற புத்திஜீவிகள் இந்த அரசியல் அழுத்தங்கள் குறித்து எதிர்ப்பை வெளியிடாமை அதிருப்தி அளிப்பதாகவும் அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டங்களைக் கொண்டு ஆளும்கட்சி வேட்பாளர்கள் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அவர் சுட்டிக் காடடியுள்ளார்.

வேட்பாளர்களின் நன்மதிப்பை உயர்த்தும் வகையில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார். (இ)

# இன்று ஒரு தகவல்

## பரதன்...

"என்னை யாரும் சரியாக புரிந்துகொள்கிறார்களில்லை சார்!'' என்றார் ஒருவர். ''இராமாயணத்தில் வரும் பரதனையே யாரும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லையே'' என்றேன்.

"என்ன சார் திடீரென்று இராமாயணத்துக்குப் போய் விட்டீர்கள்'' என்றார். இதோ பாருங்கள்! என்று எனக்கு வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தை அவரிடம் காட்டினேன். அதில் இதைப்பற்றி அவர் எழுதியிருந்தார். நல்லதையே நினைத்து நல்லதையே செய்தால் கூட சந்தர்ப்ப சூழ்நிலைகள் கெட்ட பெயரை வாங்கிக் கொடுத்துவிடும். இராமாயணத்திலேயே ஒரு சிறந்த கதாபாத்திரம் – பரதன். அப்படிப்பட்ட பரதனை அவனுக்கு நெருக்கமாக இருந்தவர்களே சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ஏன், பெற்றதாயே சரியாகப் புரிந்துகொள்ளவில்லை! புரிந்து கொண்டிருந்தால் என் மகனுக்கே பட்டம் சூட்ட வேண்டும் என்று தன் கணவனிடம் கேட்டிருப்பாரா?

இது தன் பிள்ளைக்கு பிடிக்காது என்பது அந்தத் தாயாருக்குத் தெரியவில்லை! எல்லாவற்றையும் கேள்விப்பட்டு அவன் வந்து திட்டும் போதுதான் அவன் எப்படிப் பட்டவன் என்பது அவருக்குப் புரிகிறது! சரி... அப்பாவாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டாரா?

அதுவும் இல்லை!

அண்ணன் இருக்கும் போது தம்பி அரசாள விரும்புவானா என்ற விடயம் அவருக்குத் தெரியவில்லையே! தெரிந்திருந்தால் வரம் கேட்ட மனைவியிடம் "நீ எனக்கு மனைவியில்லை'' என்று சொன்னதோடு நிறுத்தாமல் ''உன்மகன் பரதன் எனக்கு மகனல்ல!'' என்று வேறு சொல்லிவிட்டாரே!

சரி... அமைச்சர்களாவது அவனைச் சரியாகப் புரிந்துகொண்டார்களா? அதுவுமில்லை! தந்தையின் மறைவு அவனுக்குத் தெரிவிக்கப்படவில்லை! மாமன் வீட்டிலிருந்து தற்செயலாக ஊருக்குத் திரும்பி வரும் போது அவரிடம் என்ன.. முடிசூட்டுவிழா ஏற்பாட்டைச் செய்யலாமா? என்று கேட்கிறார்கள்.

பரதனை குகன் கூட சரியாகப் புரிந்துகொள்ளவில்லை. இவன் தாயை வெறுத்து கோபமாகப் பேசிவிட்டு மரவுரி தரித்து அண்ணனைப் பார்ப்பதற்காக காட்டுக்கு வரும் போது அவனைத் தவறாகப் புரிந்துகொண்டு அவனோடு சண்டையிடத் தயாரானான். இராமன், இலட்சுமணனாவது பரதனைச் சரியாகப் புரிந்து கொண்டார்களா?

பரதனைக்கண்ட இலட்சுமணன் கோபப்படுகிறான். இராமர் அவனைச் சாந்தப்படுத்தி பரதனைக் கூப்பிட்டு, "தம்பி... அரசாட்சி உனக்குச் சுகம் தருகிறதா?'' என்று கேட்கிறார். அவனைப் புரிந்துகொண்டிருந்தால் அப்படிக் கேட்டிருப்பாரா? இப்படிப் பலராலும் புரிந்துகொள்ள முடியாமல் போன பரிதாபத்துக்குரிய குணச்சித்திரம் தான் பரதன்.

ஆனால் பரதனைப் புரிந்துகொண்ட சிலரும் இராமாயணத்தில் உண்டு. பரதனைக் கண்ட குகன் யுத்தத்துக்குத் தயாராகும் போது, வேடர்களையெல்லாம் போருக்கு வருமாறு அழைக்கிறான். அவர்களெல்லாம் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு மௌனமாக இருக்கிறார்கள். குகனுக்கு கோபம் வந்தது. "ஏன் இப்படி நிற்கிறீர்கள்?'' என்று கேட்கிறான். அதற்கு அவர்கள்,

"தலைவா! பரதனைப் பார்த்தால் சண்டைக்கு வருபவன் மாதிரித் தெரியவில்லையே! இவனும் இராமன் மாதிரி மரவுரி தரித்து தவக்கோலத்தில் அல்லவா வருகிறான்... இவன் எப்படி இராமனுக்கு எதிரியாக இருக்க முடியும்?'' என்கிறார்கள்.

விடயம் தெரிந்தவர்களாலேயே சரியாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்தப் பாமர மனிதர்களான வேடர்கள் ஒரு பார்வையிலேயே புரிந்துகொண்டார்கள் பார்த்தீர்களா! என்று என்னிடத்தில் வந்து பேசிக்கொண்டிருந்தவரிடம் சொன்னேன். அவர் ''சார்... இப்ப நீங்கதான் என்னை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை!'' என்றார். "என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன்.

"இவ்வளவு விபரமும் உங்களுக்கு எழுதி அனுப்பிய வாசகரே நான்தான் சார்... என்னிடமே கதை அளக்கிறீர்களே!'' என்கிறார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகக் கட்டுப்பாட்டையிழந்த மோ.சைக்கிள் கம்பத்துடன் மோதி விபத்தில் சிக்கியுள்ளது

(கரணவாய்)

வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் பஸ் தரிப்பிட கம்பத்துடன் மோதியதில் அதில் பயணித்த இளைஞர் ஒருவர் 200 மீற்றர் தூக்கி எறியப்பட்டுள்ளார்.


இச்சம்பவம் நேற்று முன்தினம் புதன் கிழமை மாலை 5 மணியளவில் வடமராட்சி பகுதி குஞ்சர் கடை சந்தியில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி அதிவேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த குறித்த இளைஞர் திடீரென மோட்டார் சைக்கிளின் வேகத்தை குறைக்க எத்தணித்தார்.

இதேவேளை வேகக்கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் புதிதாக போடப்பட்டுள்ள பஸ் தரிப்பிட கம்பத்துடன் மோதியதில் இளைஞர் 200 மீற்றர் தூரம் தூக்கி வீசப்பட்டார்.

இதேவேளை இரு கால்களிலும் படுகாயமடைந்த நிலையில் மயக்கமடைந்துள்ளார். இதன்போது வீதியால் சென்றவர்கள் உதவியுடன் காப்பாற்றப்பட்டு மந்திகை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இதில் குடத்தனையைச் சேர்ந்த பரமசிவம்-விமலன் (வயது-26) என்பவரே இவ்வாறு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-60)




# சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் நேரக்கட்டுப்பாடுகளை மதித்தாக வேண்டும்

(கரணவாய்)

யாழ்.குடாநாட்டில் நகரப் புறத்தில் அமைந்துள்ள சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களையும் இரவு 9.30 மணியுடன் மூடுமாறும் அவ்வாறு மூடாது செயற்படும் உரிமையாளர்களுக்கு எதிராக தண்டப் பணம் அறவிடப்படும் எனவும் சிகையலங்கரிப்பாளர் சங்கம் அறிவித்துள்ளது.

இதனை நடைமுறைப்படுத்துவதற்கு தெரிவு செய்யப்பட்ட சில உறுப்பினர்கள் கிராமப் புறங்களுக்கு நேரத்துடனேயே சென்று மறைந்திருந்து கண்காணிப்பதோடு 9 மணிக்குப்பின் தொழிலில் ஈடுபடும் சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளர்களிடம் ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாகவும் அறவிட்டு வருகின்றனர்.

இதேவேளை தண்டப்பணமாக பெறப்படும் பணத்தில் 500 ரூபா கண்காணிப்பில் ஈடுபடுபவர்களுக்கு வழங்கப்படுவதால் தமது தொழிலில் அக்கறை காட்டாது ஏனைய தொழிலாளர்களை கண்டுபிடிப்பதில் அதிக ஆர்வம் காட்டுவதாக கிராமப்புறத்திலுள்ள சிகையலங்கரிப்பு நிலைய உரிமையாளர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சிகையலங்கரிப்பாளர் சங்கத்தின் இந்த நடவடிக்கையால் தமது பொருளாதாரம் பெரும் பாதிப்புக்குள்ளாகியதாகவும் தெரிவித்தனர்.(இ-60)

# போயா தினம் ஆகையால் மதுபானசாலை திறக்காது!

## காட்சிப்படுத்தலை தடுத்து நிறுத்தக் கோருகிறது வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம் வட பிரதேசத்தில் கடந்த 1972 ஆம் ஆண்டில் இருந்து புகைபொருள் போதைப் பொருள் பாவனையில் இருந்து மக்கள் விடுபட்டு நல்லொழுக்கத்தை கடைப்பிடித்து வாழ வேண்டும் என்ற கோட்பாட்டுக்காக பிரசார நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றது.

அந்த வகையில் மக்கள் கவனம் செலுத்தியதாக தெரியவில்லை. அப்படி இருந்தும் நாம் மனம் தளர விடாமல் எமது கொள்கையில் உறுதியாக இருக்கின்றோம். இத்துடன் இந்த பாவனையில் இருந்து விடுவதற்காக மக்களுக்கு பத்திரிகை வாயிலாகவும் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் தெரியப்படுத்தி வருகின்றோம். மேலும் இந்த செயற்பாட்டின் நடவடிக்கையின் நிமிர்த்தம் கடந்த நல்லூர் தேர்த்திருவிழா அன்று ஆலயத்தில் வைத்து துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டது.

மேலும் இன்று வீதிகள், ஒழுங்கைகள் பொது இடங்களிலும் மற்றும் பாடசாலைகள் முன்பும் பியரின் மற்றும் சாராயப் போத்தல்கள் என தினமும் காணப்படுகின்றது.

இதனால் மதுபானத்தின் விளம்பரங்கள் இலகுவாக இளம் சந்ததியினருக்கு செல்கிறது. இத்துடன் மதுபான விற்பனை நிலையத்தினரும் தங்கள் வியாபார நிலையத்தில் மக்களுக்கு தெரியத்தக்கதாக திகதியைக் குறிப்பிட்டு போயாதினம் ஆகையினால் மதுபானநிலையம் திறக்கப்படமாட்டாது என்று முன்கூட்டியே எழுதப்பட்டு வருகின்றது.

இதைப்பார்க்கும் மதுப்பிரியர்கள் முன்கூட்டியே குடிபான வகைகளைவாங்கிவைக்கிறார்கள். இதனால் மதுபானங்களை வீட்டுக்கு எடுத்துச் சென்று அதனை தவறான வழிகளில் பயன்படுத்தி வருகின்றார்கள்.

எனவே, மதுபான நிலையங்களில் போயா தினம் ஆகையால் மதுபான நிலையம் திறக்கப்படமாட்டாது என்று எழுதிக் காட்சிப்படுத்த வேண்டாம் என்று மதுபான நிலைய உரிமையாளர்களுக்கு சங்கானை பட்டின சபை வீதியில் அமைந்துள்ள பிரதேச நல்லொழுக்க சம்மேளன செயலாளர் செ.குமாரசிங்கம் (ஜே.பி) கேட்டுக் கொண்டுள்ளார்.

இதேவேளை மேற்படி விடயம் குறித்து யாழ்.அரசாங்க அதிபர், யாழ்.சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர், பிராந்திய இணைப்பாளர் ஹெல்தி லங்கா, வடக்கு மாகாண கல்வி அமைச்சர், வடக்கு மாகாண சுகாதார அமைச்சர், சங்கானை பிரதேச செயலர் ஆகியோருக்கும் அறிவித்துள்ளார். (இ)




# கலைமுகம் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக் கலாமன்றத் தின் கலை இலக்கிய சமூக இதழான கலைமுகம் 25 ஆவது வெள்ளி விழா ஆண்டில் வெளிவந்துள்ளது.

இதழின் பிரதம ஆசிரியர் நீ.மரியசேவியர் அடிகள் எழுதிய வேள்வித்திருமகன் ஆற்றுகையை முன் வைத்து ஒரு பதிவு குர்திஸ்தான் திரைப்பட நெறியாளர் பக்மன் ஹோபாடி ஆகிய பதிவுகளை தாங்கி இதழ் வெளியிடப்பட்டுள்ளது. (இ

# வடக்கு மாகாண ஆளுநர் நிதியிலிருந்து 20 நோயாளர்களுக்கு தலா 10 இலட்சம்

வடமாகாண ஆளுநர் நிதியத்தில் இருந்து வடமாகாணத்தைச் சேர்ந்த 20 நோயாளிகளுக்கு 10 இலட்சம் ரூபா நிதி உதவி வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் புதன் கிழமை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் இடம் பெற்றது.



வடமாகாணத்திற்கு உட்பட்ட மன்னார், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மாவட்டங்களைச் சேர்ந்த 20 நோயாளர்கள் குறிப்பாக இருதய நோயாளர்கள் உள்ளடங்கலாக இந்த நிதி உதவியை பெற்றுக் கொண்டார்கள்.

வடமாகாண ஆளுநர் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயகுரு வலி. வடக்கு பிரதேச செயலாளர், ஆளுநரின் செயலாளர், நோயாளர்களுக்கான காசோலைகளை வழங்கினார்கள்.

இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களும் நல்லமுறையில் வாழ வேண்டும். திடகாத்திரமான சுகதேகிகளாக அனைவரும் இருக்க வேண்டும் என்பதே இந்த நாட்டு ஜனாதிபதியின் விருப்பமும் எதிர்பார்ப்பும் ஆகும்.

இந்த வகையில் தான் நோயாளர்களுக்கான உதவிகளையும் கூட வழங்கி வருகின்றார் என வடமாகாண ஆளுநர் ஜி.ஏ்.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

வடமாகாண ஆளுநரினால் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் வைத்து நேற்று முன்தினம் புதன் கிழமை பல்வேறு அபிவிருத்தி செயற்பாடுகளுக்கான உதவித்திட்டங்களுக்கான மாவிட்டபுரம் பிரதேசத்தில் மீள்குடியேறிய மக்களுக்கு வாழ்வாதாரங்களை மேம்படுத்துமுகமாக 20 குடும்பங்களுக்கு தலா ஒரு குடும்பத்துக்கு 10 கூரைத் தகடுகளும் (சீற்), மின்சாரம் இல்லாத வீடுகளுக்கு லாம்பு விளக்குகளும் அத்துடன் 30 குடும்பங்களுக்கு நுளம்பு வலைகளும் இதன்போது தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி மற்றும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்களுக்கான நூலகப் புத்தகங்களும் கையளிக்கப்பட்டன. (இ

# ஞாயிற்றுக்கிழமை திறந்து திங்கட்கிழமை மூடுங்கள்

## நெல்லியடி வர்த்தக சங்கம் அறிவிப்பு

(கரணவாய்)

செல்வச்சந்நிதி தேர்த்திருவிழா எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வடமராட்சிப் பகுதிகளில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் திறக்கப்பட வேண்டும் என நெல்லியடி வர்த்தக சங்கத் தலைவர் க.யோகேந்திரம் அறிவித்துள்ளார்.

இதற்குப் பதிலாக மறுநாள் திங்கட்கிழமை அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு இருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

செல்வச்சந்நிதி தேர்த்திருவிழாவுக்கு செல்லும் பக்தர்கள் நலனை கருத்தில் கொண்டு இந்நடவடிக்கை இடம்பெறுவதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-60)

# புதிய பிரிவுகள் இன்று ஆரம்பம்

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்தும் இலவச யோகாசன தியான பயிற சிகளுக்கான புதிய பிரிவுகள் நாளை சனிக்கிழமை நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் காலை 6.30 மணி தொடக்கம் 8.30 மணிவரை இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் தலைமையில் இடம் பெறவுள்ளது.


இப் பயிற்சி நெறியானது ஆண், பெண் என இருபாலாருக்கும் தனித்தனியாக நடைபெறும். இப் பயிற்சி நெறியில் நோயாளர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும். இப்பயிற்சியை பூர்த்தி செய்யும் மாணவர்களுக்கு பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இப்பயிற்சி பயில விரும்புவோர் மேலதிக விபரங்களுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தோடு தொடர்பு கொள்ள முடியும என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.எஸ்.ஐ.எஸ்ஸை நிர்மூலமாக்குவோம்

## ஒபாமா ஆவேசம்



ஈராக்கில் ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகள் பல இடங்களை பிடித்து வைத்துள்ளனர்.

அந்த இடங்களை மீட்பதற்காக அமெரிக்கா வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகள் தங்கள் பிடியிலிருந்த அமெரிக்க நிருபர் ஒருவரை ஏற்கனவே தலையை துண்டித்து கொலை செய்தனர்.

தற்போது மேலும் ஒரு அமெரிக்க நிருபரை தலையை துண்டித்து கொலை செய்துள்ளனர். அதன் வீடியோ காட்சிகளை நேற்றுமுன்தினம் ஒளிபரப்பினார்கள். இது அமெரிக்காவை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

இந்த சம்பவம் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா கருத்து வெளியிட்டுள்ளார்.

அமெரிக்க நிருபரின் தலையை துண்டிக்கும் வீடியோவை வெளியிட்டதன் மூலம் தீவிரவாதிகளால் அமெரிக்காவை ஒருபோதும் அச்சுறுத்த முடியாது. அமெரிக்கர்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட இந்த மோசமான செயலை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். இதற்கு நிச்சயமாக உரிய பதிலடி கொடுக்கப்படும்.

தீவிரவாதிகளின் செயலை கண்டு அமெரிக்கா அஞ்சப்போவதில்லை. இஸ்லாமிய தேசம் என்று அழைத்துக் கொள்ளும் அந்த அமைப்பை நிர்மூலமாக்க அமெரிக்க உறுதி பூண்டுள்ளது.

தீவிரவாதிகளுக்கு எதிராக அனைத்து நாடுகளும் ஒன்றிணைய வேண்டும். அவர்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற உறுதி இப்போது மீண்டும் எழுந்துள்ளது. ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இல்லாத நிலையை உருவாக்குவோம்.

துணிச்சல் மிகுந்த அந்த இரு நிருபர்களின் குடும்பத்துக்காக நாம் இறைவனை பிரார்த்திக்கிறோம். இவ்வாறு ஜனாதிபதி ஒபாமா கூறியுள்ளார். (இ)

# சுவாமியின் கருத்து குறித்து பதிலளிக்க விரும்பவில்லை

## மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன்

ஆளும் பா.ஜ.கட்சியில் பொறுப்பில் இல்லாத சுப்பிரமணிய சுவாமி மீனவர்கள் குறித்து தொலைக்காட்சியில் தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்க விரும்பவில்லை என மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவத்துள்ளார். மத்திய இணை அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் திருச்சியில் நேற்று முன்தினம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

பா.ஜ.க. தலைவர் அமித்ஷா. பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பொறுப்பில உள்ள தலைவர்கள் கருத்து தெரிவித்திருந்தால் அதற்கு பதிலளிக்கலாம். கட்சியில் பொறுப்பில் இல்லாத சுப்பிரமணிய சுவாமி மீனவர்கள் குறித்து தெரிவித்த கருத்துக்கு பதிலளிக்க விரும்பவில்லை.

இலங்கை கடற்படையினரால் சிறைபிடித்து செல்லப்படும் மீனவர்கள், அவர்களது படகுகளை மீட்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. வெளியுறவுத் துறை அதிகாரிகளுடன் தொடர்ந்து பேசி வருகிறோம. மீனவர்கள் பிரச்சினைக்கு விரைவில் நிரந்த தீர்வு காணப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# புலிகள் மீதான தடையை எதிர்த்து வைகோ வாதாடவே முடியாதாம்

## சட்டவிரோத தடுப்பு செயல்கள் தீர்ப்பாயம்

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்புக்கு விதிக்கப்பட்டுள்ள தடை மீதான விசாரணையில் தன்னை விடுதலைப்புலிகளின் ஆதரவு தரப்பாக இணைக்கக் கோரி ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ தொடுத்திருந்த மனு நிராகரிக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை இந்த வழக்கு விசாரணையின்போது வைகோ வந்திருந்து பங்கேற்று கருத்து கூறலாம் என்று இந்திய அரசின் சட்டவிரோத தடுப்புச் செயல்கள் தீர்ப்பாயம் நேற்று முன்தினம் அனுமதி வழங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்புக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டுள்ள ஐந்தாண்டு தடை குறித்து விசாரித்துவரும் சட்டவிரோத தடுப்புச் செயல்கள் தீர்ப்பாயத்தின் நீதிபதி மிட்டல் வழங்கியுள்ள இந்த உத்தரவில், இந்த வழக்கு மீதான அடுத்த கட்ட விசாரணை செப்டெம் பர் மாதம் 26 மற்றும் 27ஆம் திகதிகளில் சென்னையில் நடை பெறும் என்றும், அப்போது ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ பங்கேற்று கருத்துக்களை தெரிவிக்கலாம் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்தியாவில் விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்து இந்திய அரசு கடந்த மே மாதம் 15 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது. வழக்கமாக இந்த அமைப்புக்கு விதிக்கப்படும் இரண்டு ஆண்டு தடைக்கு பதிலாக தற்போதைய தடை மட்டும் ஐந்து ஆண்டுகள் நீடிப்பு செய்யப்பட்டிருந்தது. அப்போது மத்தியில் ஆட்சி செய்த காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி அரசு, விடுதலை புலிகள் மீதான தடையை மேலும் ஐந்து ஆண்டுகளுக்கு நீடித்திருப்பது பழிவாங்கும் நடவடிக்கை என்று தமிழகத்தைச் சேர்ந்த ம.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைபபுக்களும் குற்றம் சாட்டியிருந்தன.

இதனைத்தொடர்ந்து தற்போது இந்த தடை மீதான விசாரணை, இந்தியாவில் சட்டவிரோத தடுப்புச் செயல்கள் தீர்ப்பாயம் முன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் அமைப்புக்கு என இந்தியாவில் அந்த அமைப்பின் பிரதிநிதிகள் யாரும் இல்லாததால் அவர்கள் தரப்பில் யாரும் இந்த விசாரணையில் பங்கேற்கவில்லை. இதன் பின்னணியில்தான் ம.தி.மு.க.பொதுச செயலாளர் வைகோ தன்னை இந்த வழக்கில் விடுதலைப் புலிகளின் ஆதரவு தரப்பாக சேர்த்துக் கொள்ளும்படி மனு தாக்கல் செய்திருந்தார். வைகோவின் மனுவுக்கு எதிராக இந்திய அரசு தரப்பில் இந்த வழககில் ஆஜரான வழக்கறிஞர் சஞ்சய் ஜெயின், அந்த கோரிக்கைக்கு கடும எதிர்ப்பு தெரிவித்து வாதிட்டார். (இ)

# இந்தியாவிலும் அல்-கொய்தா!

## மிரட்டும் அல்.ஜவாகிரி



இந்நிலையில் ஜவாகிரி பேச்சின வீடியோ வெளியானது. 55 நிமிடங்களை கொண்ட அந்த வீடியோவில ஜவாகிரி பேசியதாவது,

அல்-கொய்தா அமைப்பின் பிரிவை இந்திய துணைக்கண்டத்திலும் அமைக்க போவதாக அவ்வமைப்பின் தலைவரான அய்மான்-அல்-ஜவாகிரி மிரட்டல் விடுத்துள்ளார்.

இது தொடர்பான பரபரப்பு வீடியோ வெளியாகியுள்ளது.

மேற்கு ஆசிய நாடுகள் சிலவற்றில் ஆதிக்கம் செலுத்தி வரும், அல்-கொய்தா ஆதரவு பயங்கரவாதியான, அபுபக்கர் அல் பாக்தாதி தலைமையிலான, ஐ.எஸ்.ஐ.எஸ்., பயங்கரவாதிகள், ஈராக்,சிரியா ஆகிய நாடுகளில் யுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தங்களுக்கு எதிராக அமெரிக்கா விமானத் தாக்குதல் நடத்தி வருவதை எதிர்த்தும், பதிலடி கொடுக்க ஜேம்ஸ் போலே, ஸ்டீபன் சாட்லாப் ஆகிய இரண்டு அமெரிக்க பத்திரிகையாளர்களை கொடூரமாக தலையை துண்டித்து கொன்றதுடன் அமெரிக்காவிற்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

### இந்திய துணைக் கண்டத்தில் கிளை

அல்-கொய்தா அமைப்பின் தலைவராக உள்ளவர் அய்மன் அல்- ஜவாகிரி. பின்லேடனின் வலது கரமானவர். பாகிஸ்தானில் பதுங்கியிருந்த ஒசமாபின் லேடன் அமெரிக்க படைகளால் கட ந்த 2011ஆம் ஆண்டு சுட்டுக் கொல்லப்பட்ட பின்னர், அந்த அமைப்பின் தலைவராக இவர் செயற்பட்டு வருகிறார்.

ஒடுக்கப்பட்டு, அநீதி இழைக்கப்பட்ட எங்கள் அமைப்பினை இந்திய துணைக்கண்டத்திலும் ஏற்படுத்துவோம். தவிர பர்மா, வங்க தேசம் ஆகிய நாடுகளிலும் , இந்தியாவில் அசாம், குஜராத் , காஷ்மீர் ஆகிய இடங்களிலும் கிளையை நிறுவுவோம். ஏற்கனவே பாகிஸ்தானில் உள்ள அல்-கொய்தா பிரிவிற்கு ஆசிம் உமர் தலைவராக உள்ளார். அதே போன்று. இந்திய துணைக கண்டத்தில் கொய்தா - அல்-ஜிகாதி என்ற பெயரில் பிரிவை [illegible] தெரிவித்துள்ளார். (இ)

# பிரிவுத்துயர் பகிர்வு



### சின்னதம்பி நாகேந்திரம்

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னதம்பி நாகேந்திரம் கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கந்தர்மடத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி கேதாரலிங்கம் தேவராணி



அச்சுவேலி பத்தமேனியைப் பிறப்பிடமாகவும் நெதர்லாந்து Den Haag ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கேதாரலிங்கம் தேவராணி கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் பூதவுடல் எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு crematorium Ockenburghstraat 21, 2553 AA, Den Haag, Netherlands என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### வாரித்தம்பி வேலுப்பிள்ளை தம்பு



சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைப் பிறப்பிடமாகவும் அவுஸ்திரேலியா Melbourne ஐ வசிப்பிடமாகவும் கொண்ட வாரித்தம்பி வேலுப்பிள்ளை தம்பு கடந்த 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.15 மணிக்கு Boyd Chapel Springvale, Australia என்னும் முகவரியில் நடைபெறும்.

### நடராசா சந்திரமோகன்



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி Sinsheim ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா சந்திரமோகன் கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் நாளை சனிக்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு Zum Friedhof 15, 74889, Sinsheim, Germany என்னும் முகவரியில் தகனம் செய்யப்படும்.

### திருமதி தர்மலிங்கம் நல்லம்மா



மணல்பாதி கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தர்மலிங்கம் நல்லம்மா கடந்த முதலாம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று பின்னர் பூதவுடல் கிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி சபாநாயகம் கமலாதேவி



வட்டுக்கோட்டை மூளாய் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாநாயகம் கமலாதேவி கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று கால மானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் வழுக்கையாறு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

### திருமதி தம்பிராஜா புஸ்பமலர்



யாழ். நவாலி கிழக்கை பிறப்பிடமாகவும் 65/278, விஸ்ட் வைக் வீதி, கொழும்பு 15 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா புஸ்பமலர் கடந்த 2 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அன்று காலமானார். அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் மாதம்பிட்டிய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

### குலசேகரம்பிள்ளை யோகநாதன்



பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி ludenscheid ஐ வசிப்பிடமாகவும் கொண்ட குலசேகரம்பிள்ளை யோகநாதன் கடந்த முதலாம் திகதி திங்கட் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு Werkshagenerstr 25, 58515 Ludenscheid Germany என்னும் முகவரியில் நடைபெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவிதமான விசாரணைகளுக்கிடையில்

# மனித உரிமைகளுக்கெதிரான போர்க்குற்றங்களும்

**இரண்டு விசாரணைகளுக்கிடையில் எனும் தலைப்பில் சண்டே லீடரில் என்.சத்தியமூர்த்தி எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை வெளியானது. அதன் தமிழாக்கம் இங்கே பிரசுரிக்கப்படுகின்றது. தமிழில் :- யோகர்**

இலங்கையின் உள்ளேயும் இலங்கைமீதும் மேற்கொள்ளப்பட்டுவரும் காணாமற்போனோர் மட்டிலான விசாரணைகளிரண்டும் அவை மேற்கொள்ளப்படும் விதத்தில் முற்றிலும் எதிர்மாறான வெவ்வேறு கண்டுபிடிப்புகளுக்கான அறிக்கையிலேயே துல்லியமாக வெளிக்கொண்டுவரும் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாகவே தோன்றுகின்றது.

சர்வதேச சமூகம் (மேற்குலகம் என்று வாசிக்கவும்) ஏனைய 3 ஆம் உலகநாடுகள் நினைவிற்கொள்ளும் விதத்திலான (நினைவிற் கொள்ளவேண்டியவர்கள்தான்) ஒரு பாடத்தினையே இலங்கைக்கு புகட்டுவதற்காக இந்த ஐ.நா.ம.உ.ச விசாரணையை தொடர்ந்தும் பயன்படுத்தக்கூடியதாக இருக்குமென்றாலுங்கூட ஒரு கட்டத்திற்கும் அப்பால் எந்தவித மாற்றமோ நோக்கமோ அற்றவிதமாக இருதரப்புகளுமே விசாரணைக்கான முழுத்திட்டத்தையும் ஒருமித்த விதமான ஒரு கேலிக்கூத்தாக்கிவிடமாட்டார்களா என்ற கேள்வியும் எழுகிறது.

மேற்படி விடயங்கள் தொடர்பான தனது உள்ளக விசாரணையை சுதந்திரமானதும் நம்பகமானதுமான முறையில் மேற்கொள்ளும்படி சர்வதேசமும் கூறியிருந்த கருத்துக்களை இலங்கை அரசு ஒட்டு மொத்தமாக புறந்தள்ளி ஏற்கனவே வருடங்கள் பல கடந்திருந்தன.

ஆனாலும் இப்போது அரசு தனது உள்ளக விசாரணைகளுக்கு சுதந்திரமான சர்வதேச ஆலோசகர்களை அவர்களது பெயர்வழியாக அறிவித்துள்ளது. இருப்பினும் அதேவிடயங்கள் மட்டிலான சர்வதேச விசாரணைக்குப் பின்னால் இருக்கும் சக்திகள் சாட்சிபூர்வமாகவும் உள்ளார்ந்த ரீதியிலும் தாம் அறிந்திருக்கும் நம்பகத்தன்மைக்கான காரண காரியங்கள் பற்றி இதுவரை கருத்துக்கள் எதையும் கூறியதில்லை. மேற்கூறிய பின்னணி சக்திகளில் ஐ.நா.ம.உ.சபையும் ஜெனீவாவின் மார்ச் தீர்மானத்திற்கான பிரதான உந்து சக்தியும் ஆரம் பகர்த்தாவுமாகிய அமெரிக்காவும் உள்ளடங்கும்.

இலங்கை மூவரடங்கிய வெளிநாட்டு நிபுணர் குழுவை தனது விசாரணை ஆலோசகர்களாக அறிவித்தபின்னர் பிரபலமான வராய் பெரிதும் அறியப்படாத இந்தியரான ஒரு தீவிர மனித உரிமை ஆர்வலரான அவ்தாஷ் கௌஷால் என்பவர் தனது சுற்று விசாரணைக்கான பகுதி வேலையை ஏற்கனவே ஆரம்பித்திருந்தார். தனக்கான ஒரு நியமனமாய் அமையக்கூடிய இந்த வாய்ப்பு பற்றி இந்திய அரசு அறிந்திருக்கவில்லை என்பதுடன் அதற்கான முன் அங்கீகாரம் பற்றி தான் எண்ணிப்பார்த்ததுமில்லை என்பதே இதுவரை அதுபற்றிய அவரது தெளிவுபடுத்தலாயிருக்கிறது.

இந்தியாவிலுள்ள பல தீவிர மனிதவுரிமை செயற்பாட்டாளர்கள் அளவுக்குப் பெரிது அறியப்படாதவர் என்பதுடன் கௌசால் என்ற ஒருவர் "அங்கு இருந்திருப்பாரென்பதுங்கூட இந்திய அரசுக்கு இதுவரை தெரிந்திருக்கமுடியாது. இலங்கை அரசானது ஜப்பானிய நிபுணர் ஒருவரையும் அவர் விரும்பாவிடினும்கூட தனது விசாரணைக்கான ஆலோசனைக்குழுவில் இணைத்துக்கொள்வதற்கான அறிகுறிகளும் இப்போது இருப்பதாக அறியவருகிறது.

தனது விசாரணை முற்றிலும் சுயாதீனமானதாக இல்லாவிடினுங்கூட நம்பகத்தன்மை கொண்டதாக இருக்கவேண்டுமென்ற நோக்கம் அரசுக்கு இருக்குமானால் வெளிநாட்டு நிபுணர்களை வரவழைக்க அது ஏன் முன்னரே ஏற்பாடு செய்து கொள்ளவில்லை என்றொரு கேள்வியும் இங்கு எழுகிறது.

மேற்கத்தேய நாடுகளின் தேவைப்பாடுகளுக்கேற்ப எதனைச் செய்த போதிலும் அவர்களுக்கு மேலும் மேலும் கூடுதலான தேவைப்பாடு ஏற்பட்டுக்கொண்டுதானிருக்கும் என்பதை தனது கடந்த கால அனுபவங்களின்மூலம் அரசாங்கம் உறுதியாக நம்பியதாகவே தோன்றுகின்றது.

வெளிப்படையாகவே ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்கள் மட்டில் தொடர்ந்தும் இழுத்தடிப்புக்கள் மேற்கொள்ளப்படும் போது அவ்விடயங்களே இறுதி முடிவு என்ற செய்தியொன்று அங்கு உணர்த்தப்படுகின்றது.

அநேகமாக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளின் போதான அமெரிக்க- ஜெனீவா தீர்மானங்களின் அடிப்படையாக இருக்கும். கற்றுக்கொண்ட பாடங்களுக்கான இணக்கப்பாட்டு ஆணைக்குழு (LLRC) விடயங்கள் இவற்றில் அடங்கும். ஆனாலும் சர்வதேச சமூகத்தின் நம்பகத்தன்மை மட்டிலான அக்கறைகள் காரணமாக 2013 ஆம் ஆண்டு தீர்மானத்தின் அடிப்படையாக LLRC பரிந்துரைகள் எடுத்துக்கொள்ளப்படவில்லை.

## ஆட்சிமாற்றமா? அல்லது வேறு மாதிரியான விளைவா?

அரசியல் ரீதியாகவுங்கூட இலங்கை அரசு நம்பகமான முறையில் ஒரு விடயத்தை புரிந்து கொண்டுள்ளதாகவே தெரிகிறது. அதாவது நம்பகத்தன்மை விடயங்களைப் பயன்படுத்தி ஜனநாயக ரீதியான தேர்தல்கள் மூலம் ஆட்சிமாற்றம் ஒன்றினை கொண்டுவருவதே மேற்குநாடுகளின் பகீரதப்பிரயத்தனம் என்பதே அதுவாகும்.

2010 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலின் முதன்மைப் போட்டி வேட்பாளரான மஹிந்தவுக்கு எதிராக 4 ஆம் ஈழப்போரின் உச்சக் கட்டத்தில் இராணுவ கொமாண்டராக இருந்த சரத் பொன்சேகா நிறுத்தப்பட்டது மேற்கு நாடுகளின் ஆசீர்வாதத்துடனேயே என அரசாங்கத்தின் தலைவர்களே கூட பகிரங்கமாக முறைப்பட்டிருந்தனர். இது உண்மையானதாயிருக்குமென்றால் நம்பகத்தன்மை விடயங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் மட்டிலான மேற்கின் நோக்கங்கள் - தீர்மானங்கள் முரண்பாடுமிக்க போலித்தனமே எனலாம்.

ஜனாதிபதி தேர்தலுக்கான 2010 ஆம் ஆண்டின் நெருங்கிய கால கட்டத்தில் ஐரோப்பிய சமூகம் (EU) ஒரு பக்கமும் இலங்கையின் நட்பு நாடுகள் ஒரு பக்கமுமாக கொடுத்த வலியுறுத்தல்கள் காரணமாக ஐ.நா.ம.உ.ச(UNHRC) தீர்மானத்திற்கான வாக்களிப்புக்கள் நம்பகத்தன்மை விடயங்கள் மற்றும் போர்க்குற்றங்கள் அடிப்படையிலானதாக மட்டுமே இருந்தது.

அதாவது அது நடந்தது 2009 மே மாதத்தில் அதுவும் நான்காம் ஈழப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட இரு வாரங்களுக்கிடையிலேயாகும். அன்றும் இன்றும் மகிந்த ராஜபக்ஷவைஏனைய அனைத்து முனைகளிலும் சரத் பொன்சேகா எதிர்த்து வருகின்ற போதிலும் தற்போது போர்க்குற்றங்களுக்கு எதிரான விசாரணைகளைத் தொடர்ந்து எதிர்ப்பதையே தனது நிலைப்பாடாகக் கொண்டுள்ளார்.

மேற்கத்தேய நாடுகள் எதனை விரும்பி எதிர்பார்க்கிறோமோ அவையனைத்தும் தோல்வியில் முடிவடையும்.

அதன் முன்னைய முயற்சிகளின் ஓர் தொடர் நடவடிக்கையாகவே ஐ.நா.ம.உ.ச(UNHRC)யின் வழிமுறைகளை இலங்கை அரசு சார்பு தரப்பினர் தொடர்ந்தும் பார்த்து வருகின்றனர்.

இலங்கையின் உள்ளூர் அரசியல் தலைவர்கள் சிலருங்கூட 2010 ஆம் ஆண்டின் ஜனாதிபதி தேர்தல் முடிவுகள் தமது விருப்பிற்கேற்ற பெறுபேறுகளைக் கொடுக்கவில்லை என்பதற்காக ஜனநாயக ரீதியிலான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கூடாக ஆட்சி மாற்றம் கொண்டுவரப்பட வேண்டுமென பகிரங்க அறைகூவல் விடுத்திருக்கிறார்கள்.

இதற்குள்ளாக ஏற்கனவே ஆக்கபூர்வமற்ற எதிர்மறை வினையாகிவிட்டிருக்கும் அரபு வசந்தம் (Arab Spring) ஐரோப்பிய உக்ரைன் புரட்சி (Orange Revolution) போன்ற ஆட்சிமாற்ற விளைவுகள் பற்றி இந்தக் கூட்டத்தில் நினைவுபடுத்த வேண்டிய தேவையில்லை.

## ஆதாரமற்ற மற்றும் ஆதாரத்துடன் கூடிய அடிப்படைகள்

குற்றச்சாட்டுக்குள்ளான நாட்டிற்கு விஜயம் செய்யாமல் அதற்கு வெளியிலிருந்தே பயனுள்ள விசாரணைகளை ஐ.நா.ம.உ.ச (UNHRC)யின் பன்னிரண்டு உறுப்பினர் குழு மேற்கொள்ளமுடியும் என பதவியிலிருந்து வெளியேறவிருக்கும் சபை தலைவர் நவிப்பிள்ளை ஏற்கனவே கூறியுள்ளார்.

வலுவான ஆதார அடிப்படையில் அமையும் சாட்சியங்களே குற்றவியல் விசாரணையொன்றின் சாராம்சமாகும் என்பதால் அதனடிப்படையிலேயே அது அமைய வேண்டும்.

எனவே இலங்கையின் நம்பகத்தன்மை மட்டிலான அதன் உள்ளக விசாரணைகளுக்கு சவாலாக இருக்கும் பிள்ளையவர்களும் அவரது பின்னணி ஆதரவு மேற்குலகும் அதே விடய சம்பந்தமான ஐ.நா. ம.உ.ச (UNHRC) விசாரணைக்குழுச் செயற்பாடுகள் மட்டில் தமது பங்கிற்கான நம்பத்தகுந்த அறிக்கை ஒன்றை வெளிக் கொணர்வது எந்தளவு சாத்தியமானது என்பது தெளிவில்லை.

மேற்படி கேள்விகள் எழவே செய்யும். ஆனால் இலங்கை அரசு வெளிநாட்டு ஆலோசனைக் குழுவொன்றை நியமித்ததன் பின்னர் ஐ.நா.ம. உ.ச. விசாரணையின் பின்னணி ஆதரவாளர்களுக்கு மேலும் தொடங்குவதற்கு எதுவுமே இல்லை என்ற கட்டத்தில் இவ்வளவு தூரம் வந்த பின்னருங்கூட அதனையோ அல்லது மற்றுமொரு விசாரணையோ தொடர்வதற்கான தேவை இருக்காது.

அந்த விசாரணையுங்கூட பிரத்தியேக குற்றங்கள் புரிந்த பிரத்தியேக குற்றவாளிகளுக்கு பிரத்தியேக தண்டனைகள் பெற்றுக் கொடுக்க வழிகோலப்போவதுமில்லை.

அப்படியான பிரத்தியேகமான விடயங்கள் இருந்தாலுங்கூட உள்ளக விசாரணையொன்றுமட்டுமே அதனை உறுதி செய்யமுடியும்.



எனவே இதுமட்டில் அவர்களுக்கு இருக்கக்கூடிய ஒரே மாற்றுவழி என்னவென்றால் வருகின்ற செப்டெம்பரில் நடக்கவிருக்கும் அடுத்த ஜெனீவா அமர்வின் போது ஐ.நா.ம.உ.சபையின் விசாரணையை அத்துடன் நிறுத்திக்கொள்வதுடன் இலங்கையின் உள்ளக விசாரணைக் கண்டுபிடிப்புக்களின் தகைமைப் பெறுமதிகளை மீளாய்வு செய்து கொண்டு அதனை அவர்கள் விட்ட இடத்திலிருந்து தொடர்வதேயாகும்.

ஐ.நா.ம.உ.ச விசாரணைக்குழுக்கள் குற்றச்செயல்களை நிகழ்த்த நாடுகளுக்குள் பிரவேசிக்காமலேயே நம்பகமான வெளிநாட்டு விசாரணைகள் மேற்கொள்வது ஏற்கனவே சாத்தியமாகியிருக்கும் நாடுகளான வடகொரியா, சிரியா இரண்டையும் நவிப்பிள்ளை உதாரணமாக எடுத்துக் காட்டியிருந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யத் தெரிந்தவன் சாதிக்கிறான்.
செய்ய முடியாதவன் போதிக்கிறான்.
- கர்னல் கீல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## AR,FR இவற்றை விட்டுவிட்டு இந்த JR சொல்வதை செய்யுங்கள்

நிர்வாகம் என்பது சட்டவிதிகளுடன் சம்பந்தப்பட்டது. நிர்வாக நடைமுறைகள் அனைத்தும் தாபனக் கோவைகளுடன் சம்பந்தப்பட்டவை. இதுபோல நிதி முகாமைத்துவம் என்பது நிதிப் பிரமாணங்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டியவை.

இந்த வகையில் AR (Administative Requlation) நிர்வாக ஒழுங்குவிதிகள், FR (Financial Requlation) நிதி ஒழுங்கு விதிகள் என்பன நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் என்பவற்றை நகர்த்திச் செல்வதற்கான சட்டக் கோவைகள் ஆகும்.

நிர்வாகம் மற்றும் நிதி சார்ந்த சட்டக் கோவைகள் காலத்திற்குக் காலம் திருத்தத்திற்கு உட்படுவது வழமை. இத்தகைய திருத்தங்கள் சுற்று நிருபங்களாக வெளிப்படுத்தப்படுகின்றன.

ஆக சுற்றுநிருபங்களின் அடிப்படையிலேயே அனைத்து விடயங்களும் செய்யப்பட வேண்டும். சுற்றுநிருபத்தின் அடிப்படையில் செயற்படுவதாக இருந்தால் பாடசாலைகளில் டொனேசன் வாங்குவது, ஒரு வகுப்பறையில் 35 மாணவர்களுக்கு மேல் வைத்திருப்பது என்ற விடயங்களைச் செய்ய முடியாது. இது போல பலவற்றைக் குறிப்பிட முடியும்.

எனவே AR , FR என்பன நிர்வாகத்தையும் நிதியையும் நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு கடிவாளம். அந்தக் கடிவாளம் நிர்வாக ஒழுங்குப்படுத்தலுக்கு மிகவும் அவசியம்.

ஆயினும் கடிவாளத்தையே பிடித்துக் கொண்டிருந்தால் எதுவும் நடக்காது என்பதும் தெரிந்ததே. பொதுவில் AR , FR என்பவற்றின் தேர்ச்சியுடன் தற்துணிவோடு செயற்பட்டவர்களே சிறந்த நிர்வாகிகள் எனப் போற்றப்பட்டனர்.

மாறாக நிர்வாக, நிதி சார் ஒழுங்கு விதிகளை வரிக்கு வரி மனனம் செய்து கொண்டு பொறுப்பான பதவிகளில் குந்தியிருப்பவர்கள் அந்த விதிக் கோவைகளை சதா உச்சரித்துக் கொண்டிருப்பார்களே அன்றி அவர்களால் எந்த விதமான பிரயோசனமும் எவருக்கும் இருக்காது.

இந்த நாட்டில் நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையைக் கொண்டுவந்த ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒரு முறை உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை மேற்கொண்டார்.

நாட்டில் ஏற்பட்ட அவசர சூழல் கருதிய அந்தக் கலந்துரையாடலின் போது ஜே.ஆர்.ஜெயவர்த்தன கூறிய சிலவிடயங்களைச் செய்வதற்கு AR , FR இடம் தராது என அதிகாரிகள் கூறினர்.

இதற்குப் பதிலளித்த ஜனாதிபதி ஜெயவர்த்தன ; AR, FR சொல்வதைவிட்டுவிட்டு இப்போது இந்த JR சொல்வதைச் செய்யுங்கள் என்றார். அன்று ஜே.ஆர். கூறியதை இன்று வடமாகாண அரசு சொல்ல வேண்டிய தேவையிலுள்ளது. எடுத்தற்கெல்லாம் AR , FR என்றால் வடமாகாணத் தில் எதுவுமே நடக்காது.

விசர்நாய் ஒன்று பொதுமக்களைக் கடிக்கின்றது. தகவல் அறிந்த பொதுமகன் ஒருவர் சம்பந்தப்பட்ட பிரதேச சபைக்கு தகவல் கொடுக்கின்றார். அதற்கு அங்கிருந்து கிடைக்கின்ற பதில் ; மகிந்த சிந்தனையில், நாய்களை அழிக்கமுடியாது என்பதாக இருக்கின்றது.

மகிந்தசிந்தனை நாய்களை அழிக்க கூடாது என்று சொல்வதற்காக விசர் நாய்களையுமா அழிக்கக் கூடாது? விசர் நாய் கடித்தால் அதன் ஆபத்து, அதற்கான மருந்துச் செலவு, அதனால் ஏற்படக் கூடிய நேர இழப்புகள் குறித்துக் கவனம் கொள்ளாமல், மகிந்த சிந்தனையை சொல்லிவிட்டு பேசாமல் இருக்கின்ற அசமந்தங்களை தடுப்பது மிகவும் அவசியமானதாகும்.

மத்திய அரசு விடாது என்பதற்கப்பால் எங்களிடம் இருக்கக்கூடியவர்களும் விடாக்கண்டன் கொடாக்கண்டனாக இருப்பது பற்றியும் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

ஒட்டுமொத்தத்தில் போரினால் பாதிப்படைந்த எங்கள் மக்களுக்கு எந்தெந்த வகையில் உதவி செய்ய முடியுமோ அந்த உதவிகளையெல்லாம் அதிகாரிகள் செய்ய வேண்டும். அதற்கேற்றவாறு AR , FR ஐ சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுங்கள். அதுவே இன்றைய சூழ்நிலையில் எங்கள் இனத்திற்கு நாம் செய்யும் பேருதவியாகும்.

# ஓட்டுத் தொழிற்சாலை பணியாளர்கள் வட மாகாண முதலமைச்சருக்கு மகஜர்

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் ஓடு மற்றும் செங்கல் தொழிற்சாலை பணியாளர்கள் ஒன்றிணைந்து தமக்கான சம்பளம் அல்லது நட்டஈடு கோரி வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்று முன்தினம் வட மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வணிகக் கைத்தொழில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் இணைத் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டம் நடைபெற்று முடிந்த பின்னர் அவ்விடத்தில் வைத்து மேற்படி தொழிற்சாலை பணியாளர்களினால் மகஜர் கையளிக்கப்பட்டது.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு,

74 நிரந்தரப் பணியாளர்கள் ஆகிய நாம் மேற்படி தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த நேரத்தில் கடந்த 1990 ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடக்கம் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பணியாளர்கள் அனைவரும் வேலை இடைநிறுத்தப்பட்டு தொழிற்சாலை இயங்காமல் போனது.

அதனால் இங்கு பணிபுரிந்த 74 தொழிலாளர்களும் பாதிக்கப்பட்டோம் இதனால் எங்கள் ஜீவனத்தைப் போக்க காணி, நகைகள் போன்றவற்றை விற்றும் கடன்பட்டும் சாப்பிட்டோம். இதற்கும் வழியில்லாதவர்கள் பசி, பட்டினி, நோய், துன்பங்களால் பலர் மரண மடைந்துள்ளனர். இவர்களுடைய குடும்பங்களும் நாமும்பெரிதும்பாதிப்படைந்திருந்தோம்.

மேலும் இது சம்பந்தமாக நாம் பல தடவை அரச தரப்பினர்களுடன் காலத்திற்குக் காலம்முறையிட்டுநிலைமையை விளக்கி கடிதங்கள் எழுதியும் நேரில் சென்று கதைத்தும் இருந்தோம். குறிப்பாக கைத்தொழில் அமைச்சராக விருந்த ரணில் விக்கிரமசிங்கவின் காலத் திலிருந்து தற்போதைய அமைச்சர் றிசாத் பதியுதீன் வரை எவ்விதமான முடிவும் கிடைக்கப்பெறவில்லை.

எங்களை மட்டும் புறந்தள்ளி வைத்திருப்பதையிட்டு மனவேதனை அடைவதுடன் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் இருக்கின்றோம்.

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபனம், ஆனையிறவு உப்புக் கூட்டுத்தாபனம், புல்மோட்டை இல்மனைற் கூட்டுத்தாபனம், வாழைச்சேனை கடதாசி தொழிற்சாலை, அம்பாறை மட்பாண்ட கூட்டுத்தாபனம் போன்றவைக்கு இக் காலங்களில் பகுதி பகுதியாக சம்பள நட்டஈடுகள் வழங்கப்பட்டுள்ளது. நாமும் சம்பள நட்டஈடு கிடைக்கும் என எதிர்பார்த்திருந் தோம். இன்றுவரை நாம் இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள் போன்றோருக்கு தெரியப்படுத்தியும் எவ்வித பயனும் கிடைக்கப் பெறவில்லை.

இதனால் மேலும் எங்கள் சம்பளம் அல்லது நட்ட ஈட்டினைப் பெறுவது சம்பந்தமாக வடமாகாண ஆளுநரை கடந்த 03.08.2011 அன்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினத்தின் ஏற்பாட்டின்படி நேரடியாகச் சந்தித்து நிலைமையை விளக்கிக் கூறியிருந்தோம். அவர் இதற்கான நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருந்தார்.

மேலும் இது சம்பந்தமாக தங்களிடம் கேட்டுக்கொள்வது 74 பணியாளர்களின் குடும்பங்களின் கஷ்டங்களை கருத்திற்கொண்டு நல்லதொரு சுபீட்சமான முடிவை காலதாமதமின்றி எடுத்து இக்கொடுப்பனவுக்கான அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொள்வதாக அதில் குறிப்பிட்டுள்ளனர். (2-267)

# எபோலாவுக்கு 1900 பேர் பலி

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் எபோலா வைரஸ் நோய் தாக்கி பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

இது தொடர்பாக உலக சுகாதார நிறுவனம் நேற்று ஆலோசனை கூட்டம் நடத்தியது. இதைத்தொடர்ந்து உலக சுகாதார நிறுவன தலைவர் மார்க்ரெட் ஷான் கூறியதாவது,

ஆபிரிக்க நாடுகளை எபோலா நோய் தாக்கி கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தி இருந்தாலும் தற்போது நிலைமை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த நோயை முற்றிலும் ஒழிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எபோலா நோய்க்கு இதுவரை ஆயிரத்து 900 பேர்பலியாகி உள்ளனர். 3 ஆயிரத்து 500 பேர் நோயால் பாதிக்கபபட்டுள்ளனர். கினியா, சியாராலியோன், லைபீரியா பகுதிகளில் இந்த நோய் தாக்கம் அதிகமாக உள்ளது.

நோய் பாதிக்கப்பட்ட நாடுகளில் பிரதிநிதிகள் மற்றும் மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் நோய் கட்டுப்பாட்டு நிபுணர்களை கொண்ட ஆலோசனை கூட்டம் விரைவில் ஜெனீவாவில் நடைபெற உள்ளது. இதில் முக்கியமான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்படும்.

எபோலா நோய் தாக்கம் நாங்கள் எதிர்பார்த்ததை விட மோசமாக இருந்தது. ஆனாலும் நிலைமை தற்போது திருப்தியாக இருக்கிறது என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# வவுனியா குருமன்காட்டில் இளைஞர்கள் மீது வாள்வெட்டு

(வவுனியா)

வவுனியா குருமண்காட்டில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற வாள் வெட்டுச் சம்பவத்தில் இருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வவுனியா பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இரு குழுக்களுக்கடையில் இடம்பெற்ற கைகலப்பின் போதே இவ் வாள் வெட்டு இடம்பெற்றதாக தெரியவருகின்றது.

இதன்போது வவுனியா சுற்றுவட்ட வீதியை சேர்ந்த தபோதரன் தினேஸ்குமார் (வயது 24), மதவுவைத்தகுளத்தை சேர்ந்த மணியரசன் ரமணராஜ் (வயது 24) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையின் விபத்துக்கள் பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் வவுனியா பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை வவுனியாவில்வைரவபுளியங்குளம் சிறுவர் பூங்கா பகுதி மற்றும் குருமன்காடு பகுதியில் இளைஞர்கள் குழுவாக நின்று பல்வேறு சமூக விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ)

# சொற்பொழிவு

(தொண்டைமானாறு)

தொண்டைமானாறு செல்வச் சந்நிதிப் பெருந் திருவிழாவை யொட்டி சந்நிதியான் ஆச்சிரமக் கலை பண்பாட் டுப் பேரவையின் ஏற்பாட்டில் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் இன்று முற்பகல் 10.30 மணிக்கு சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல் வழங்கும் ஓவற இமைக்கும் ஒளி எனும் தலைப்பிலான சொற்பொழிவு இடம் பெறவுள்ளது. (இ)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத் தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு புதிய உயர் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக தொண்டராசிரியர் சங்கத் தலைவர் அறிவித்துள்ளார். (இ)

## அமைதியின் சொற்கள்

நீங்கள் மிகவும் எளிமையான ஒரு பொருள்.

நீங்கள் மிகவும் அழகான ஒரு பொருள்.

நீங்கள் மிகவும் நிஜமான ஒரு பொருள்.

நீங்கள் போலி இல்லை.

(பிரேம்ராவத்)

## இஸ்லாம் ஆன்மீக சிந்தனை

### முதியோருக்கு மரியாதை

★ மனதை அடக்கியாண்டு மறுமைக்குப் பயன்படும் பணிகளைச் செய்பவனே அறிவாளி. மனம் போன போக்கில் நடந்து, இறைவன் அருளை எதிர்பார்ப்பவன் முட்டாள்.

★ நாவு நேர்மையாக இருக்குமானால், இதயம் நேர்மையான வழியில் செல்ல வேண்டும். நேர்மையற்றதாக இருக்குமானால் இதயம் நேர்மையான வழியில் செல்ல முடியாது.

★ ஒரு காரியத்தை நீர் செய்ய விரும்பினால் அதன் முடிவை எண்ணிப்பாரும். உம் சிந்தனையில் அதன் முடிவு நல்லதாக இருந்தால் அதைச் செய்வீர். இல்லையேல் அதை விட்டு விடும்.

★ உனக்காக எதை விரும்புகிறாயோ அதையே மற்றவர்களுக்கும் விரும்பு.

★ பெருமை என்பது உண்மையை ஏற்க மறுப்பதும், மனிதர்களை இழிவாகக் கருதுவதும் ஆகும்.

★ ஒருவன், முதியவருக்கு அவருடைய வயதிற்காக மரியாதை செய்தால், வயோதிப நிலையில் அவனுக்கு மரியாதை செய்வோரை இறைவன் ஏற்படுத்துகிறான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மயிலங்காடு ஞானமுருகனை வீழ்த்தி ஊரெழு றோயல் அரையிறுதிக்கு தகுதி



மயிலங்காடு ஞானமுருகன் அணியை 3:1 என்ற கோல் கணக்கில் தோற்கடித்து அரையிறுதிக்குள் சென்றது ஊரெழுறோயல்விளையாட்டுக்கழகம்.

பலாலி விண்மீன் விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் அணிக்கு 7 வீரர்கள் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி வல்வை றெஜின்போ விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகமும் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழகமும் போட்டியிட்டன.

மிகவும் பரபரப்பாக இடம்பெற்ற இவ் அரையிறுதியாட்டத்தில் இடைவேளைக்கு முன்பாக தர்மகுலசிங்கம் (வெள்ளை) சயந்தன் ஆகியோர் தலா ஒருகோல் போட 2:0 என்று றோயல் முன்னிலைபெற ஆட்டம் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் விறுவிறுப்புக் கட்டத்தை எட்டியது. இந்தச் சந்தர்ப்பத்தில் றோயல் அணியின் மற்றொரு வீரர் கானுஜன் மேலும் ஒரு கோலைப் போட்டார்.

பின்னர் ஞானமுருகன் அணி ஜெகனின் உதவியுடன் 38 ஆவது நிமிடத்தில் ஒரு கோல் மட்டுமே போடுவதற்கு அவ்வணியால் முடிந்தது. இறுதியில் 3:1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அணி இறுதியாட்டத்திற்கு தகுதி பெற்றது. (கு)

## வருடாந்த வி.விழா

யாழ்.மாவட்ட செயலகத்தால் நடத்தப்படும் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 6, 7ஆம் திகதிகளில் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் நிறைவடைந்துள்ளதாகவும் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வீர வீராங்கனைகள் அந்தந்தப் பிரதேச செயலகத்தின் விளையாட்டு உத்தியோகத்தருடனோ அல்லது அதற்கு பொறுப்பான உத்தியோகத்தர்களுடனோ தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி எம். மோகன் அறிவித்துள்ளார். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# செந்தாரகை வி.கழக உதைபந்தாட்ட போட்டி



பூநகரி கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகத்தால் வடமாகாண ரீதியிலாக கழகங்களுக்கிடையிலான மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியொன்று நடத்தப் படவுள்ளதாக பூநகரி உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் இராஜ்குமார் தெரிவித்தார்.


இப்போட்டி 5, 6, 7, 8 ஆம் திகதிகளில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

முதலாமிடத்தை பெறும் கழகத்துக்கு 30 ஆயிரம் ரூபாய் றொக்கப்பணமும் இரண்டாமிடத்தை பெறும் கழகத்துக்கு 20 ஆயிரம் ரூபாய் றொக்கப்பணமும் கேடயங்களும் வழங்கப்படவுள்ளது.

அரையிறுதிக்கு தெரிவுசெய்யப்பட்டு வெற்றிவாய்ப்பை இழந்த இரு கழகங்களுக்கும் தலா 5 ஆயிரம் ரூபாய் றொக்கப்பணமும் வழங்கப் படவுள்ளதாகவும் இப் போட்டியில் 30 இற்கும் மேற்பட்ட கழகங்கள் மோதவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (கு-84)

# விருதை வென்ற சங்கா, மத்யூஸ்





2014 ஆம் ஆண்டுக்கான டயலொக் கிரிக்கெட் விருதினை இலங்கை அணியின் அணித்தலைவர் மத்யூஸ் மற்றும் சங்கக்கார கைப்பற்றினர்.

இந்த ஆண்டுக்கான டயலொக் கிரிக்கெட் விருதுகள் நேற்று பத்தரமுல்லவில் உள்ள ஒரு ஹொட்டலில், நடைபெற்றது.

இதில் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரர் விருது டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் அணித் தலைவராக உள்ள மேத்யூஸ்க்கு கொடுக்கப்பட்டது.

அதே போல் ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் அசத்தி வரும் சங்கக்காரவுக்கு மக்கள் விருப்ப வீரருக்கான விருதும், நிரோஷன் டிக்வெலக்கு வளர்ந்து வரும் கிரிக்கெட் வீரர் விருதும் வழங்கப்பட்டது.

இந்த விருதினை இலங்கையின் விளையாட்டு துறை அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே வழங்கினார். (கு)

# 100 மீற்றர் ஓட்டத்தில் போல்டை வென்ற யுவராஜ்



பெங்களூர் சின்னச்சாமி அரங்கில் நடைபெற்ற கண்காட்சி கிரிக்கெட் போட்டியில் ஜமைக்காவைச் சேர்ந்த தடகள சம்பியன் உசைன் போல்ட், யுவராஜ் சிங் தலைமையிலான அணியை அபாரமாக வீழ்த்தினார்.

உசைன் போல்ட் கிரிக்கெட்டிலும் தனது அட்டகாசத் திறமையை நிரூபித்தார். அபாரமான ஐந்து சிக்ஸர்களைப் பறக்க விட்டு அரங்கை அதிர வைத்தார் போல்ட்.

போல்ட் 100 மீற்றர் ஓட்டத்தில் உலக சாதனை படைத்தவர். அவர் 9.58 விநாடிகள் என்ற சாதனையை வைத்துள்ளார். இதைக் குறிக்கும் வகையில் அவர் அணிந்திருந்த டி சேர்ட்டில் பின்னால் 9.58 என்ற எண் பொறிக்கப்பட்டிருந்தது.

போல்ட் கிரிக்கெட்டிலும் தான் ஒரு மன்னன் என்பதை நிரூபித்தார். யுவராஜ் அணியின் பந்து வீச்சினை சிறப்பாக எதிர்கொண்ட அவர் 19 பந்துகளில் 45 ஓட்டங்களை குவித்தார்.

போல்ட் அணியில் ஹர்பஜன் சிங்கும் இடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

கிரிக்கெட் போட்டி முடிந்ததும் 100 மீற்றர் ஓட்டப் போட்டி நடைபெற்றது. இதில் போல்ட்டும், யுவராஜ் சிங்கும் கலந்து கொண்டனர்.

கிரிக்கெட்டில் போல்ட் வெற்றி பெற்ற போதிலும் ஓட்டப் போட்டியில் யுவராஜ் சிங் வென்றார். (கு)

## பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் பொன்விழாவுக்கான கரப்பந்தாட்டம்



அல்வாய் பாரதிதாசன் சனசமூக நிலையத்தின் பொன்விழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட அணிகளுக்கிடையில் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடர் ஒன்று நடத்தப்படவுள்ளது.

இப் போட்டி எதிர்வரும் 9, 10, 11, 12, 13, 14 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இப் போட்டித் தொடரில் பங்குகொள்ள விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் கரவெட்டி, பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களில் தமது பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

இப் போட்டியில் வெற்றியீட்டும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும் என போட்டி அமைப்பாளர்கள் தெரிவித்துள்ளனர். (கு)







வடலியடைப்பு கலைவாணி சனசமூக நிலையத்தினரால் [illegible] இல் இடம்பெற்றபோது. (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிருஷ்ணானந்தசர்மா நேற்றுக் காலமானார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக சமஸ்கிருதத்துறை விரிவுரையாளர் ஸ்ரீபதிசர்மா கிருஷ்ணானந்த சர்மா நேற்றுக் காலமானார்.

நல்லூர் சிவன் கோவில் பிரதம குருவாகிய இவர் சிறிது காலம் சுகவீனமுற்றிருந்தார்.

இவரின் இறுதிக் கிரியைகள் இன்று பிற்பகல் துன்னாலையில் நடைபெறும் (ந)

## ஜனாதிபதி வேட்பாளர் மகிந்த ராஜபக்ஷவே

(கொழும்பு)

ஆளும் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

எதிர்வரும் ஆண்டில் நடைபெறவுள்ளதாக கூறப்படும் ஜனாதிபதி தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டியிடுவதற்கு தடையில்லை என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புகவெல்ல தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு எதிராக எந்தத் தரப்பினரும் சவால் விடுக்க முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், இந்த சவால்களுக்கு அரசாங்கம் அஞ்சப் போவதில்லை.

ஜனாதிபதி மூன்றாம் தவணைக்காக போட்டியிடுவது குறித்து தேவை ஏற்பட்டால் சட்ட ஆலோசனைகள் பெற்றுக்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தள்ளார்.

ஜனாதிபதி மகிந்த தேர்தலில் போட்டியிட முடியும் என பெரும் எண்ணிக்கையிலான சட்ட வல்லுனரகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மூன்றாம் தவணைக்காக போட்டியிட முடியாது என முன்னாள பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவர் விஜயதாச ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மகிந்த வேட்பாளராக அறிவிக்கப்பட்டால் அதற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக ஜே.வி.பியும் அறிவித்துள்ளது. (செ-11)

## தமிழரசுக்கட்சியின் இளைஞர் அணி தேசியமாநாடு

(யாழ்ப்பாணம்)

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் தேசிய மாநாடு 40 ஆண்டுகளின் பின்னர் நாளை சனிக்கிழமை வவுனியா கலாசார மண்டபத்தில் பிற்பகல் 2.00 மணிக்கு கட்சியின் இளைஞர் அணியின் செயலாளர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் இளைஞர் அணியின் செயலாளர் சிவகரன் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கபட்டுள்ளதாவது,

தமிழ்த் தேசிய அரசியலின் எதிர்கால அரசியல் இருப்புநிலையை தக்கவைக்கும் நோக்கிலும் இளையோரின் கருத்தியலை ஒப்புவிக்கும வகையிலும் இனமானம் காக்க இளையோரே எழுக எனும் தொனிப் பொருளில் மாநாடு நடைபெறவிருக்கின்றது. இம் மாநாட்டில் பங்குபெற விரும்புவோர்கள் தங்களது மாவட்ட இளைஞர் அணியுடன் தொடர்பு கொள்ளுமாறும்,

இம்மாநாட்டில் கூட்டமைப்பின் கட்சித தலைவர்கள்உட்பட ஆயிரக்கணக்கானவர்கள்கலந்துகொள்ளவுள்ளனரா என்பதும் குறிப்பிடத்தக்கது. (செ-6)



பாஜக தலைவர்களின் ஒருவரான சுப்பிரமணியன் சுவாமி மீனவர்களுக்கு எதிராக கருத்து தெரிவித்திருந்தமையை கண்டித்து தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம் சார்பில் சென்னையில் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

## தமிழருக்கான வெளி...

யாற்றுகையில்,

எங்களுடைய மேன்மை தங்கியின் அமெரிக்கத்தூதரக அதிகாரி அன்ருமான் இங்கு வந்திருப்பது எங்களுக்கு மகிழ்ச்சினை தருகின்றது. அமெரிக்கா எங்களுக்கு பல விதத்திலும் உதவிகளை செய்து வருகின்றது. யூவசேட் நிறுவனம்எங்களுக்கு பலவித்திலும் பலவிதமான நன்மைகளை பலவருட காலமாக தந்து கொண்டு இருக்கின்றார்கள்.

நான் அரசியலுக்கு வருவதற்கு முன்னரே அவர்களுடன் சேர்ந்த பலவிதமான செயற்றிட்டங்களிலே பங்குபற்றியிருந்தேன். சட்டத்தரணிகள், நீதிபதிகளுக்குப் பயிற்சிகளும், வேறு பலருக்கு சட்டம் சம்மந்தமாக பயிற்சிகளைக் கொடுப்பதற்கு நான் அவர்களுக்கு உதவிகளைச் செயது கொண்டிருந்தேன்.

இன்று அவர்கள் வேறு விதமான உதவிகளை மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றார்கள். பலவருட காலமாக காக்கைத்தீவுப் பக்கம் வந்தால் துர்நாற்றம் வீசிக் கொண்டிருக்கும். ஏனென்றால் இந்த இடத்திலே பலவிதமான மீன்களின் துர்நாற்றம் எந்த நேரமும் வந்து கொணடிருக்கும்.

ஆனால் இப்பொழுது அதனை நன்றாக சுத்தப்படுத்தி அழகாக வைத்துள்ளீர்கள். அதற்கு ஒரு காரணம் பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் கூறியதைப் போன்ற கடற்கரையோரத்தில் ஒரு அணை ஒன்றினைக் கட்டியிருந்த காரணத்தினால் பலவிதமான அழுக்குப் பொருட்கள் தேங்கி இருந்தும் துர்நாற்றம் வீசாமல் இருக்கின்றது.

தமிழ் மக்களாகிய நாங்கள் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள், போர்பாதிப்புக்களில் இருந்து விடுபட எமக்கு பலவிதமான நன்மைகள் வந்து சேர வேண்டிய தேவை உள்ளது. அவ்வாறான நன்மைகளை தமிழ் மக்களுக்கு நல்குவதற்கு வெளிநாடுகளில் இருந்து பலர் முன்வந்துள்ளார்கள்.

அவ்வாறு வெளிநாட்டில் இருப்பவர்கள் எங்களுக்கு நனமைகளை புரியும் போது, வெளிநாட்டில் இருப்பவர்கள் தமிழர்களுக்கு நன்மை புரிகின்றார்கள். ஏன் தெற்கு மக்களுக்கு நன்மை புரிகின்றார்கள் இல்லை என்றெல்லாம் சில விமர்சனங்கள் எழுவது மனத்திற்கு மிகுந்த வேதனையினை கொடுக்கின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்குத்தான நன்மைகள் தேவை. மற்றவர்களுக்கு அல்ல. ஆகவே பாதிக்கப்பட்ட தமிழ் மக்களாகிய எங்களுக்கு அமெரிக்க மக்களால் பலவிதமான நன்மைகளைதரும்பொழுது, அதனை நாங்கள் கையேற்கும் போது, அதற்கு எந்தவிதமான அரசியல் நிறங்களையும் பூசி அந்நலங்களை கொசசைப்படுத்தாமல் இருக்க வேணடும். இந்த அரசாங்கத்தோடு சம்மந்தப்பட்ட சிலருக்கு நான் கூறிவைக்க விரும்புகின்றேன்.

ஆனால் இன்றைய (நேற்று) தினம் மக்களுக்கு நன்மையினை தரக்கூடிய விதத்தில் அவர்கள் இந்த சந்தைக் கட்டடத்தினை கட்டித்தந்துள்ளார்கள். அத்துடன் வேறு பல நன்மைகளையும் அவர்கள் மக்களுக்கு வழங்கியுள்ளார்கள் என அவர் தெரிவித்தார். (செ-4)

## விக்னேஸ்வரன் - மோடி...

கூறினார்.

இலங்கை அரசியல் யாப்புக்கு அமைய உயர்பதவி வகிக்கும் அரச் அதிகாரிகள் வெளிநாடு செல்லும் போது அரசிடம் முன் அனுமதி பெற்றுக்கொள்வது அவசியமென்று தெரிவித்த ரம்புக்வெல்ல, மாகாண அமைச்சரொருவர் வெளிநாடு செல்லும்போது அவர் முதலமைச்சருக்கு அறிவிக்க வேண்டுமென்று தெரிவித்தார்.

அதே போலவே மாகாண முதலமைச்சர் வெளிநாடு செல்லும் போது அதற்கான அறிவித்தலை மாகாண ஆளுநரிடம் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் கூறினார் அமைச்சர் ரம்புக்வெல்ல.

வட மாகாண முதலமைச்சர் இவவாறான வேண்டுகோளொன்றை சமர்ப்பித்தால் எடுக்கப்படவுள்ள தீர்மானம் குறித்து கேட்டபோது அதனை தற்போது கூறமுடியாது என்று பதிலளித்த ரம்புக்கவெல்ல அதற்கான வேண்டுகோள் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அதுகுறித்து ஆராய்ந்து தகுந்த தீர்மானம் எடுக்கப்படும் என்று தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர் இந்திய பிரதமரை சந்தித்து பேசசுவார்த்தைகள் நடத்தியமை சம்பநதமாக இலங்கை அரசுக்கு எந்தவிதமான சிக்கலும் இல்லை என்று கூறிய அமைச்சர் இந்திய பிரதமரின் நிலைப்பாடு தொடர்பாக அரசாங்கம் தெளிவாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்திய பிரதமருடன் நடைபெற்ற பேசசுவார்த்தைகளின்போது அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிப்பதற்கான அவசியம் வலியுறுத்தப்பட்டுள்ளமை சம்பந்தமாக கேட்ட போது, தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்க முடியுமென்று கூறிய அமைச்சர் ரம்புக்வெல்ல அதற்கு முன்,

13 ஆவது அரசியல் திருத்த சட்டம் தொடர்ப்பாக நாடாளுமன்றத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்வுக் குழுவில் மாத்திரமே இந்த பேச்சுவார்த்தைகள் நடத்த முடியுமென்றும் தெரிவித்தார்.

வடமாகாணசபை உருவாக்கப்பட்ட பின்னர் அந்த மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் வீழ்ச்சியுடைந்துள்ளதாகவும் அமைச்சர் குற்றம்சாட்டியுள்ளார. (செ-11)

## நிலக்கடலை பிரித்தெடுக்கு...

பணச்செலவையும் கருத்தில் கொண்டே நிலக்கடலை பிரித்தெடுப்பு இயந்திரங்கள் முல்லையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு ஏக்கரில் பயிரான நிலக்கடலைகளைக் கைகளினால் பிரித்தெடுப் பதற்கு ஆகும் கூலிச் செலவு 15 ஆயிரம் ரூபாயாக இருக்கும் நிலையில், இதே அளவு நிலக்கடலைகளை இயந்திரத்தின் மூலம் பிரித்தெடுப் பதற்கு ஆகும் செலவு 4 ஆயிரம் ரூபா மாத்திரமே.

அத்தோடு, ஒரு நாளில் இயந்திரத்தின் மூலம் இரண்டு ஏக்கர் அளவில் பயிரான நிலக்கடலைகளைப் பிரித்தெடுக்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜெய்க்கா நிறுவனம் ஜப்பானில் இருந்து தருவித்து மூன்று பிரித்தெடுப்பு இயந்திரங்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. முல்லைத்தீவு மாவட்டத்திலேயே நிலக்கடலைகள் அதிகளவில் பயிர் செய்யப்படுவதால் முல்லைமாவட்டத்துக்கென இரண்டு இயந்திரங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன் றின் பராமரிப்புப் பொறுப்பு முல்லை மாவட்ட விவசாயத்திணைக்களத் திடமும் மற்றையதைப் பராமரிக்கும் பொறுப்பு முல்லைமாவட்ட ஒன் றிணைந்த பண்ணையாளர்கள் சிக்கனக்கடன் கூட்டுறவுச் சங்கத்திடமும் கையளிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் அதனைப் பராமரித்து விவசாயிகளுக்குச் சேவையை வழங்கும் பொறுப்பு வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாதவளசிங்கன் குளப்பகுதியில் நடைபெற்ற நிலக்கடலைகளைப் பிரித்தெடுக்கும் இயந்திரங்களின் அறிமுக நிகழ்ச்சியில் வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனோடு வடமாகாணசபை உறுப்பினர் து.ரவிகரன, அமைச்சின் செயலாளர் யு.எல்.எம் ஹால்தீன், மாகாண விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார், பிரதி விவசாயப் பணிப்பாளர் தெ.யோகேஸ்வரன், ஜெய்க்கா நிறுவனத்தின் பிரதிநிதி ஒய்சுமி ஆகியோரும் நிலக்கடலை உற்பத்தியாளர்களும் கலந்துகொண்டிருந்தார்கள். (எ-11)

## மண்டைதீவு திருவெண்காட்டில் இன்று

(மண்டைதீவு)

மண்டைதீவு திருவெண்காட்டுச் சித்திவிநாயகர் ஆலய 7-ம் திருவிழா ஆகிய இன்று இரவு 7.30 மணிக்கு விநாயகரின் வடிவத்தின் தத்துவம் எனும் பொருள்பற்றி சைவப் புலவர் கந்தசக்திதாசனின் தெய்வீக உரையும் இடம்பெறும். (ந)

## கோண்டாவி...

ர்ந்து, கோப்பாய் பகுதி இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு வருகை தந்து; கைக்குண்டினை மீட்டுச் சென்றுள்ளனர்.

கோண்டாவில் இந்து கல்லூரிக்கு பின்புறமாக உள்ள கிணற்றுப் பகுதியிலிருந்தே பழைய கைக்குண்டே மீட்கப்பட்டுள்ளது. (செ-11)

## சர்வதேச விசாரணை...

முகம் கொடுக்க நான் தயங்க மாட்டேனென்று கூறிய அவர், இலங்கை இராணுவம் போர்க் குற்றங்களில் ஈடுபடவில்லை என்று நிரூபிக்க தான தயாரென்றும் தெரிவித்தார்.

எனவே சர்வதேச விசாரணைக் குழுவுக்கு இலங்கைக்குள் பிரவேசிப்பதற்கு அனுமதி வழங்கமாட்டோம் என்று அரசாங்கம் கூறியுள்ள கருத்தை தனக்கு ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச விசாரணைக்கு முகம கொடுக்க அரசாங்கம் தயக்கம் காட்டி வருவது ஏன் என்று கேள்வி எழுப்பிய சரத் பொன்சேகா, குற்றச் செயலகளில் ஈடுபட்டோர் மாத்திரமே இவ்வாறு தயக்கம்கட்டுவதாக தெரிவிததார்.

மேலும் கருத்துக்களை தெரிவித்த முன்னாள் இராணுவத் தளபதி சர்வதேச விசாரணையின் போது சாட்சியமளிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டால் தான் அதனை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தார்.

இந்த விசாரணையின் போது சாட்சியங்களை வழங்கும் நபர்கள் அதற்கான பிரதிபலன்களை முகம் கொடுக்க நேரிடுமென அரசாங்கம் ஏற்கெனவே அறிவித்துள்ளது.

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூட அண்மையில் இவ்வாறான கருத்தை முன்வைத்திருந்தார்.

ஆயினும் இராணுவம் எந்தவிதமான குற்றச் செயல்களிலும் ஈடுபடவில்லை என்று கூறிய சரத் பொன்சேகா அதனை நிரூபிப்பதற்காக தான் எந்தவொரு விசாரணைக்கும் முகம்கொடுக்க தயாரென்றும் தெரிவித்தார். (செ-11)

## ஜனாதிபதி தேர்தல் சர்...

வும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது என்பதே அப்புதிய கருத்தாகும்.

18 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்னதாகவே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தன்னுடைய இரண்டாம் காலத்தை ஆரம்பித்து விட்ட காரணத்தினாலே, அவர் ஆரம்பித்த வேளையிலே, அது அவருடைய இரண்டாம் பதவிக்காலத்தின் இறுதியாக மட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அதற்குப் பின்னர் வந்த சட்டத் திருத்தத்தின் பிரகாரம் அவர், இம்முறையுள்ள தேர்தலில் போட்டியட முடியாது என்ற ஒரு சட்டப் பிரச்சினையை இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் கிளப்பியிருக்கின்றார்.

அவரது கருத்தை ஆராய்ந்து பார்த்தால், சட்டத்தின் பிரகாரம் அது நதியானதாகவே காணப்படுகின்றது. 2010ஆம் ஆண்டு ஜனவரி மாத காலத்தில் 18-வது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்படவில்லை.

ஆயினும், தற்போது இச்சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதன் காரணத்தினால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட முடியாது.

இருந்தும் இப்படியானதொரு கருத்தை 3 வருடங்களுக்கு பிறகு முன்வைத்தமைக்கான காரணம் என்ன என்ற சந்தேகமும் எம்மில் எழுந்துள்ளது. இதை இந்நேரத்தில் தெரிவிப்பது யாருடைய தேவையாக இருக்கும்.

தற்போதுள்ள ஜனாதிபதி பதவியில் உள்ளவரை நீக்கிவிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னிணியில் இருக்கும் வேறொருவரை தேர்தலில் போட்டியிட வைப்பதா? இல்லையேல் ஜாதிக ஹெல உறுமயவில் உள்ளவர்கள், சரத் சில்வாவை இவ்வாறு கூறுமாறு தூண்டி விட்டனரா? அதுவும் இல்லையாயின் குடும்பத்துக்குள்ளேயே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கொடுத்த வாய்ப்பு போதும். குடும்பத்துக்குள் வேறு யாராவது போட்டியிடலாம் என்ற எண்ணம் இருக்கின்றதா? என்ற சந்தேகமும் எழுகின்றது என சுமந்திரன் தெரிவித்தார். (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEC

பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி

மணிக்கூட்டு வீதி,யாழ்நகர்.

**A/L 2016**
**A/L 2015**

கலை, வர்த்தக, தொழில்நுட்ப

புதிய பிரிவுகள் ஆரம்பம்:

ஆரம்ப அலகில் இருந்து கற்பிக்கப்படுகின்றது. ச-8410

06-09-2014 சனி காலை 9.00 மணி



2 மணித்தியாலத்தில்

# கணினி திருத்தம்

உங்கள் வீடுகளுக்கும் வந்து கணினிகள் திருத்தி தருகிறோம் அழையுங்கள்

0779086737 Computer Repair

GUNAA BEST PC 52, Hospital Road Jaffna.


## தற்கொலை...

உலகில் அதி களவு தற்கொலைகள் இடம்பெறும் நாடுகளின் வரிசையில்கயானா முதலாம் இடத்தை வகிக்கின்றது. கயனாவில் 100,000 பேரில் 44.2 பேர் தற்கொலை செய்துகொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. வடகொரியா மற்றும் தென் கொரியா ஆகிய நாடுகள் இரண்டாம் மூன்றாம் இடங்களை வகிக்கின்றன.

வடகொரியாவில் ஒரு லட்சம் பேரில் 38.5 பேர் தற்கொலை செய்து கொள்வதாகவும் தென்கொரியாவில் ஒரு லட்சம் பேரில் 28.9 பேர் தற்கொலை செய்து கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. இலங்கையில் ஒரு லட்சம் பேரில் 28.8 பேர் தற்கொலை செய்து கொள்வதாகக் குறிப்பிடப்படுகிறது.

உலகின் மிக முக்கியமான சுகாதாரப் பிரச்சினைகளில் ஒன்றாக தற்கொலைகள் மாற்றமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நஞ்சு அருந்துதல், தூக்கிடுதல் மற்றும் துப்பாக்கிச் சூடு போன்ற வழிகளின் மூலம் அதிகளவில் தற்கொலைகள் இடம்பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலகில் அதிகளவில் தற்கொலை செய்து கொள்வோர் ஆண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)


**சவுதி ராஜ்ஜியத்தில் உள்ள முன்னணி நிறுவனம் ஒன்றில் அதியுயர் சம்பளத்துடன் கீழ்க்காணும் வேலைவாய்ப்புகள் உடனடியாக காணப்படுகின்றன**

| | | |
|---|---|---|
| Finishing Carpenters | 33 | 1000-1500+OT |
| Electrician | 35 | 900-1400+OT |
| Plumbers | 36 | 900-1400+OT |
| Forman | 04 | 1900-2200+OT |
| Painters | 03 | 1000-1400+OT |
| Tiles setters (Meson) | 01 | 1000-1400+OT |
| Meson | 01 | 1000-1400+OT |
| Store Keeper ware house | 01 | 1400-1800+OT |
| Maintenance Helper | 10 | 800-950+OT |

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம். கைவசம் வீசா உள்ளதால் இரண்டே வாரத்தில் பயணம்

**இடம்:- உதயன் விருந்தினர் விடுதி**
**No.20, கன்னாதிட்டி வீதி, காளி கோவிலடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
**காலம்:-எதிர்வரும் 07ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: காலை 9.00 மணி தொடக்கம்**
**பிற்பகல் 2.00 மணி வரை**

கடவுச் சீட்டு, புகைப்படங்கள், சுயவிபரக் கோவை முதலிய ஆவணங்களுடன் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். (C-8413)

**உடன் தொடர்பு கொள்ள**

Lanka Voice-Jaffna 0779527575
Lanka Voice-Mannar. Vavuniya. 0766697789

# ARABIAN GULF ENTERPRISES

No-72/ 26, Srisangarajamawatha Colombo-10.
Reg.No.969



A/L 2015 LOGIC
பிரத்தியேக வகுப்பு
அளவையியல் ஆசிரியர்
**திரு.சு.சயந்தன்**
(B.A, MED)

அலகு:- நவீன அளவையியல்
ஆரம்பம்:-06.09.2014
(சனிக்கிழமை) பி.ப 3 மணி
**இடம்:-புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.** (7546)


## வாகன...

செல்லப்பட்டனர்.

இதில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார். எனினும் சிகிச்சை பலனளிககாது அங்கு அவர் உயிரிழந்தார் எனத தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் கைதடி எரிபொருள நிலையத்தில் பணிபுரியும் கைதடி கிழக்கைச் சேர்ந்த இந்திரன் வாகீசன் (வயது 20) என்பவரே உயிரிழந்தார். நாவற்குழி கிழக்கைச் சேர்ந்த யோகராஜா பிரசாந்த் (வயது 20) என்பவர் காயமடைந்தார். (செ-11)


**INFORMATION TECHNOLOGY PARK**
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building,
127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.

**SEPTEMBER BATCH**

- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

**Online Course**

- Dip.in PC Application & Office Management

**Languages**

VB.Net PHP C Sharp Java

**Workshops**

- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் - 19-09-14
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம - 20-09-14

CENTRE FOR INFORMATION TECHNOLOGY

-Executive Officer- (c-8409)



# தென்னிந்திய யாத்திரை

**நாட்கள் 12 யாத்திரீகர் 10 ஆரம்பம் 10.09.2014**

மலைக்கோட்டை விநாயகர், பஞ்சபூதத் தலங்கள், ஆறுபடை வீடுகள், இராமேஸ்வரம், திருப்பதி, நவக்கிரக ஆலயங்கள், மேல் மருவத்தூர், அழகர்கோவில், பொற் கோவில், மீனாட்சி, சுந்தரேஸ்வரர், நவபாஷணம், ஸ்ரீரங்கம், தஞ்சாவூர், சமயபுரம், பார்த்தசாரதி, மாங்காடு, திருவேற்காடு, வெக்காளி அம்மன், தன் வந்திரி விஷ்ணு, இரத்தின கிரிமுருகன், திருகடையூர், சக்தி அம்மன்,வலம்சுழி விநாயகர், பிரித்திவிலிங்காதேவி, சென்னை சீரடிபாபா, ஐயப்பசுவாமி, உப்பிலியப்பன், அலமேலுமங்கா உட்பட 45 இற்கும் மேலான ஆலயங்களை தரிசிக்கலாம். எமது யாத்திரையில் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு வரவும். யாத்திரை முடிய கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பிச் செல்லவும் எமது செலவில் வாகன வசதி செய்து தரப்படும். அத்துடன் யாத்திரையின் போது ஆலயங்களில் எடுக்கும் 40 இற்கு மேற்பட்ட புகைப்படங்கள் இலவசமாக வழங்கப்படும்.

(புறப்படும் திகதியில் மாற்றம் வரலாம்)

விமான ரிக்கற், மூன்று வேளை உணவு, தரமான தங்கு மிடம், AC வாகன வசதி, குடிநீர், எயார் போட் போக வர வாகன வசதி உட்பட விபரங்கட்கு:

**கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்**

T.P: 0777680102, 0113030806 தொடர்பு கொள்க. (C-8405)



**கட்டார் நாட்டின் முன்னணி நிலையங்களில் அதி உயர் சம்பளத்துடன் உடனடி வேலைவாய்ப்பு!**

| | |
|---|---|
| Driver-Camco International School | Qr.1200+Accommodation |
| Driver-Heavy (GCC Valid Licence) | Qr.2000+OT |
| Graden Helper | Qr.1000+OT (Age 30-55) |
| Furniture Carpenter | Qr.1300+OT+Food |
| Super Market & Hospital Cleaner | Qr.800+OT |
| Meson | Qr.1300+OT |
| Plumber | Qr.1300+OT |

தங்குமிடம் மருத்துவம் என்பன முற்றிலும் இலவசம்.

**இடம்:- உதயன் விருந்தினர் விடுதி**
**No.20, கன்னாதிட்டி வீதி, காளி கோவிலடி ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**
**காலம்:-எதிர்வரும் 07 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை**
**நேரம்: காலை 9.00 மணி தொடக்கம்**
**பிற்பகல் 2.00 மணி வரை**

ஆவணங்கள்:- கடவுச்சீட்டு, புகைப்படங்கள், சுயவிபரக்கோவைகளுடன் உங்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

**உடன் தொடர்பு கொள்ள:-**

Lanka Voice-Jaffna 0779527575
Lanka Voice-Mannar. Vavuniya. 0766697789 (C-8413)

# Capital Recruitment International (Pvt) Ltd

**No.130 3/1, Grand Pass, Colombo-14.**
L/L.No.2248



சந்நிதியின் அருளால் ஆரோக்கியம் தழைக்கட்டும்



**மாபெரும் அறிமுக விற்பனை**

Sylo ICE CREAM



பால், வெண்ணை, தேன், பாதாம், பிஸ்தா, முந்திரி, திராட்சை, அத்திப்பழம் போன்ற இயற்கையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த புதிய தலைமுறை அம்சங்களுடன், TCT, Preser Vative இரசாயனங்கள் சேர்க்காமல் அதிஉயர் தொழில் நுட்ப முறையில் உங்கள் ஆரோக்கியத்தின் மீது அக்கறையுடன் தயாரிக்கப்படும் ஐஸ்கிறீம் வகைகள் அறிமுகவிலையில்!

Hot Line:-0777710785
Phone:-021 221-2003

சந்நிதியின் கோவில் முன்புறம்
எமது விற்பனை நிலையத்தில் பெற்றுக் கோள்ளலாம்
(வாடிக்கையாளர் அனைவருக்கும் கந்தசஷ்டி கவசம் இலவசமாக வழங்கப்படும்)




(7548)

Factory
இல.76 அம்மன் கோவில் வீதி
கொக்குவில் கிழக்கு.யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.09.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.